Sri A. VEDARATHNAM : நம்முடைய மாநிலத்தில் சோழ மண்டலக் கரை அடிக்கடி புயலினுல் பாதிக்கப்படுகிற காரணத்தால் அந்த மக்களைப் பாதுகாப்பதற்காகவாவது, இப்போது மத்திய சர்க்காரால் ஏற்படுத்த இருக்கும் புயல் அறிவிப்பு கருவியை (Storm deketing radar) சோழ மண்டலத்தில் மையமாக இருக்கக்கூடிய பிரதேசத்தில் ஏற்படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்போது ஏற்படுத்த இருப்பது மீனம்பாக்கத்தில். இதை மாற்றுவதற்கில்லை. இன்னென்று வைப்பதாக இருந்தால் யோசிக்கலாம்.

Mr. SPEAKER : I think the next two questions, viz., question Nos. 89 and 90 may be taken up together.

The Hon. Sri V. RAMAIAH : Sir, I would like these two questions to be postponed as I wish to give revised answers.

Mr. SPEAKER : I have no objection. These two questions are postponed. Questions are over.

° **Note :—An starisk at the commencement of a speech indicates rov'sion by the Ministers.**

II – MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET FOR 1959–60.

Mr. SPEAKER : We shall now take up the discussion on the Madras State Electricity Board Budget for the year 1959–60. The discussion will go on for two days. The Hon. the Leader of the Opposition will speak tomorrow before the Hon. Minister's reply. To-day, the hon. Member Sri N. K. Palanisami will lead the discussion.

Does the Hon. Minister want to make any speech now?

The Hon. Sri V. RAMAIAH : No, Sir.

Mr. SPEAKER : All right then. Sri Palanisami may now speak.

Sri N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் இந்த மின்சார விஷயத்தில் எடுத்துவரும் நடவடிக்கையை யாரும் பாராட்டாமல் இருக்கமுடியாது. அதே சமயத்தில் நம்மிடத்தில் திறமையான இன்ஜினியர்கள் இருப்பதன் காரணமாக பல திட்டங்களை குறித்த நேரத்தில் குறித்தபடி நிறைவேற்றியும் வருகிறோம். ஆனாலும் அதில் இருக்கக்கூடிய குறைபாடுகளை நாம் சரியானபடி நீக்குவதற்கு முயற்சி செய்தால் இன்னும் முன்னேற்றகரமான முறையில் நாம் பல காரியங்களைச் செய்யமுடியும்.

போன ஜனவரி மாதம் வரவுசெலவுக் கணக்கைச் சமர்ப்பித்தபோது நமக்கு நஷ்டம் 45 லட்சம் எதிர்பார்ப்பதாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு தொழிலாளர்களுக்கு அதிகப்படியாக சம்பளம் கொடுத்ததன் காரணமாக அதற்காக மேலும் 53 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. ஆகவே மொத்த நஷ்டம் 98 லட்சம் ரூபாய் என்று சொல்லலாம். ஆனால் இரண்டு மாதத்தில் 7 லட்சம் லாபம் என்று கொடுக்கப்பட்டிருப்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதை விளக்கவேண்டும்.

ஜனவரி மாதத்தில் வரவு செலவு திட்டத்தில் குந்தா விஷயத்தில் 45 லட்சம் ரூபாய் என்று சொல்லப்பட்டது. ஆனால் இந்த இரண்டு மாதத்தில் அது எப்படி செலவழிக்கப்பட்டது என்ற கணக்கு விவரம் நம்மிடம் இல்லை. இன்வெஸ்டிகேஷன் செலவு காபிடல் செலவில் செய்யப்படுகிறது. உதாரணமாக ஒரு திட்டம் போடும்போது அதற்கு என்ன செலவாகும் ? சர்க்காருக்கு அதனால் என்ன லாபம்என்பதான ஆரம்ப ஆராய்ச்சிச் செலவை

[Sri N. K. Palanisami] [22nd April 1959

காபிடல் செலவினத்தில் செய்யப்படுகிறது. இந்த திட்டங்களைப்போடும்போது வருஷா வருஷம் பவர் எக்ஸ்டென்ஷன் பண்ணிக்கொண்டு வருகிறோம். அதன் மூலமாக சர்க்காருக்கு வருமானம் வருகிறது. அந்த வருமானத்தை எடுத்து இந்தச் செலவைச் செய்யலாம். அதை விட்டு காபிடல் செலவில் அது செய்யப்படுவதனால் ஏற்கெனவே ஸ்தாபிக்கப்பட்டு தொழில் பண்ணிக்கொண்டிருக்கிற மின் நிலையங்களை விஸ்தரிக்கப் பணமில்லாது போகிறது. குறிப்பாக மெட்ராஸ் பேஸின் திட்டம் இருக்கிறது. அது சென்ற 6 மாதத்திற்குள் 2 மாத காலம் ஓடவில்லை. கெட்டுப்போன டர்பைன் எடுத்து வைக்கவில்லை. ஆகவே காபிடல் செலவில் இன்வெஸ்டிகேஷன் செலவைப் போடாவிட்டால் இவைகளை எல்லாம் செய்யமுடியும். அதோடு 1958-59–ம் வருஷத்திற்கு 18 கோடி ரூபாய் எஸ்டிமேட் கொடுக்கப்படுகிறது. வரவு 11 கோடி என்று இருக்கிறது. 1956, 1957-1958 ஆகிய மூன்றுக்கும் மொத்தமாக 14 கோடி என்றுதான் வந்திருக்கிறது. ஆகவே இவற்றையெல்லாம் சேர்த்தால் 30 கோடி என்று வருகிறது. ஆனால் 11 கோடி என்று சொல்வது என்ன என்று தெரியவில்லை. ஒரு சமயம் ப்ளானிங் கமிஷன் 11 கோடிக்கு மேல் செலவழிக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை உத்தேசித்து இந்தக் கணக்குப் போட்டிருக்கிறார்களா என்றும் தெரியவில்லை. அதோடு 17 கோடி வரவு என்று இருக்கிறது. இதையெல்லாம் சேர்த்தால் கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய்க்குமேல் சர்க்காருக்கு கிடைக்கும். ஆனால் 17 கோடி ரூபாய்
1-40 p.m. என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே சர்க்காரிடம் ஸ்பெஷல் ரிஸர்வ் பண்ட் 12 கோடி ரூபாய் இருக்கிறது. ரிசர்வ் பண்ட் 25 கோடி ரூபாய் இருக்கிறது. இன்வெஸ்ட்மெண்டில் ஏராளமான பணம் இருக்கிறது. இப்படி இருக்கும்போது ஒவ்வொரு வருஷமும் 5-1/2 பர்சன்ட் வட்டிக்கு ஏன் கடன் வாங்கவேண்டும்? மத்திய சர்க்காரிடமிருந்து 4 1/2 பர்சன்டுக்கு வாங்க முயற்சி செய்தார்களா என்று தெரியவில்லை. வருஷா வருஷம் கொடுக்கவேண்டிய கடனுக்கு வட்டிக்கு வட்டி (காம்பவுண்ட் இன்டரஸ்ட்) போட்டு வாங்குவது சரியாகாது. இதை 4 1/2 பர்சன்ட் ஆகக் குறைக்க மத்திய சர்க்காரோடு வாதிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயத்துக்கு ஹைடென்ஷன் கரண்ட் அவசியம். விவசாயிகளுக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கொடுக்கவேண்டியது மிகவும் அவசியம். உதாரணமாக சர்க்காருக்கு ஹைடென்ஷன் கரண்ட் மூலமாக வரக்கூடியதை எடுத்துக்கொண்டால் "டொமஸ்டிக் கன்சம்ப்ஷன்" 10 பர்சன்ட், அதாவது கிட்டத்தட்ட 1,14,84,000 ரூபாய் கிடைக்கிறது. அதில் 100-க்கு 50 ஹைடென்ஷன் கரண்டாகச் செலவு செய்யப்படுகிறது. அதிலிருந்து 28 லட்ச ரூபாய் கிடைக்கிறது. விவசாயத்துக்கு 20 பங்கு கொடுக்கப்படுகிறது. வருமானம் 30 லட்சம். ஆகவே அதிகப்படியாக சர்க்கார் ஹைடென்ஷன் கரண்டாகச் செலவு செய்கிறது. பம்பாயை எடுத்துக்கொண்டாலும் சரி, கல்கத்தாவை எடுத்துக்கொண்டாலும் சரி அதிகப்படியாக ஹைடென்ஷன் கரண்டாக நிர்ணயம் செய்கிறார்கள். இருபது பங்கு விவசாயிகளுக்குக் கொடுத்துவிட்டு 30 லட்சம் ரூபாய் வசூல் செய்யும் அதே நேரத்தில் ஏன் அவர்களுக்கு கட்டணத்தைக் குறைக்கக் கூடாது? ப்ளான்டேஷன் பெரிய தொழில். விவசாயத்துக்கு கொடுக்கக்கூடிய கரண்ட் சார்ஜைக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது 620 பெரிய ஆபீசர்கள் இருக்கிறார்கள். அது போக மாதம் 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கக்கூடிய ஆபீசர்கள் 1,500 பேர் இருக்கிறார்கள். 2,000 எஞ்சினீயர்கள் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் 30,000 பேர் இருக்கிறார்கள். பதினைந்து தொழிலாளர்களுக்கு ஒரு

22nd April 1959] [Sri N. K. Palanisami]

எஞ்சினீயர் வீதம் இருக்கிருர்கள். அந்த மாதிரி 15 பேருக்கு ஒரு எஞ்சினீயர் அவசியந்தாஞ? வேறு எந்த மாகாணத்திலாவது 15 பேருக்கு ஒரு என்ஜி னீயர் வீதம் வைத்து வேலே வாங்கக்கூடிய நிலேமை இருக்கிறதா? இந்த மாதிரி ஆகக்கூடிய செலவைக் குறைக்கவேண்டும். இந்த என்ஜினீயர்கள் புதிய, பெரிய வேலேகளேக் கவனித்துக் கொள்ளவேணடும். சாதாரண வேலே களே சூபர்வைசர்களால் செய்ய முடியும். முக்கியமான காரியங்களேச் செய்வ தற்கு மாத்திரம் எஞ்சினீயர்களே நியமித்துவிட்டு சாதாரண வேலேகளே செய்ய சூபர்வைசர்களே உபயோகிக்கவேண்டும். இப்படிச் செய்தால் பணம் மிச்ச மாகும். குந்தாத் திட்டத்தின் வேலே சென்னே சீப் எஞ்சினீயர் அவர்களின் கீழ் நடக்கிறது. ஒரு மாதத்திற்கு ஒரு முறை அவர் இங்கே வந்து பார்வை யிட்டு விட்டுச் செல்லுவதை விட இங்கே தனியாகவே ஒரு எஞ்சினீயரைப் போட்டால் நலமாக இருக்கும். இதனுல் ட்ராவலிங் அலவன்ஸ் போன்ற அனுவசியச் செலவுகளேத் தவிர்க்க முடியும். முக்கியமாக இந்தப் பவர் ஏற்படுவதன் அடிப்படையான கொள்கை "The object is to plough back the profit into the industry" என்று இருக்கிறது. இந்தக் கொள்கை எந்த அளவுக்கு நிறைவேறி இருக்கிறது என்று தெரியவில்லே. ஒரு பக்கம் பார்க்கிறபோது மேலும் ஆகக்கூடிய செலவைக் குறைக்கக்கூடிய வழி இருக் கிறது. குந்தாத் திட்டத்தின் பூரா வேலேயும் காண்ட்ராக்டுக்கு விடப்பட்டிருக் கிறது. காண்ட்ராக்டின் மூலம் 9,000 ரூபாய் செலவு செய்து கட்டக்கூடியதை அவ்வாறு காண்ட்ராக்டுக்கு விடாமல் சர்க்காரே நேரடியாகச் செய்தால் 3,000 ரூபாயில் கட்ட முடியும். சிமெண்ட், மற்ற இயந்திரங்கள் எல்லாம் கொடுத்து ஏன்காண்ட்ராக்டுக்கு விடவேண்டும்? இதன் மூலமாக 50பங்கு பணம் காண்ட் ராக்டர்களுக்கு லாபமாகப் போய்விடுகிறது. சர்க்காரே டிபார்ட்மெண்டு மூல மாக ஏன் இதைச் செய்யக்கூடாது? "தனிப்பட்டவர்களிடம் கொடுத்தால் தான் வேலே சீக்கிரமாக நடைபெறும்" என்று சர்க்கார் சொல்லலாம். தனிப்பட்டவர்களிடம் விடுவதால் வேலே வேகமாக நடைபெறலாமே தவிர "க்வாலிடி" மோசமாகத்தான் இருக்கும். இந்த மாதிரி காண்ட்ராக்டர் களுக்கு விடுவதால் சர்க்காருக்கு வீண் விரயந்தான் ஏற்படுகிறது. இந்த வேலேகளே யெல்லாம் கூடுமான அளவு சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும். "ஹை மெஷினரிகள்" எல்லாம் சப்ளே செய்து ஏன் காண்ட்ராக்டர்களிடம் விடவேண்டும்?

கடைசியாக, தொழிலாளர்களுக்கும் சர்க்காருக்கும் ஏற்பட்ட சுமுகமான உறவை நான் வரவேற்கிறேன். ஆனுலும் 1958 பிப்ரவரி மாதம் நடந்த வேலே நிறுத்தத்தின் காரணமாக பல தொழிலாளர்கள் நீக்கப்பட்டார்கள். சிலர் மாற்றப்பட்டார்கள். ஓரளவு அவர்களே எடுத்துக்கொண்டாலும் கூட இன்னும் 300 பேர்கள் மறுபடியும் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிருர் கள்; அவர்களேயும் வேலேக்கு எடுத்துக்கொள்ளும்படி மந்திரியவர்களேக் கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் அந்தத் தொழிலாளர்களின் குழந்தை கள் படிக்க "எஜுகேஷனல் கன்செஷன்" அவசியம் கொடுக்க வேண்டும். 1946-47 முதல் கொண்டு வேலே செய்துவரக்கூடிய பல தொழிலாளர்கள் இன்னும் ரெகுலரைசேஷன் செய்யப்படாமல் இருக்கிருர்கள். அவர்களே ரெகுலரைசேஷன் செய்யவேண்டியது மிகவும் அவசியம். ரெகுலரைசேஷன் செய்யப்படாதவர்கள் சென்னேயில் 200 பேர் இருக்கிருர்கள். வாலாஜாபாத் தில் 250 பேர் இருக்கிருர்கள், கடலூரில் 120 பேர் இருக்கிருர்கள் ஈஸ்ட் ராமநாதபுரத்தில் 70 பேர் இருக்கிருர்கள். இவர்களேயெல்லாம் ரெகுலரை சேஷன் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

Sri R. SRINIVASA IYER : Mr. Speaker, Sir, we are now discussing three statements—the Financial Statement for 1959–60, the First Supplementary Statement for 1958–59 and the Second Supplementary Statement under the provisions of Act LIV of 1958

[Sri R. Srinivasa Iyer] [22nd April 1959

—Central Act. These Statements should have been placed before us early in February. In spite of the fact that we have taken a Vote on Account on the subject during its discussion of Budget in the Assembly, all these Budget Estimates or Financial Statements have to be discussed and what is said here has to be taken into consideration by the Electricity Board in implementing its future programme. While congratulating the Board, particularly, the Chief Engineer and his staff, on executing very important and costly projects far in advance of the stipulated time and saving more than a crore of rupees by procuring materials from abroad quickly and driving the staff and workers to work fast, I must point out that
1-50 p.m. we have not yet reached that stage where we can say that we are self-sufficient in electricity. No doubt our State is fast progressing and leads other States in the Union in respect of rural electrification. In this connection I have got to state that we have not yet formed the local advisory committees for each district as contemplated by the Act. Of course there is a State Consultative Committee in which Coimbatore, Ramanathapuram and Chingleput districts alone are represented. I do not say they are over-represented but I say other districts have not been represented and therefore it is not possible to evolve a co-ordinated progressive plan for the development of all the district. I hope ere-long these local advisory committees for each district will be formed consisting of representatives from the Assembly and other interested and experienced people in each district so that a planned programme can be evolved for the whole State and development can take place equitably throughout the State.

Then there is the Electricity Board. According to the Act it is not necessary that the entire Board should consist of officials only. Then, even the officials now on the Board are not whole-time servants of the Board. I do not have anything to say against the members of the Board as such. All of them are doing very good work. But at the same time I would like to say that the Home Department Secretary with all his other official duties as Home Secretary cannot afford to devote much attention to the work of this Board. Similarly the Finance Secretary and the Director of Industries are only part-time servants of the Board. These officials are only part-time servants of the Board who cannot devote sufficient attention for the developmental activities of the Board. A retired Accountant-General alone will not sufficiently represent the non-officials. He is practically an official member on the Board. It is not impossible to find non-officials experienced in electricity development and distribution, willing to serve on the Board.

We have many retired officials and others who have managed private companies for many years efficiently and successfully. They

22nd April 1959] [Sri R. Srinivasa Iyer]

may be asked to serve on the Board. I would therefore appeal to Government to associate more and more non-officials with the work of the Board and make them members of the Board.

Then, Sir, the licensee areas are not now properly developed. The Board should concern itself with development work not only in the areas under their exclusive jurisdiction but also the development of the areas under the jurisdiction of the licensees. No doubt it might be said that the licensees have a monopoly over the area under their jurisdiction and therefore it is their responsibility to develop that area. But the Board can help them by giving them loans or other aids so that the areas under the licensees' jurisdiction are also improved along with the areas under the jurisdiction of the Board. The Board has the responsibility to develop the entire State as such. Therefore the Board should take a rational view of the rural electrification scheme and prepare a phased programme for development of areas under the jurisdiction of the licensees also.

I understand the South Madras Electric Supply Corporation which has a monopoly over certain areas in Tanjore and Tiruchirappalli districts has applied to the Central Government and this Government for the grant of a loan. The application is pending for several years. We cannot expect a private company to spend crores of rupees as capital expenditure for development of electricity in rural areas. If a loan is granted, it will be easily repaid by the company with the usual rate of interest. These are solvent bodies and they have completely repaid loans granted to them previously. This is a very important matter for the Board and the Government to consider as to how far the licensee should be helped to develop the areas in their jurisdiction.

Then, Sir, I would like to make another suggestion in regard to nationalisation. The Damocle's sword is hanging over their heads and they do not know when their concerns would be taken over by the Government. This is a stumbling block for the licensees in developing the areas under their jurisdiction. In the interest of proper development or electricity in all the areas in the State it should be possible for the Government to say when they are going to nationalise these undertakings. Or they can at least negotiate with the licensees for the purpose of excluding certain areas under their jurisdiction and then take over the development work themselves instead of depending on the companies to do that and which they are not able to do without financial assistance from Government. In respect of these also I would suggest that the State consultative committee should draw up priorities for taking up certain schemes and development of certain areas. I do not find from the papers placed before us any such priority has been drawn up. I would suggest that the Board should plan additional points

for high voltage supply. From the Second Supplementary Statement given to us we find that the extra amount spent was on cost of coal, oil and other items for the increased output of electrical power in the Madras Electricity System. It is no doubt commendable that this extra generation has been achieved. But when we are faced with scarcity of coal, oil and transport facilities, we must devote greater attention to hydro-electric projects. In this connection, I would like to submit that if the Mettur Tunnel Scheme had been thought of along with the original Cauvery-Mettur Project Scheme, it could have been completed at a much lesser cost than what it is going to cost us now. This scheme is expected to give us some more power.

THE HON. SRI V. RAMAIAH : We are going to have 200 thousand K.V. and not some more power.

* SRI R. SRINIVASA IYER : With increase in production we are also faced with the problem of meeting the increased demand. I am glad the Hon. the Minister says we are going to get 200 thousand K.V. more but I must say it will cost us ten times more than what it would have cost us thirty years ago. The demand for lectricity is increasing day by day. As was said during question hour today, people are starting industries in the hope of getting electric power at cheap rates and all the power produced will be used up and we may not be in a position to meet entire demand of the people, for electric power.

Then, Sir, I would like to point out that the Board is only concentrating their attention on non-licensees areas. As I have already suggested it is the Board's responsibility to help the licensees in the development of the areas under their jurisdiction.

During the discussion on the Budget last year I mentioned about the Sandy Nullah Scheme. This has after all been taken up after a long time. Today I had occasion to go that side and I am glad to note that a sum of Rs. 3 lakhs had already been spent out of the sanctioned amount of Rs. 30 lakhs. It is said that it will take three years to complete the scheme. I hope with the drive and initiative of our Chief Engineer for Electricity the scheme could be completed within two years. A saving of time means saving of money. While on this point, I wish to refer to one point made by the hon. Member who initiated the discussion on the Electricity Budget. He stated that the contract system should go and all the work in such schemes should be carried out departmentally. There are two views expressed on this matter. Contractors are now supplying the labour and they control labour and they are able to finish to work in advance of the time as per the directions of the Department. I do not know if the labour could be controlled so well by the department and work extracted as a contractor does. The Government will have to face the usual

22nd April 1959] [Sri R. Srinivasa Iyer]

tactics and methods adopted by them (the labour) for claiming more and more wages without increased production or efficiency at the instance of political parties by resorting to strike, etc. This will only be courting trouble. I do not know how far we will be able to implement these very important schemes quickly and in time if they are to be executed departmentally.

Therefore, before we take away the contract system and introduce the departmental system, I desire to strike this note of caution to the Government. Personally I am not for giving up the contract system though the system requires overhauling. 2-00 p.m.

Then, Sir, I come to salaries paid to the departmental personnel. We find that very good, intelligent and hard working Graduates of the Engineering Colleges are going away and seeking employment elsewhere. That is because their service conditions in this State are not satisfactory—I mean the salary that is paid to them. But they are able to get high salaries in private companies and in the Central Government. Now I am not referring to the disparity in the scale of pay of both the Gazetted and Non-Gazetted Officers of the State and Central Governments. Generally these Madras engineers are praised that they are the best in the whole world. When that is so, they must be paid much more than what they are getting now. In this connection, I want to suggest to the Government and the Board about the propriety of reserving 20 per cent of the Gazetted appointments for Selection Grade appointments. I am mentioning this because I know that the best intellectuals are going out and we cannot afford to lose their services. Twenty per cent of the officers who are hard working, intelligent and with very good initiative should be selected for these selection grade appointments without regard to seniority alone and their services should not be lost to us.

Then, I would like to mention one other important matter. In this Report, it has been mentioned that a ceiling on capital expenditure for the year has been fixed by the Planning Commission at Rs. 11 crores. Of course, the Planning Commission gave us some money. We also put in some more money. But this Electricity Board is entitled to borrow money and last year about Rs. 4 crores were subscribed to even before the time allowed for the closing of the subscription. That shows the efficiency with which this Board is working. And we can raise more loans and repay them because there is a very great demand for electricity. We must have one or two additional Thermal Stations and the whole State must be connected by a single grid so that at least in future we will have no power cut in this State. I am glad that even during this summer this time, there has been no power cut and that has been mentioned in the meeting convened by the Hon. Minister for Electricity on the 19th March. I hope

[Sri R. Srinivasa Iyer] [22nd April 1959

that with the co-operation of the Secretary of the Public Works Department and the Chief Engineer for Electricity we shall have no power cut for all time to come.

* SRI J. MATHA GOWDER : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த மின்சார அறிக்கையில், மின்சார போர்டுக்கு ஆலோசனைக் குழு 1–1–58-ல் இருந்து முதல் கட்டமாக ஒரு ஆண்டு காலத்திற்கு நிறுவப்பட்டது 1–1–59-ல் இருந்து மேற்கொண்டு ஒரு ஆண்டுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது என்று இதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். நீடிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதே அங்கத்தினர்களைக் கொண்டு அந்த கௌன்ஸில் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதா அல்லது வேறு அங்கத்தினர்கள் அதில் மாற்றப்பட்டிருக் கிறார்களா என்பதைப்பற்றி இங்கு ஒன்றும் சொல்லப்படவில்லை.

THE HON SRI V. RAMAIAH : நீடிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதே அங்கத்தினர்களைக் கொண்டுதான் என்றுதான் அர்த்தம்.

SRI J. MATHA GOWDER : ஒரு கௌன்ஸிலை ஏற்படுத்தி அதை நீடிக்கும் போது அதே அங்கத்தினர்களைக் கொண்டதாக அது இருக்கு மானால், அதை பெர்மனென்ட்டாகப் போட்டு விடலாமே, பின்னர் அதற்கு கௌன்ஸில் என்ற அர்த்தம் எங்கு இருக்கிறது என்பதைப்பற்றி நாம் சந்தேகிக்க வேண்டியதாகயிருக்கிறது. ஜில்லா அபிவிருத்தி சபையில் இதைப்பற்றி யோசிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று கூறப்பட்டிருக் கிறது. ஜில்லா அபிவிருத்தி கௌன்ஸில் ஏற்படுத்துவது வரையில் ஜில்லா விலுள்ள மின்சார நிலைமையைப் பற்றிச் சொல்வதற்கு ஒரு குழு அவசிய மில்லை என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ? அதுவரையில், இடைக்காலத்தில் என் ஒரு குழு அமைக்க கூடாது ? மற்றப்படி, வேறு கமிட்டிகள் எல்லாம் இன்றைக்கு இல்லையா என்று பார்க்கும்போது ப்ரோகி பிஷன் அட்வைஸரி கமிட்டி போன்ற கமிட்டிகள் எல்லா ஜில்லா அளவிலும் இருக்கிறதே அப்படியிருக்க மின்சார போர்டிற்கு மாத்திரம் அப்படி கமிட்டிகள் நிறுவி பின்னர் அபிவிருத்தி கௌன்ஸில்கள் ஏற்பட்ட பிறகு என் இந்தக் குழுக்களை கலைத்து விடலாகாது என்று கேட்கிறேன். அதுவரையில் அப்படி ஏற்படுத்தாமல் இருப்பது அவ்வளவு உஜிதமல்ல, என்று எனது கருத்தை நான் இங்கு தெரிவிக்க விரும்புகிறேன். ஒருக் கால் ஜில்லா அபிவிருத்தி கௌன்ஸில்கள் ஏற்படுத்துவதற்கு பஞ்சாயத்து தேர்தல்கள் முடிந்து பஞ்சாயத்துகள் ஒவ்வொரு யூனியனுக ஏற்பட்ட பிறகு ஜில்லாக் கௌன்ஸில்கள் ஏற்பட இரண்டு வருட காலமாகும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அப்படி இரண்டு வருட காலம், அல்லது ஒரு வருட காலம் என்று வைத்துக் கொண்டாலும் அதுவரையில் அப்படி கௌன்ஸில்கள் ஏற்படுத்தாமல் இருப்பது அவ்வளவு உஜிதமல்ல. ஆகவே, எல்லா ஜில்லாக்களிலும் அப்படிப்பட்ட குழுக்கள் ஏற்படுத்த வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதுவும், குறிப்பாக நீலகிரி ஜில்லாவை எடுத்துக்கொண்டால் நீலகிரி ஜில்லா வில் இருக்கக்கூடிய பலயிடங்களில் நாம் மின்சார திட்டங்கள் ஏற்படுத்து கிறோம். அந்தயிடங்களில் சிறு சிறு விஷயங்கள் வரும்போது கூட சர்க்கார்வரை அணுகித்தான் பிறகு காரியங்கள் செய்யவேண்டிய நிலை இன்று இருக்கிறது. ஆனால் ஜில்லா அளவில் ஒரு ஆலோசனைக்குழு ஏற்படுத்தியிருந்தால் சிறு சிறு விஷயங்களை எல்லாம் அந்தக் குழுவே ஆராய்ந்து அதை சீக்கிரம் முடிக்க முடியும். அப்படி செய்து சர்க்காருக்கு நல்ல அபிப்பிராயங்களைத் தெரிவிக்கமுடியும். இன்று, அமைச்சர் அவர்கள், குந்தா திட்ட அதிகாரிகள் 'எதைச் சொல்கிறார்களோ அதை வைத்துக்

22nd April 1959] [Sri J. Matha Gowder]

கொண்டு, அதிகாரிகளின் ரிப்போர்ட்டை வைத்துக் கொண்டுதான் முடிவு எடுக்க வேண்டிய நிலைமை இருக்கிறதே தவிர பொதுமக்களின் அபிப்பிராயத்தை அறிந்து கொண்டு வேலைகள் செய்வதற்கு வாய்ப்பில்லை. குந்தா திட்டம் ஆரம்பிக்கும்போது அமைச்சர் அவர்களிடம் பல விண்ணப்பங்கள் வந்தது. குந்தா திட்டத்திற்காக யார் யார் இடமிருந்து நிலங்கள் எடுக்கப்பட்டனவோ அவர்களிடமிருந்து பல விண்ணப்பங்கள் போனதுண்டு. குந்தா திட்டத்திற்காக பலரிடமிருந்தும் பூமிகள் எடுக்கப்பட்டுள்ளன. அப்படி எடுக்கவேண்டியதுதான். எடுக்கவேண்டாமென்று சொல்லவில்லை. ஆனுல் அதேசமயத்தில் அவர்களுக்கு சரியானபடி வேறுபூமி ஒதுக்கப் பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இந்த நாள் வரையிலும் அவர்களுக்கு பூமி ஒதுக்கப் படவில்லை. நேற்று சொல்கிருர்கள், ஒரு கிராமத்தில் சர்க்கார் எடுத்திருக்கும் அவர்களது பூமியில் அவர்கள் விவசாயம் செய்யக் கூடாதென்று உத்தரவு போட்டிருக்கிருர்கள். அப்படி அங்கு விவசாயம் செய்யக் கூடாதென்று உத்தரவு போடும்போது அவர்களுக்கு பிழைப்பதற்காக பயிரிட வேறு இடம் கொடுக்க வேண்டாமா ? அப்படி வேறு பூமியை சர்க்கார் கொடுக்கவில்லை. ஒன்றில், வேறு பூமியைக் கொடுத்துவிட்டு திட்டத்திற்காக எடுக்கப்பட்டிருக்கும் பூமியில் பயிரிடக் கூடாதென்று சொல்லவேண்டுமே தவிர அந்த பூமியில் பயிரிடக்கூடா தென்று சொல்லிவிட்டு வேறு பூமி கொடுக்காமல் இருப்பது அவ்வளவு உஜிதமல்ல என்று நான் இங்கு சொல்லவிரும்புகிறேன். மக்களின் பிரதி நிதிகள் என்ற ஹோதாவில் அந்த மக்கள் எங்களிடம் வந்து அவர்கள் குறைகளை, அவர்கள் வருத்தத்தைத் தெரிவிக்கிருர்கள். ஆகவே, இது குறித்து அமைச்சர் அவர்கள் கவனித்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சட்டசபைக் கூட்டம் முடிவடைவது வரையில் அமைச்சர் அவர்கள் இங்கு தங்கியிருக்கும் பத்து பதினைந்து நாட்களுக்குள் இதற்கு ஒரு முடிவு காணவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக, இந்த துறையை அமைச்சர் அவர்கள் ஒரு வியாபாரமாக வைத்துக் கொண் டிருப்பதாகத்தான் தோன்றுகிறது. இது, ஒரு பிஸினஸ் மாதிரி இருக் கிறது. மின்சாரம் மக்களுக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆகவே மின்சாரத்தைப் பொறுத்தவரையில் அதை ஒரு லாபகரமான பிஸினஸ்ஸாக வைத்துக் கொள்வது அல்லது அப்படி வைத்துக் கொள்ளபார்ப்பது அவ்வளவு உஜிதமல்ல. சென்ற ஆண்டில் “ 75 லட்சம் உபரி இருந்திருக் கிறது. அடுத்த வருடம், 59–60ல் 1·09 நமக்கு அதிகமாக உபரி நிற்கும் என்று இருக்கிறது. இதைப்பார்க்கும்போது வருடமொன்றுக்கு ஒரு லட்சம் அதிகரித்துக் கொண்டுபோகிறது. நாம் லாபத்தை மட்டும் பார்க்கக்கூடாது. அப்படி வரும்போது, கட்டணங்களை நாம் குறைக்க முடியுமா என்று பார்க்கவேண்டும். அப்படி கட்டணங்களை குறைக்கலாமா என்பதைப் பற்றி வரும்போது, இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது, விவசாயத்துறையில் உள்ளவர்களுக்கு அவர்களுக்கு ஓரளவிற்கு குறைந்த கட்டணத்தில் கொடுக்க லாமென்று கூறப்பட்டிருக்கிறது. நீலகிரியை எடுத்துக்கொண்டால் இங்கு விவசாயிகளுக்கு பம்ப் செட்கள் போன்றவைகள் அவசியமில்லை. இங்கு டீ பாக்டரிகள் இருக்கின்றன. இந்த பாக்டரிகள் கொடுக்கவேண்டியிருக்கும் மின்சாரக்கட்டணத்தை இன்னும் குறைக்கவில்லை. பத்து வருடத்திற்கு முன் என்ன கட்டணம் இருந்ததோ அதே கட்டணம்தான் இன்றும் வசூல் செய்யப்படுகிறது. ஆகவே, இங்குள்ள டீ பாக்டரிகள் செலுத்தவேண்டிய மின்சாரக் கட்டணத்தை குறைக்க வேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, இந்த கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கிராமங்களுக்கு மின்சாரவசதிகள் விஸ்தரிக்கப்படு மென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீலகிரியை எடுத்துக்கொள்வோமே யானுல், இங்கு குந்தா திட்டம் இருக்கிறது. பைக்காரா திட்டம், மோயார் திட்டம் போன்றவைகளும் இங்குதான் இருக்கின்றன. குந்தா திட்டம்

முடிவு அடைந்ததும் இந்த ஜில்லாவிலுள்ள கிராமங்கள் எல்லாவற்றிக்கும் மின்சாரம் அளிக்கப்படுமென்று இங்குள்ள மக்கள் இலவு காத்த கிளி போல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, கோத்தகிரியில் உள்ள நெடுகுளா கிராமத்தில் உள்ள மக்கள் அங்கு அவர்களுக்கு மின்சாரவசதி அளிக்கும்படி கோரி ஒருவருடத்திற்கு முன்பே விண்ணபித்திருந்தார்கள். பக்கத்திலிருக்கும் கோத்தகிரி வரைக்கும் மின்சாரம் வந்திருக்கிறது. இதற்கும், இந்த கிராமத்திற்கும் ஒரு மைல்கூட இல்லை. அப்படியிருக்க, அவர்களுக்கு, அந்த கிராமத்திற்கு ஏன் மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை என்பது எனக்குப் புரியவில்லை. அதற்குக் காரணம் இங்கு ஒரு கௌன்ஸில் இல்லாததுதான் என்றுதான் நான் கருதுகிறேன். சர்க்காரிடத்திலே போகும்போது மிகவும் தாமதமாகிறது. அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் தாமதயாக இங்கு அனுப்புகிறார்கள் என்ற காரணத்தைச் சொல்லுகிறார்கள். அதையும் சற்று கவனிக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(Sri B. Doraisami Reddiar in the Chair.)

அடுத்தபடியாக, சென்ற ஆண்டு மின்சாப பட்ஜெட் விவாதத்தின் போதே நான் காட்டேரி மின்சார நிலையத்தைப் பற்றி பேசியிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் உடனடியாக அதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுககொண்டேன். அதைப் பரிசீலனை செய்து அதைப்பற்றி என்ன முடிவு எடுத்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. காட்டேரியில் மின்சார நிலையத்தை மத்திய கவர்ண்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்பொழுது அது மூடப்பட்டிருக்கிறது. எதற்காக மூடப்பட்டிருக்கிறது என்று கேட்டால், லாபகரமாக இல்லை, அதற்காக மூடிவிட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். லாபகரமான தொழில் இல்லை என்று வைத்துக் கொண்டாலும்கூட, அதை லாபகரமாக ஏற்படுத்த முடியுமா என்பதைப் பரிசீலனை செய்யவேண்டும். லாபகரமாக ஏற்படுத்த முடியவில்லை என்று சொன்னால், அதை உடைத்துவிடவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன். கட்டின டாமை உடைக்கச் சொல்லுகிறேனே என்றால், டாமை கட்டிவைத்து விட்டு, மின்சாரத்திற்கு அது உபயோகப்படவில்லை. அங்கு மின்சார நிலையம் இருக்கிற காரணத்தினால் மேற்கே இருக்கக்கூடிய நிலங்களிலே மண் அடைந்து விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எத்தனையோ ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமான உருளைக்கிழங்கு வீணாகி விட்டது. அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மண்ணை வெளியிலே எடுத்துப் போட்டு தண்ணீர் அடையாமல் செய்யவேண்டும். டாமை ஒன்றில் உடைத்துவிடவேண்டும். அல்லது டாம் உபயோகரமாக இருக்கிறதா என்று பார்த்து, மின்சாரம் எடுப்பதற்கு எப்படியாது வழிவகை செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, 6 மணிக்கு மேல் மின்சாரம் உபயோகிக்கக்கூடாது என்ற கட்டுப்பாட்டை நீக்கிவிட்டோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மிகவும் சந்தோஷம். ஆனால் சென்ற மாதம் நான் சென்னையில் இருக்கும்பொழுது இங்கிருந்து தபால் வருகிறது, 6 மணிக்கு மேல் டீ பாக்டரிகள் மின்சாரத்தை உபயோகிக்கக்கூடாது என்று சொல்லி விட்டார்கள் என்று தபால் வருகிறது. விவசாயத்தைப் பொறுத்த வரையில் 6 மணி நேரத்திற்கு மேல் மின்சாரத்தை உபயோகிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டாலும், மறு நாள் உபயோகித்துக் கொள்ளலாம். ஆனால் எங்கள் ஜில்லா நிலை எப்படி என்றால் டீ இலையை 4 மணி நேரத்திற்கு

22nd April 1959] [Sri J. Matha Gowder]

மேல் ஒரே இடத்தில் குவித்து வைத்திருந்தால், அது கட்டுவிடும். அன்றைக்கே எடுத்து, அன்றைக்கே பக்குவம் செய்தால் தான் முடியும். 1, 2 நாள் வைத்திருந்தால் டீ இலை கெட்டுவிடும். ஆகவே, டீ பாக்டரிகளை பொறுத்தவரையில் எந்த விதமான கட்டுப்பாடும் கூடாது, எந்த விதமான குறைவும் செய்யக்கூடாது என்று உத்தரவு போடவேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன். சென்ற ஆண்டு இங்கு வந்தபொழுது அமைச்சர் அவர்களிடம் இதுபற்றி தெரிவித்திருக்கிறேன். எல்லா அதிகாரிகளிடமும் தெரிவித்திருக்கிறேன். இந்த ஜில்லாவின் நிலை என்ன என்பதை கொஞ்சம் கவனிக்க வேண்டும். சென்ற ஆண்டில் பல லட்சக்கணக்கான ரூபாய் பெறமான டீ இலை நாசமடைகி விட்டது. அமைச்சர் அவர்கள் இதை கவனித்து இதற்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு ஏதாவது நல்ல நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் ஜில்லாவில் உள்ள கலெக்ஷன் ஆபீஸ்களைப் பற்றி சென்ற ஆண்டில் பேசும்பொழுதும் சொன்னேன், கோத்தகிரியிலும், குன்னூரிலும் கலெக்ஷன் ஆபீஸ்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கோத்தகிரியிலிருந்து 10 மைலிலுள்ள குஞ்சப்பண்ணி, தட்டப்பாளம், முதலிய இடங்களிலுள்ள தோட்டங்களிலிருந்து, அங்குள்ள கிராமப்பகுதியிலுள்ள மக்கள் கோத்தகிரி கலெக்ஷன் ஆபீசுக்கு சட்டணம் செலுத்தப் போகவேண்டும். பல ஆயிரக்கணக்கான ரூபாய் வசூலாகும் இடங்களில் கலெக்ஷன் ஆபீஸ்கள் ஏற்படுத்தி, ஒரு குமாஸ்தாவை வைத்து கலெக்ஷன் செய்வதற்கு என் முடியாது ? அதைச் செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருந்தேன். இதுவரையிலும் கவனித்ததாகத் தெரியவில்லை. எங்கள் ஜில்லா மாத்திரமல்ல, மாகாணம் பூராவும் பல இடங்களிலும் கலெக்ஷன் ஆபீஸ் வைத்துவிட்டால் உடனடியாக கிராம வாசிகள் கட்டணத்தை கட்டிவிடுவார்கள். சமீபத்தில் கலெக்ஷன் ஆபீஸ் இல்லாத காரணத்தினால், 5, 10 மைல்கள் நடக்கவேண்டியிருக்கிறது. அதனால் கிராம வாசிகளுக்கு ஒரு நாள் வேலை பூராவும் கெட்டு விடுகிறது. ஆகையால் இதுபற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

குந்தா திட்டத்தில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகள் நிரந்தரமாக இல்லை என்று சொன்னாலும் கூட, அவர்கள் தற்காலிகமாக வேலை செய்யும் காலத்திற்காவது, நிரந்தரமான தொழிலாளர்களுக்கு கொடுக்கக்கூடிய சலுகைகளில் ஓரளவாவது கொடுத்து, அவர்களுக்கும பாதுகாப்பு அளிக்க வேண்டும். அவர்களுக்கு ஒருவிதமான சலுகைகளும் கொடுக்காமல் இருப்பது அவ்வளவு உசிதமல்ல. இந்தத் திட்டம் முடியும் வரையிலாவது அந்தத் தொழிலாளர்களுக்கு என்ன வசதிகள் வேண்டுமென்பதை அறிந்து, அவர்களுக்கு நல்ல கூலியைக் கொடுப்பதற்கு வசதி செய்து. சுகாதார வசதியுள்ள வீடுகளையும் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்காக என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொண்டு, இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri V. SUBBIAH : தற்காலிகத் தலைவர் அவர்களே, 1959-60-ம் வருஷத்திய நிதிநிலை அறிக்கை விவாதத்தில் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மின்சாரம் உபயோகப்படுத்துவதில் விவசாயிகளுடைய நிலையைப்பற்றி சென்ற பல ஆண்டுகளாக குறை கூறிக்கொண்டிருந்தோம். 'அன்கனெக்டெட் மினிமம் சார்ஜஸ், குரூப் ஸிஸ்டம்' ஆகியவைகளைப்பற்றி குறை சொல்லிக்கொண்டிருந்தோம். அதிலிருந்து இப்பொழுது பல விலக்குகள் அளித்திருக்கிறார்கள். எப்பொழுது கரெண்டு கொடுக்கிறார்களோ அதிலிருந்து 10 வருஷங்களுக்கு எக்ரிமெண்டு என்று மாற்றி

யிருக்கிருர்கள். அது நல்ல முறை. அது வரவேற்கக் கூடிய நிலைதான். அதற்காக அமைச்சர் அவர்களை பாராட்டவேண்டும். குரூப் ஸிஸ்டத்திலும் இன்றைக்கு கூடுதலான காலத்தை கொடுத்திருக்கிருர்கள். இரண்டு மணி நேரம் கூடுதலாக கொடுத்திருக்கிருர்கள். அதையும் பாராட்டவேண்டும். ஆனல் அதில் இன்றைக்கு ஒரு கஷ்டம் இருக்கிறது. அது என்ன வென்ருல், இரண்டு பிரிவாக இருக்கக்கூடிய லைனில் ஒன்றுக்கு காலையிலே 10 மணியிலிருந்து 12 மணிவரையிலும் மற்ருென்றுக்கு மாலையிலே கொடுப்பது என்ற ஒரு நிலை இருப்பதினல், ஒரு விவசாயிக்கு ஒரு லைனில் கிணறு இருக்கிறது என்று வைத்துக்கொண்டால் குறிப்பிட்ட காலத்தில் ஒரு லைனில் தான் நடவு நடமுடிகிறது. இன்னொரு லைன் இருக்குமானல் மாலையிலே கூலிகளைக் கொண்டுபோய் அங்கு நடவு நடமுடியும். இந்த நிலை இல்லாததினல், ஒரு குரூப் ஸிஸ்டத்தில் ஒரு விவசாயி மின்சாரம் உபயோகப்படுத்த வேண்டிய நிலைமை இருப்பதினல், அவன் ஆட்களுக்கு பூரா நேரத்திற்கும் கூலி கொடுக்கவேண்டியிருக்கிறது. இதைக் குறிப்பாக அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளை இன்றைக்கு மிகவும் பாதிக்கக்கூடிய அளவிலே 'அன்கனெக்டெட் மினிமம் சார்ஜஸ்' நிர்ணயிக்கப்படுகிறது. வருஷத்தில் ஒரு விவசாயி கட்டவேண்டிய குறைந்தபட்ச அளவு 5 ஹார்ஸ் பவர் என்ஜினுக்கு 250 ரூபாய் என்று வைத்துக்கொண்டாலும் கூட, ஒரு வருஷத்தில் 200 ரூபாய்க்கு கரெண்டு எடுத்துக்கொண்டாலும், அந்த 200 ரூபாய்க்கு மேல் 50 ரூபாய் சேர்த்து கட்டவேண்டுமென்று சொல்லுகிருர்கள். எக்ரிமென்டுபடி மினிமம் சார்ஜ் என்ற ஒரு கண்டிப்புக்காக 50 ரூபாய் அதிகமாக கட்டவேண்டியிருக்கிறது. இதனல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிருர்கள். இதை கனம் அமைச்சர் அவர்கள் மனதில் வைத்து, 'அன்கனெக்டெட் மினிமம் சார்ஜுக்கு' எப்படி எந்த வழியை கண்டுபிடித்தார்களோ, அதே போன்று இதற்கும் ஒரு வழி கண்டு பிடிக்கவேண்டும். எத்தனையோ முறையில் விவசாயிகளுக்கு சௌகரியம் செய்து கொடுக்கிருேம் என்று சொல்லுகிருர்கள். விவசாயிகளுக்கு கொடுக்கக்கூடிய மின்சாரத்தின் விலையைப் பார்த்தால், இன்றைக்கு தொழிலுக்சக் கொடுக்கக்கூடிய அளவைவிட இரண்டு பங்கு கூடுதலாக இருக்கிறது. அதோடுகூட எத்தனையோவித சார்ஜுகள் வசூலிக்கிருர்கள். மீட்டர் சார்ஜ், ஸர்சார்ஜ் என்றெல்லாம் வசூலிக்கிருர்கள். விவசாயிகளுக்கு கணக்கே புரிவதில்லை. அதை ஒரேயடியாக யூனிட்டுக்கு 1 அணு அல்லது 1½ அணு என்று குறிப்பிட்டுவிட்டால் ரொம்பவும் சுலபமாக இருக்கும். மில்களுக்கு, யூனிட்டிற்கு ½ அணுவுக்கும் குறைவாக கொடுக்கிருர்கள். அது ஒப்புக்கொள்ளக்கூடிய விஷயம் தான். விவசாயிகளுக்காக இன்று அரசாங்கம் இருக்கிறது. நாட்டில் விவசாய உற்பத்தியை பெருக்கவேண்டுமென்று சொல்லக்கூடிய நிலையில் விவசாயிகளுக்கு உள்ள மிக மிக முக்சியமான குறை என்ன வென்ருல் மில்களுக்கு, அவர்கள் செலுத்துவதைவிட குறைவான கட்டணத்தில் மின்சாரம் கொடுக்கப்படுகிறது என்பதுதான். அவர்கள் 50 ரூபாய் மேலாக கட்டவேண்டியிருக்கிறது. 200 ரூபாய் கட்டவேண்டியிருக்கிறது. 'ஜே.ஈ.'-யிடம் சொன்னல் "நான் ஒன்றும் செய்வதற்கில்லை. நீங்கள் பூரா பணத்தையும் கட்டிவிட்டு, பிற்பாடு மேலேயிருந்து உத்தரவு வந்தால் ரீபண்டு' செய்வோம்" என்று சொல்லுகிருர். இந்த நிலையில் பல பேர்கள் எழுதி வருஷக் கணக்கில் ஆகியும் கூட, அவர்கள் கைக்கு இன்னும் பணம் வந்து சேர்ந்ததாகத் தெரியவில்லை.

2.20 p.m. இந்தமாதிரி நிர்வாகத்தில் பல கோளாறுகள் இருந்துகொண்டிருக்கின்றன. இதைப்பற்றி அரசாங்கம் முக்கியமாக கவனிக்கவேண்டும். சில இடங்களில் விவசாயிகளுடைய நிலை மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. பருவ மழை இல்லாததின் காரணமாக கோயில்பட்டி, சங்கரன்கோவில் பகுதிகளில் எல்லாம் மிகவும் கஷ்ட நிலையில் இருக்கின்றன. திருநெல்வேலி ஜில்லாவின் வடபகுதியும், ராமனுதபுரம் ஜில்லாவின் தென்பகுதியும்

22nd April 1959] [Sri V. Subbiah]

ஒதே நிலைமையில்தான் இருந்துகொண்டிருக்கிறது. அரசாங்கமே இந்த பிரதேசங்களை பஞ்ச பிரதேசங்களாக பிரகடனம் செய்திருக்கிறார்கள். இங்குள்ள வேலைகளை மின்சாரத்தின்மூலம் ஆரம்பிப்பதற்காக அங்குள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்தக் கஷ்டங்களை எல்லாம் நீக்கவேண்டும். அதுமட்டுமல்ல கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு இருக்கின்ற கஷ்டங்கள் என்னவென்றால் ஏழு குதிரை வேகம் (ஆர்ஸ் பவர்) மின்சாரத்திற்கு குறைவாக இருந்தால் மின்சாரம் கொடுக்கமுடியாது என்று சொல்லப்படுகிறது. இவ்விதம் சொல்வதாக இருந்தால் கிராமப் பகுதிகளில் இருக்கும் ரைஸ் மில்கள், ப்ளவர் மில்கள் எல்லாம் ஓடுவதற்கு முடியாமல் போகும். ஆகவே இந்த குறிப் பிட்ட அளவுக்கு குறைவாக இருந்தாலும் மின்சாரம் கொடுப்பதற்கு அனுமதி கொடுக்கவேண்டும். இம்மாதிரிப்பட்ட இடங்களுக்கு மின்சாரம் கொடுக்காமல் தடைப்படுத்தினால் அங்குள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப் படுவார்கள். மேலும் எங்கள் பகுதியில் அடிக்கடி மின்சார வெட்டு ஏற்படுகிறது. எங்கள் பகுதிக்கு பாபநாசம் திட்டத்திலிருந்து சப்ளை செய்யப்படுகிறது. அதோடு கிணறுகளை நம்பி அதிகம் பேர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் மின்சார வெட்டு இல்லாமல் போதிய அளவு மின்சார சப்ளை கொடுக்க தெர்மல் ஸ்டேஷன் ஏற்படுத்த வேண்டும், அதோடு கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கு இரவு, பகல் என்று இல்லாமல் எல்லா நேரத்திலும் மின்சார சப்ளை கொடுப்ப தற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும். மேலும், இப்போதுள்ள நிலைமைகளின்படி கட்டணத்தில் விவசாயிகளுக்கு பலவிமான கஷ்டங்கள் இருக்கின்றன. சமீபத்தில் "அன்கனக்டட் சார்ஜ்" எடுத்துவிட்ட பிறகும் மின்சார சப்ளை போதிய அளவு கிடைப்பதில்லை. பல விவசாயிகள் கஷ்டப்பட்டு வாங்கின எலக்ட்ரிக் மோட்டார்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. இவ்விதம் இவைகள் உபயோகிக்கப்படாமல் இருப்பதால் கொஞ்ச காலத்தில் இது கெட்டுவிடுகிறது. இதை நாம் கண்கூடாக கண்டுவருகிறோம். ஆகவே மோட்டார் எல்லாம் வாங்கி தயாராக இருக்கிற விவசாயிகளுக்கு தாமதமில்லாமல் மின்சார சப்ளை கொடுப் பதற்கு அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த முறையில் தாமதம் இல்லாமல் சப்ளை கொடுத்தால்தான் விவசாயிகள் நல்ல முறையில் காலாகாலத்தில் விவசாயம் செய்ய முடியும். இப்போது விவசாயிகளுடைய நலனைக் கருதி பலவிதத்தில் மாறுதல்கள் செய்து வருவதை நாம் கவனித்து வருகிறோம். விவசாயி களுக்கு பலவிதமான லோன்கள் கொடுக்கப்படுகின்றன. அதோடு மின்சார சாமான்கள் எல்லாம் விவசாயிகளுக்கு அரசாங்கமே வாங்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் நல்லதாக இருக்கும். ஏனென்றால் இப்போது எங்கள் பகுதியிலுள்ள ஒரு விவசாயி எதாவது ஒரு மோட்டாரோ அல்லது ஸ்டார்ட்டரோ அல்லது ஸ்விச்சோ வாங்கவேண்டுமென்றால் மதராசுக்கோ அல்லது கல்கத்தாவுக்கோதான் செல்லவேண்டியிருக்கிறது. சில சாமான்களை முன்கூட்டியே வாங்கிவைத்துவிட்டு, பின்னால் அதற்கு தேவைப்படுகிற மற்ற சாமான்களை வாங்குவதற்கு காலதாமதம் ஆனால் முன்னால் வாங்கி வைத்திருக்கின்ற சாமான்கள் பாழாகிவிடுகிறது. அதை ரிப்பேர் செய்யவேண்டுமென்றாலும் மற்ற இடங்களுக்குத்தான் போகவேண்டியிருக்கிறது. அதோடு ரிப்பேர் செய்தாலும் அதன்பின் கொஞ்சகாலத்திற்குத்தான் உதவுகிறது. அதன் பின்னால் மோசமாகி விடுகிறது. ஆகவே அரசாங்கமே நல்ல சாமான்களை வாங்கி கொடுத்தால் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே இதற்கு எதாவது முயற்சி செய்யவேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். மேலும் எங்கள் பகுதி தூத்துக்குடி கார்ப்பரேஷன் மின்சார சப்ளையின்கீழ் இருக்கிறது. இதை அரசாங்கம் எடுத்துவிட்டால் விவசாயி களுக்கு மிகவும் பயனுள்ளதாகயிருக்கும். இப்போது அவர்கள் விவசாயி

[Sri V. Subbiah] [22nd April 1959

களுக்கு கூடுதலான கட்டணத்தில் மின்சாரத்தை கொடுத்து வருகிறார்கள். அரசாங்கம் ஏற்றெடுப்பதாக இருந்தால் குறைந்த கட்டணத்தில் விவசாயிகள் மின்சாரம் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். மேலும் கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்கும்போது 10 லட்சம், 20 லட்சம் என்று எஸ்டிமேட் போடுவதாக இருந்தாலும், மினிமம் சார்ஜ் ஒரு குதிரை வேகத்திற்கு (ஹார்ஸ் பவர்) 50 ரூபாய், 100 ரூபாய் என்று போடாமல் குறைந்த கட்டணத்திலேயே மின்சாரம் கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* Sri C. R. RAMASWAMI : Mr. Chairman, it gives me very great pleasure to participate in this discussion. As one who has been closely associated with the Electricity Board . . .

TEMPORARY CHAIRMAN (Sri B. DORAISAMI REDDIAR) : எல்லோருக்கும் தமிழ் தெரிவதால், தமிழிலேயே பேசலாம் என்று தெரிவித்துக கொள்ளுகிறேன். (சிரிப்பு.)

* Sri C. R. RAMASWAMI : As one who has been closely associated with the activities of the Electricity Board and as a Member of the Electricity Consultative Council, I would like to congratulate the Board on the splendid work that it has done in the two years of its existence. Mr. Chettur who has been the Chairman of the Board has been exerting his all for the good work that is being done by this Board. The Consultative Council also has been performing a very useful function and their recommendations have been implemented. Sir, I had the privilege of speaking on this Budget on the last occasion and I suggested then that a full-time Chairman and full-time Members should be appointed for this Board. But for some reason or other, the Government have not yet been able to come forward with proposals for making the Chairman a permanent person. Similarly, the Accounts Member should be a full-time Member. A member was appointed and some time afterwards he resigned. Subsequently a retired Accountant-General has been appointed. I feel that all the Members should be permanent persons and if they are non-officials, it would be much better. Anyhow, the Board as such has been doing a very useful work; they have been attending to all problems connected with the electrical development in our State; they have been giving valuable advice to the Minister in charge of Electricity. I feel that the Chairman of the Board might be the Minister in charge of Electricity, if that were possible, even by amending the Electricity Act, if necessary for this purpose.

The activities of the Electricity Board during the financial year ended have been remarkable and their achievements are great. Over Rs. 14 crores have been spent on the Capital side and various new projects have been taken on hand. Very good progress has

22nd April 1959] [Sri C. R. Ramaswami]

been made in the Kunda Hydro-electric Project and in regard to other schemes also splendid work has been done. My own feeling is that in spite of the fact that an amount of Rs. 14 crores has been spent last year, we are still short of power and the power shortage is going to be acute all the time especially when the State is progressing industrially and agriculturally and in every sphere rapidly. Therefore, the pace of development of power should be accelerated. Government should consider the feasibility of increasing the power output more than anything else, if we are really to progress. Very frequently, we hear that '800 villages have been electrified; 500 villages have been electrified' and so on. But I do not know whether anybody has compiled statistics to find out the productive uses to which power has been put such as what the connected load is, what the connected power that has been taken by villages is and what the productive uses to which electricity has been put to are, whether they have been used only for lighting up streets and lighting houses and so on. My own feeling is that when there is acute shortage of power, every kilowatt should be put to the maximum use and put to the best productive use. Unless electric power is put to productive use, there is little likelihood of our State progressing at all. Electricity should be given more and more to consumer goods industries and heavy industries. At the present time, the policy seems to be to go on increasing the number of lines and the length of lines and provide electricity to all villages. But the main trouble is that no heavy industry of any importance is established in our State. Why is it so? What is the reason? I do not know whether anybody has looked into this question. The main difficulty seems to be that the rates of power supply, as far as heavy industries are concerned, are very high. Take for instance the Aluminium plant at Salem. Nobody is willing to come forward and put up a plant, because the rates of power supply are high. Unless the rates are lowered, very heavy industries may not be started in our State. I would commend the Minister for Electricity to consider whether it will not be possible for him to take over the Salem Bauxite ore and establish an aluminium industry there itself, because aluminium is the basic requirement of the electricity industry. Practically all the requirements of the electricity industry like conductors, etc., depend on aluminium. I would strongly commend to the Minister for Electricity to consider whether it will not be worthwhile for him to consider the advisability of starting an aluminium industry at Salem, as part of his departmental activity. The Madras State will be the first State in India to start such an industry and to have its own conductors, etc. Unless electricity is made available at reasonable rates, there is very little chance of heavy industries coming up in our State. There should be some balance between the rates to be charged for heavy industries and for other industries. To attract industries, there should be a rationalised balance between the rates

2-30 p.m.

to be offered to heavy industries and other industries. Sir Henry Howard devised a tariff which worked out successfully for fifteen or twenty years. We must now apply our minds and see how we can rationalise our tariff. so that heavy industries may be attracted. In western countries. the tariffs are not heavy. Tariffs are quoted only on request. Tariffs are quoted to suit each industry. In those countries tariffs are so offered as to attract heavy industries and enable new industries to come up. But in our country things are the other way about. We talk of heavy industries in our State. Let us at least give lower rates to heavy industries, so that heavy industries may be developed. If heavy industries are really meant to make any progress, there should be a rationalised balance structure.. The tariff should be dependent upon the type of industry. For instance in Mysore we have the pig iron furnace. That industry is supplied with cheap power. How is it that it is possible for them to get power at cheap rates? They are supplied with cheap power so that the industry may come up. We should have a balance in our tariff rates and see that the tariff enables heavy industries to come up. The tariff rates should be on a basis which would attract heavy industries. This year we have got a programme of capital expenditure to the extent of Rs. 11 crores. Of this about Rs. 5½ crores are earmarked for Kundah. About Rs. 95 lakhs has been earmarked for Pykara. About Rs. 87 lakhs has been earmarked for the Madras Thermal Scheme. I welcome the Sandynallah Reservoir Scheme. As far as the Madras Thermal Scheme is concerned, the budget estimate is Rs. 87·26 lakhs. I would like to know what this sum represents, and whether this scheme will give additional power. I would like the Hon. Minister to enlighten me on this.

The Neyveli plant is expected to generate 250,000 kilowatts. But it is contemplated that only 70,000 kilowatts will be available for other industries and that the balance will be utilized in Neyveli itself. . All the 250,000 kilowatts are not going to be used by industries outside. I would request the Government to consider whether it will not be worthwhile to erect thermal plants to help the various important industries. I have been making this suggestion for the last six or seven years with little effect. Take for instance the Coimbatore mills. They have spent crores of rupees and started diesel generating sets. All these diesel generating sets are a waste. Electricity produced by these diesel generating sets comes to four annas per unit. Why not Government put up a thermal plant there? I know putting up the thermal station is the only way to meet the needs of the mills. That hydro-electric generation of power can keep pace with the thermal plant, is not correct, nor conceivable. I really feel that important centres like Madras, Coimbatore and Madurai, should have firm thermal stations, and that we should have 100,000 kilowatts for each of these stations to meet

22nd April 1959] [Sri C. R. Ramaswami]

the industrial needs of our State. Neyveli, as I already said, cannot give more than 70,000 kilowatts to industries outside Neyveli. There is also loose talk that hydro-electric power is cheaper and thermal station power is expensive, and so hydro-electric power resources must be developed. Hydro-electric power may be cheap. But take into consideration the transmission lines. The cost of the transmission lines has to be taken into consideration, and it should be added to the cost of power. We cannot just calculate the cost of power by taking into consideration only the headworks. The whole thing will have to be taken into consideration and then only the real cost should be arrived at. I would commend the Hon. Minister to go through the pamphlet recently issued by the Electricity Commission on the comparative merits of hydro-electric power and thermal station power. The power produced from thermal stations will compare favourably with that of the hydro-electric projects. If hydro-electric power is produced on a large scale and if all the power is used in the adjacent area, it may be cheap. Let us not blind ourselves to the fact that large scale hydro-electric power generation is not possible. The only method to increase the power supply is to put up thermal stations.

Most of the departmental requirements are purchased from various places. What are the requirements of the Electricity Department? They are the conductors, insulators, transformer lines, etc. Practically all these are got from abroad. The department must make a start in the manufacture of some of the important items. They can draw all their requirements of conductors from the aluminium industry in Kundara. But the industry is heavily booked with orders, and there is a shortage in supply. The Electricity Department can very well take up the manufacture of aluminium conductors themselves and meet all their requirements. Similarly, the Government should take up the manufacture of insulators of high voltage capacity. They cannot be depending upon foreign exchange for getting insulators. Large power transformers of 30,000 kilowatts are not being made in India at present. I paid a visit to Kirloskars transformers in Bangalore. There they said that they were not having transformers of 30,000 kilowatts. The Madras Electricity Department will consider this project independent of the Bhopal project. The department will do well to consider the manufacture of essential items like conductors, insulators, transformers, low tension switch gear, etc.

As regards the tariff rates, as I said before, there was a proposal before the Electricity Consultative Council that the rates should be rationalised. We raised a storm of protest against the service connection charges that were being levied on ordinary consumers. The present levy of 50 per cent centage and a minimum

guarantee covering a period of 15 years is very high and unreasonable. Many of us protested, and the department readily agreed to reconsider this matter, in the light of actuals, and reduce the guarantee to a reasonable level. The guarantee of 15 years will be really a great hardship to agricultural consumers. The Electricity Consultative Council has recommended that agriculturists should be given special treatment so far as supply of power is concerned.

SRI K. S SUBRAMANIA GOUNDER : தற்காலத்திய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்று மின்சார இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை வரவேற்று நான் சில வார்த்தைகள் பேசவேண்டுமென்று விரும்புகிறேன்.

இந்த மின்சார இலாகாவானது தொடர்ந்து நல்ல முறையிலே வேலை செய்து வருவதையும், அந்த இலாகாவின் அமைச்சர் அவர்களும், மின்சார போர்டு சேர்மேன் அவர்களும், பிரதம இன்ஜினீர் அவர்களும் நல்ல முறையிலே வேலை செய்து, எந்த அளவுக்கு திருப்தி கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குச் செய்வதை நான் பாராட்டுகிறேன். குறிப்பாக, அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே 'ஸ்டாகரிங் அண்டு க்ரூப்பிங் ரெஸ்டிரிக்ஷன்ஸ்' ஐ ஓரளவு தளர்த்தியிருப்பதுபற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி சட்டசபை அங்கத்தினர்களையும் வைத்து விவாதித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதிலே, காலை 7 மணியிலிருந்து 11 மணி வரையில் முதல் ஷிப்ட் என்றும், மாலை 2 மணியிலிருந்து 6 மணி வரையில் இரண்டாவது ஷிப்ட் என்றும், இடையில் காலை 11 மணியிலிருந்து மாலை 2 மணி வரையில் இருக்கக்கூடிய நேரத்தை இரண்டு ஷிப்ட்களுக்கும் கொடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதைத்தான் அப்பொழுது அமைச்சர் அவர்கள் அந்தக் கமிட்டியிலே தெரிவித்தார்கள். ஆனால், அதை இன்னும் ஒரு மணி நேரம் காலையிலும், இன்னொரு மணி நேரம் மாலையிலும் அதிகப்படுத்த முடியுமா என்பதை ஆராய வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டோம். அதை ஆராய்வதாக அமைச்சர் அவர்களும் பிரதம என்ஜினீர் அவர்களும் சொன்னார்கள். காலையில் 7 மணி என்று இருப்பதை 8 மணி என்று ஒரு மணி நேரம் 'காமன் ஷிப்ட்' டை அதிகப்படுத்தவேண்டும். அது போல மாலை 2 மணி என்று இருப்பதை 3 என்று ஒரு மணி நேரம் அதிகப்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு காலை நேரத்திலே தண்ணீர் பாய்ச்சுவதுதான் மிகவும் சௌகரியமாக இருக்கும். இதே நேரத்திலே 'காமன் ஷிப்ட்' டாக இருந்தால், இன்னும் சற்று இரண்டு மணி நேரம் அதிகமாக இருந்தால் இது ஓரளவுக்கு நிரந்தரமாக இருந்துவிட்டால்கூட விவசாயிகளைப் பாதிக்காது. அந்த வகையிலே வேண்டுவன செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது நல்ல முறையிலே மின்சார அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறது. எந்த இடங்களில் மின்சார அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறது என்று பார்த்தால், அது சர்க்கார் 'ஏரியா' வாக இருக்கும் இடத்திலே மின்சார அபிவிருத்தியெல்லாம் ஏற்படுகிறதே தவிர, பாக்கி லைசென்சிகள் ஏரியாக்களிலே இருபது வருஷங்களுக்கு முன்பு எந்த நிலை இருந்ததோ அதே நிலைதான் இப்பொழுதும் இருக்கிறது என்று நான் வருத்தத்துடன் அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன், அதுவும் லைசென்ஸின் வாய்தா முடிந்தும்கூட அந்த ஏரியாக்களிலே இன்னும் நாம் மினசார அபிவிருத்திக்கு வேண்டிய திட்டம் போடவில்லையென்றால் அது மிகவும் வருந்தத்தக்க காரியம் என்று அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்

22nd April 1959] [Sri K. S. Subramania Gounder]

கொள்ள விரும்புகிறேன். அதிலும் லைசென்ஸி போடாவிட்டால் சர்க்காரே போடலாம் என்ற அளவிலே அக்ரிமெண்டிலே இருக்கிறது. ஆனல், அந்த நிர்ப்பந்தம்கூட இப்பொழுது இல்லை என்று நிச்சயமாகக் கூற முடியும். காரணம், லைசென்ஸிக்கு இருந்த கால அளவு தீர்ந்து விட்டது. அக்ரீமெண்ட் பீரியேடும் முடிந்துவிட்ட காரணத்தால் இப்பொழுது எந்த இடத்திலே புதிதாக பம்ப்செட் கொடுப்பதாக இருந்தாலும் அதை அரசாங்கமே போடவேண்டும். அதுமாத்திரமல்ல. அந்த ஏரியாககளிலே 'டாப் ப்ரையாரிட்டி' கொடுத்து, அந்த ஏரியாக்களுக்கு முதலிலே எல்லாக் காரியங்களும் செய்யவேண்டும் என்று திட்டம் வகுத்து அமைச்சர் அவர்கள் உத்தரவிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுவும் குறிப்பாக, சேலம் ஜில்லாவை எடுத்துக்கொண்டால், அந்த இடத்திலே கிணற்றையே நம்பி நீர்ப்பாசனம் செய்கிருர்கள். எலெக்ட்ரிக் ஸப்ளை கம்பெனியின் கையில் மின்சார விஸ்தரிப்பு எல்லாம் இருக்கிறது. அங்கு மின்சார அபிவிருத்தி சென்ற மூன்று, நான்கு ஆண்டுகளிலே அறுதி யாகக் கிடையவே கிடையாது. அதற்கு முன்னதாக அதிகமாக செய்து விட்டதாகவும் சொல்ல முடியாது. அந்த ஏரியாவிலே சர்க்காரிலே புதிய திட்டங்களை யெல்லாம் உடனடியாக அமுலுக்கு கொண்டுவந்து மின்சார சப்ளை கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது கிராமங்களுக்கு கொடுக்கக்கூடிய மின்சாரம் நல்ல முறையிலே பயன்படுகிறதா, எந்த அளவுக்கு பயன்படுகிறது என்பதைப் பற்றி நண்பர் ஸ்ரீ ஸி. ஆர். ராமசாமி அவர்கள் ஒரு சந்தேகம் கிளப்பி னுர்கள். இன்டஸ்ரீஸ்களுக்கு அதிக சப்ளை கொடுக்கவேண்டும்மென்றும் அவர்கள் தெரிவித்தார்கள். இண்டஸ்ட ரீஸ்களுக்கு சப்ளை கொடுப்பதைப்பற்றி நாங்கள் மறுக்கவில்லை. ஆனல், விவசாயததிறகு மின்சாரம் இன்றியமை யாதது. அதிலே எதாவது துர்வினியோகம் இருந்தால், அது இன்டஸ்டரீ ஸிலே இருக்கலாமே தவிர, நிச்சயமாக விவசாயத்திலே இருக்கமுடியாது. ஏனென்ருல், பூரணமாக கிராமங்களிலே விவசாயத்திற்கே உபயோகிக்கின் ருர்கள். அதனல், உணவு உற்பத்தி மிகவும் அதிகமாகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சாதாரணமாக இப்பொழுது மின்சார் சப்ளையிலே கூட முன்பு விவ சாயத்திற்கும் இன்டஸ்ட்ரீசுக்கும் என்ன பர்ஸன்டேஜ் இருந்ததோ அதே பர்ஸன்டேஜையே தொடர்ந்து கொடுக்கவேண்டுமென்ற அளவிலே ஒரு அபிப்பிராயம் இருந்து வருவதாகத் தெரிகிறது. அது இல்லையென்ருல் அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. அம்மாதிரி தொடர்ந்து பழைய பர்ஸன் டேஜையே வைப்பது என்ருல் அது நியாயமாக இருக்காது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய நாடு மிகவும் பின்தங்கிய நாடு. அதுவும் மின்சார உற்பத்தியைப் பூரணமாக விவசாயிகள் முதலிலே பயன் படுத்திக்கொள்ளவில்லை, அப்பொழுதிருந்த பர்ஸன்டேஜையே இப்பொழுது கொடுப்பது என்ருல் அதனல் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். இனி விவசாயம் செய்வதென்ருல், கிணறுகளை நம்பி நீர்ப்பாசன வசதி இருக்கும் இடத்திலே அதிகமாக மின்சாரத்தை நம்பித்தான் விவசாயம் செய்ய முடியும். ஆகையால், இன்டஸ்ட்ரீசுக்கும் விவசாயத்திற்கும் இருக்கும் பர்ஸென்டேஜை அதிகப்படுத்தவேண்டும். அப்படி இல்லாவிட் டால், முன்பு எவ்வளவு யூனிட்டுகள் அவர்கள் உபயோகித்தார்களோ அந்த யூனிட்டைக் கொடுப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை இன்னும் புதிதாக ஏற்படக்கூடிய ஸ்கீம்களிலே எல்லாம் முதலிலே விவசாயிகளுக்குப் ப்ரையாரிடி கொடுத்து இரண்டாவதுதான் இன்டஸ்ட்ரி சுக்குக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுககொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிணற்றுப்பாசனத்திற்கு மின்சார வசதி வேண்டு மென்ருல், அதிலே குறைந்தது ஐம்பது ரூபாய் மினிமம் காரண்டி கொடுக்கவேண்டும். அது தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்குக்

[Sri K. S. Subramania Gounder] [22nd April 1959

கொடுக்கவேண்டும் என்ற அளவிலே அந்த நிர்ப்பந்தம் நீடித்துக் கொண்டேயிருக்கிறது. அதைத் தளர்த்தச் செய்யவேண்டும். அதனுல், சாதாரண விவசாயிகள் வைக்க முடியாத நிலைமையிலே இருக்கிருர்கள் என்பதைப் பற்றி பல சமயங்களிலே அமைச்சரவர்களிடம் சொல்லப்பட்டது. அதிலே இரண்டு கரரியங்கள் செய்யவேண்டும். ஒன்று—ஐம்பது ரூபாய் என்பதைக் குறைத்து மினிமம் காரண்டியை முப்பது ரூபாய் என்பதாகச் செய்யவேண்டும் இரண்டாவது, பத்து ஆண்டுகளுக்கு என்று இருப்பதை சாதாரணமாக ஐந்து ஆண்டுகளாகச் செய்யலாம். முன்பு அமைச்சர் கனம் திரு. பக்தவத்சலம் அவர்கள் இந்த இலாகாவை நிர்வாகம் செய்த போது, 'இரண்டு ஆண்டுகள் வாங்கினுல் போதும் விவசாயத்திற்கு' என்ற முறையிலே சில ஆண்டுகள் அவ்வாறு கொடுத்தார்கள். அது விவசாயிகளுக்கு மிகவும் சௌகரியமாக இருந்தது. திரும்பவும் இரண்டு ஆண்டுகள் என்று செய்தால் மிகவும் நன்ருக இருக்கும். இரண்டு ஆண்டுகள் என்று செய்வதிலே கஷ்டம் என்ருல், ஐந்து ஆண்டுகளென்ரு வது செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விவசாயிகளுக்கு ஸ்டார்ட்டரும் ஸ்விட்சும் வாங்குவதிலே எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்று பார்க்கவேண்டும். கிடைக்காமல் இருப்பதில்லை. கிடைக்கிறது. ஆனுல், அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய நிர்ப்பந் தம் ஏற்படுகிறது. இந்த நிலை போகவேண்டும். சாதாரணமாக வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்தால் அதற்கு என்ன விலை அடங்குகிறது, சாதாரணமாக அதே ஸ்டார்ட்டர் ஸ்விட்ச் மார்க்கெட்டிலே என்ன விலைக்கு கிடைக்கிறது என்று சாதாரணமாகக் கண்டுபிடித்துவிடலாம், சாதாரண மாக 300 பர்ஸெண்ட் லாபத்திற்கு விற்கிருர்கள். இந்த நிலை நீடிக்கக் கூடாது. ஒன்று, அரசாங்கமே இதை வாங்கி வினியோகித்தால் மிக நல்லது. அரசாங்கம் நேரடியாக வியாபாரம் செய்வது இயலாதென்ருல் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக இந்தக் காரியத்தைச் செய்வதிலே எந்தவிதமான கஷ்டமும் இருக்காது. புதிதாக கனெக்ஷன் கொடுக்கும்போது ஒரு ஸ்டார்ட்டரும் ஸ்விட்சும் வாங்கிக்கொள்ளலாம் என்ற முறையில் ஏற்பாடு செய்வது சுலபமாக இருக்கும். அவ்வாறு செய்தால் விவசாயிகளுக்கு மிகவும் லாபகரமாக இருக்கும் என்று நான் தெரிவித் துக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே கடைசியாக இந்த சர்ச்சார்ஜைப் பொறுத்தவரையிலும் அதற்காக ஒரு கமிட்டியொன்று நியமிக்கப்பட்டிருக் கிறது, அந்தக் கமிட்டி தற்போதைய கட்டண விகிதத்தைத் திருத்தி யமைக்கும் விஷயமாக ஆலோசனை கூறும் என்ற அளவிலே சொல்லி யிருக்கிருர்கள். இதைப் பார்த்தவுடனே ஒரு பயம் ஏற்படுகிறது. சர்ச்சார்ஜை விவசாயத்திற்கும் அதிகப்படுத்திவிடுவார்களோ என்ற நிலை இருக்கக்கூடாது என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு ஏற்கனவே பல வகைகளிலும் அதிகச்செலவு ஏற்பட் டிருக்கிறது. இன்னும் சாதாரணமாக பம்ப் செட்டுகள் வாங்கி வைப்ப தென்ருல்கூட, சாதாரண விவசாயிகள் பூரணமாகப் பயன்படுத்திக்கொள்ள முடிவதில்லை. இன்னும் டாரிப் ரேட்டை அதிகப்படுத்துவதோ சர்ச்சார்ஜை அதிகப்படுத்துவதோ என்று ஏற்பாடு செய்வார்களானுல், அதனுல் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகள் கிணறுகள் வைத்து தண்ணீர் இறைப்பதாக இருந்தாலும் சரி, அல்லது கரும்பாலை வைப்பதாக இருந்தாலும் சரி அவர்களுக்கு பூரா நேரமும் மின்சாரம் கிடைக்கும்படியர்கச் செய்வதுதான் நலமாக இருக்கும். இன்னும் சுலபமாக அவர்கள் வேலை செய்வதற்கு வசதியாக இருக்கும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே விவசாயத் தைப் பெருக்குவதற்கு வழி செய்யவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மின்சார இலாகாவும் அதில்

வேலே செய்யக்கூடிய உத்தியோகஸ்தர்களும் நல்ல முறையில் வேலே செய்து வருகிருர்கள். அவர்களுக்கு அதிகப்படியான வேலே இருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் செய்யும் வேலேகளில் கால தாமதம் ஏற்படுகிறது. இப்படி கால தாமதம் ஆகிறது என்று சொல்வது மிகையாகாது. நிச்சய மாகச் சொல்ல முடியும். எந்த அளவுக்கு ஸ்கீம்கள் அதிகமாக இருக்கி றதோ அந்த அளவுக்கு உத்யோகஸ்தர்களும்அதிகமாக இருக்க வேண்டும். அதன் காரணமாகத்தான் பல ஸ்கீம்கள் நிறைவேற்றுவதில் கால தாமதம் ஏற்படுகிறது. விண்ணப்பங்களே சுலபமாகப் போட்டுவிடலாம். ஆனுல் அவைகள் நிறைவேற வேண்டும். விண்ணப்பங்கள் ஒரு ஏரியாவில் எவ் வளவோ அதிகமாக இருக்கிறது. அதன் காரணமாக அதிகப்படியான உத்யோகஸ்தர்களே நியமிக்கவேண்டியதாக இருக்கிறது.

சேலத்தில் இருக்கக்கூடிய பே அண்ட் அக்கௌண்ட்ஸ் ஆபீஸை சேலத் திலிருந்து திருச்சிக்கு மாற்றியிருக்கிருர்கள். சங்கரியிலிருந்து திருச்சிக்குப் போவதாக இருந்தால் எவ்வளவோ கஷ்டமாக இருக்கிறது. இதைப்பற்றி யும் கனம் அமைச்சர் அவர்கள் யோசனே செய்யும்படியாகவும் கேட்டுக் கொள்ளுகிறேன். சேலத்தில் அதிகப்படியாக வேலே இருக்கிறது என்று கருதினுல் சேலத்திலேயே இன்னும் அதிகப்படியாக நான்கு குமாஸ்தாக் களே நியமித்துக்கொண்டிருக்கலாம். அப்படி நியமித்தால் அங்குள்ள காரி யங்கள் நல்ல முறையில் நடைபெறும், வேலேயும் குறையும். விவசாயி களுக்கும் நலம் தரும் என்பதை சொல்லிக்கொண்டு நான் இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

(Mr. Speaker in the Chair.)

Sri S. RAMASAMI THEVAR : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மின்சார இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய சென்னே மாநில போர்டின் நிதி நிலே அறிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளேச் சொல்ல விரும்புகிறேன். மின்சாரம் நமது நாட்டில் வளர்ந்து வருவதைக் கண்டு நாம் ஓரளவு மகிழ்ச்சி அடைய வேண்டிய தாக இருக்கிறது. மின்சாரத்தின் மூலமாக உழைப்பும் கொஞ்சம் குறை கிறது, அதிகப்படியான வசதியும் பெறுகிருேம். அப்படிப்பட்ட மின்சாரத் தை நாம் அதிகப்படியாக விவசாயத்திற்கு உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்று நான் கனம் அமைச்சர் அவர்களேக் கேட்டுக்கொள்ளுகிறேன். நாட்டின் உணவு உற்பத்தி குறைவாக இருக்கிறது. நமது நாட்டின் தேவையான அளவுக்கு உற்பத்தி இல்லே. இன்னும் அதிகப்படியாக உற் பத்தி செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதனுல் உற்பத்தியைப் பெருக் குவதற்கு மின்சாரம் தேவையாக இருக்கிறது. அதனுல் கிராமங்களுக்கு அதிகப்படியான மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தற்போது கிராமங்களில் இரவில்தான் மின்சாரத்தைக் கொடுக்கிருர் கள். இரவு நேரங்களில் நீர்பாசனம் செய்வதாக இருந்தால் ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. இரவு நேரங்களில் தண்ணீர் பாய்ச்சுவது என்பது சௌகரியமானது அல்ல. பல கஷ்டங்களே அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது. மேடுகளில் சிறு துவாரம் இருந்தாலும் அதன் மூலமாக தண்ணீர் போய்க்கொண்டே இருக்கும், அதை கவனிக்கவே முடியாது. அதனுல் பெரிய அளவில் தண்ணீர் சேதமாகப் போய்விடும். நாம் எவ்வ ளவு கவனமாக இருந்தாலும் நண்டு முதலிய ஜந்துக்கள் மேடுகளில் துவாரம் செய்து விடுகின்றன. அதனுல் தண்ணீர் பாயாமல் போய் விடுகிறது. அப்படிப்பட்ட கஷ்டங்கள் இருப்பதால் தண்ணீர் பாய்ச்சுவதற்கு இரவு நேரங்களில் மின்சாரத்தைக் கொடுக்காமல் பகல் நேரங்களில் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயம் நமது நாட்டில் முக்கியமான வேலேயாக இருப்பதால் விவசாயிகளுக்கு அதிகப்படியான

சலுகைகள் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதையே நான் அடிக்கடி சொல்லிக்கொண்டு வந்தாலும் மீண்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கிராமங்களுக்கு அதிகப்படியாக மின்சாரம் வழங்கப் பட்டாலும இன்னும் எவ்வளவோ கிராமங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தாக இருக்கிறது. எல்லா கிராமங்களுக்கும் அது இன்னும் பரவவில்லை. ஓரளவு கிராமங்களில் மின்சாரம் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. சில பகுதிகளுக்கு பரவி இருந்தாலும் கூட எல்லா பகுதிகளுக்கும் பரவவில்லை என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக எடுத்துக் கொண்டால் அறந்தாங்கி தாலூகாவில் சில கிராமங்களுக்கு பரவவில்லை, நகரத்தில்தான் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. அங்கே தொழிலுக்கு மாத்திரம் தான் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. பக்கங்களிலுள்ள கிராமங்களில் விவசாயத்திற்கு உபயோகப்படுத்துவதற்கு இன்னும் சர்க்கார் அங்கே விரிவு படுத்தவில்லை என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக அறந்தாங்கி தாலூகா வட பகுதியில் புஞ்சைப் பிரதேசம் தான். அங்கே இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை, அங்கேயெல்லாம் கிணறுகளிலிருந்து எற்றம் போட்டு கவலை அடித்துத்தான தண்ணீர் பாய்ச்ச வேண்டியதாக இருக்கிறது. அதனால் அங்குள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். 400 அல்லது 500 ரூபாய்க்கு மாடுகள் வாங்கி தண்ணீர் பாய்ச்சினால், அடுத்த வருஷம் அந்த மாட்டின் விலை 100 அல்லது 200 ரூபாய்க்குக் கூட போக மாட்டேன் என்கிறது. இந்த அளவுக்குக்கூட அந்த மாடுகளை விற்க முடியவில்லை என்றால் விவசாயி கள் எந்த அளவுக்கு பாதிக்கப்படுவார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அதனால் அப்படிப்பட்ட பகுதிகளுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைபபற்றி கனம் அமைச் சரிடம் பன்முறை சொல்லியபோதிலும் கூட மறுமுறையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக எம்பலுக்கும் ஆவடையார்கோவிலுக்கும் ஐந்து மைல் தான் இருக்கும். எம்பலில் மின்சாரம் இருக்கிறது. ஆவடையார் கோவி லில் இல்லை. அங்கே 150 ரூபாயிக்கு மேல் மின்சாரத்தை உபயோகப் படுத்த மாட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். அங்கே ஆயிரம் ரூபாயிக்கு மேல் மின்சாரத்தை உபயோகப்படுத்த வசதி இருக்கிறது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே அந்தப் பகுதிக்கும் உடனடி யாக மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக அறந்தாங்கி வட பகுதியில் மின்சாரத்தை விஸ்தரித்தால் விவசாயிகளுடைய கஷ்டம் நீங்குவதோடு கூட விளைச்சலும் அதிகமாக ஆகும் உற்பத்தியையும் பெருக்க முடியும்; அதனால் மக்களுக்கும் சௌகரி யம் ஏற்படும், நாட்டிற்கும் நன்மை ஏற்படும் என்பதைச் சொல்லிக்கொண்டு என் பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன், வணக்கம்.

*Sri P. G. MANICKAM : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் மின்சார மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய அறிக்கையை வரவேற்று சில விஷயங்களை அறிவிக்க விரும்புகிறேன். கனம் சபாநாயகர் அவர்களே, மின்சாரமானது நமது சென்னை மாகாணத்தில் அதிகமான அளவு இப்பொழுது உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது, சப்ளை செய்யப்பட்டும் வருகிறது. இந்த அளவில் நமது நாட்டிலேயே நமது மாகாணம் மூன்றுவது ஸ்தானத்தில் இருக்கிறது, அதிலும் குறிப்பாக விவசாய விஷயமாக மின்சாரம் சப்ளை செய்வதில் முதலிடம் பெற்றிருக்கிறது. இதற்கு நாம் சம்பந்தப்பட்ட அமைச்சரையும் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் பாராட்ட வேண்டியவர்களாக

22nd April 1959] [Sri P. G. Manickam]

இருக்கிருேம். மின்சாரமானது எப்படி விவசாயத்திற்கு அத்தியாவசிய தேவையாக இருக்கிறதோ அதே பிரகாரம் தொழில்களைப் பெருக்குவதற்கும் அத்தியாவசியமாக இருப்பதற்கு சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு நமது சர்க்கார் அங்கங்கே அட்வைசரி கமிட்டியை நியமிக்க பிரயாசை எடுத்துக்கொண்டு வருகிருர்கள். அட்வைசரி கமிட்டி நியமிப்பதற்குள்ள விஷயங்கள் எவ்வாறு நடைபெற்று வருகிறது என்பது திட்டவட்டமாக விளங்கவில்லை. கூடிய சீக்கிரம் அங்கங்கே ஒவ்வொரு ஜில்லாவிலும் அட்வைசரி கமிட்டிகளை நியமித்து அதன் மூலமாக என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்து அமுலுக்கு கொண்டு வருவதற்கு சர்க்கார் தீவிர முயற்சி எடுக்கும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனத்தெருக்களில் விளக்குகள் சப்ளை செய்யவேண்டும் என்பதைப்பற்றி நான் சில சங்கதிகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1957-ம் வருஷம் செப்டம்பர் மாதம் நடந்த மகாநாட்டில் ஹரிஜன தெருக்களுக்கு விளக்குகள் சபளை செய்யவேண்டும் என்றும், அதில் தீவிர அக்கரை கொளள வேண்டும் என்றும் சீப் இஞ்சினியர் அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. ஹரிஜன தெருக்களுக்கு சப்ளை செய்வது எனபது அங்கங்கே நடைபெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேலும் மேலும் காரியங்கள் தீவிரமாக செய்யப்படவேண்டும். இது வரைக்கும் 7,772 கிராமங்களுக்கு மின்சார சப்ளை செய்யப்பட்டிருக்கிறது. 1959–60-ல் இன்னும் 800 கிராமங்களுக்கு மின்சார சப்ளை செய்யப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. எல்லா கிராமங்களிலுமுள்ள ஹரிஜன தெருக்களுக்கு மின்சார விளக்குகள் வழங்கப்படவேண்டும். அப்படிச் செய்வதற்கு 17 லட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது அதில் நாலு லட்சம் ரூபாய் தான் இது வரைக்கும் செலவிடப்பட்டிருக்கிறது. இன்னும் நமது சர்க்கார் அறிக்கையில் நாம் குறிப்பாக பார்த்தால் வருஷந்தோறும் ஆயிரம் கிராமங்களுக்கு மின்சார சப்ளையை அதிகரிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆக இந்த வேகத்தில் ஹரிஜன இலாகா மூலமாக தொகை ஒதுக்கப்பட்டு காரியங்கள் நடந்து கொண்டு போகுமானல் எல்லா ஹரிஜன காலனிகளுக்கும் மின்சாரத்தை விஸ்தரிக்க அதிக காலம் ஆகும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதனல்தான் இன்று நடைபெற்ற கேள்வி நேரத்தின் போது இதைத் தெரிவித்தேன். இதற்காக சர்க்காரால் ஒரு திட்டம் வகுக்கப்படவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டு திட்ட இறுதிக்குள்ளாகவாவது எல்லா ஹரிஜன சேரிகளுக்கும் மின்சார சப்ளை செய்வதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்படவேண்டும். அதற்காக ஒரு தொகை ஒதுக்கபபட்டு இன்னும் காரியங்கள் ஆங்காங்கு வேகமாக நடைபெற்ருலொழிய எல்லா ஹரிஜன சேரிகளிலும், இப்போதுள்ள ரீதியில் போனல் அதிக காலம் ஆகும் விளக்கு எரிய. இதற்காக ஒரு திட்டம் வகுக்கப்படவேண்டும், பணம் ஒதுக்கப்படவேண்டும் என்பதுதான் எனது தாழ்மையான அபிப்பிராயம். ஆகையால் இது சம்பந்தமாக சர்க்கார் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 3 p.m.

அதுவும் கோயம்புத்தூரில் நடைபெற்ற மின்சார போர்டு அட்வைசரி போர்டில் என்ஜினியர்கள் என்ன சொல்கிருர்கள் என்ருல்—பஞ்சாயத்து போர்டுகள் தாங்களே மின்சார சார்ஜ்ஜை ஏற்றுக்கொள்ள முன் வந்தால் நாங்கள் லைட் போட்டுக்கொடுக்கத் தயாராய் இருக்கிருேம் என்கிருர்கள். ஆனல் அந்த பஞ்சாயத்து போர்டுகளினல் கரண்டு சார்ஜை ஒத்துக்கொண்டு லைட் போட முடியவில்லை. இதைத்தான் நான் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தேன். இதை சர்க்காரே ஏற்றுக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் இப்போது அறிக்கையில் சொன்ன பிரகாரம் ஒரு சேரியில் இரண்டு

மூன்று லைட்டுகள் போட்டால் ஒரு மாதத்திற்கு குறைந்தது ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்தான் கரண்ட் சார்ஜ் ஆகும். இதை ஏன் பஞ்சாயத்து போர்டுகள் ஏற்றுக்கொள்ளக்கூடாது ? அத்தியாவசியமாக இதைச் செய்ய வேண்டும் என்றால் அவ்வாறு அத்தியாவசியத் தேவையாகச் செய்ய வசதி ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இது சம்பந்தமாக நமது மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "பஞ்சாயத்து பிரதேசங்களில் போடும் எல்லா மின்சார விஸ்தரிப்பு திட்டங்களிலும் ஹரிஜன காலனியில் ஒரு சில தெரு விளக்குகள் போடுவதை சேர்த்துக்கொள்ளுமாறு பஞ்சாயத்து சபையை இணங்கச்செய்ய வேண்டும் என்பது போர்டாரின் கொள்கையாக நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்." இந்த மாதிரியாகப் போடப்படுகிற நிபந்தனையை வரவேற்கிறேன். ஆனால் முன்பே விளக்குப் போடப்பட்டுள்ள பஞ்சாயத்துகளில் என்ன செய்வது ? இன்னும் குறைந்தது எட்டாயிரம் சேரிகளுக்கு சப்ளை ஆகவேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகையால் கூடிய சீக்கிரம் எல்லா சேரிகளுக்கும், மின்சாரத்தை சப்ளை செய்வதற்கு ஒரு திட்டம் வகுக்கப்படவேண்டும் என்று நான் சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தற்போது மின்சார சப்ளை செய்வதற்கு எட்டு கம்பெனிகளுக்கு லைசென்சு கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அதில் 6 கம்பெனிகளுக்கு 59–60, 60–61 வேலைக்காக 88 லட்சம் ரூபாய் கடன் கொடுப்பதற்கு மின்சார போர்டார் அங்கீகாரம் செய்து சர்க்காருக்கும் அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. விநியோக அதிகாரத்தை முனிஸிபாலிட்டிகளுக்கும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் தனிப்பட்ட கம்பெனிகளுக்கும் கொடுத்து, கடனும் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய காரணம் என்ன ? இதை முனிஸிபாலிட்டிகளுக்கே கொடுத்தால் முனிஸிபாலிட்டிகளுக்கு வருமானமும் அதிகப்படும். அதனால் ஜனங்களுக்கும் நன்மை ஏற்படும். ஆகவே தனிப்பட்ட கம்பெனிகளுக்கு லைசென்சு கொடுப்பது, கடன் கொடுப்பது என்பதில் பிரயோஜனம் இல்லை என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். எல்லா இடங்களிலும் முனிஸிபாலிட்டிகளுக்கு லைசென்சு கொடுத்து, கடன் கொடுத்து, இந்த மின்சார விநியோகத்தை நடத்தும்படியாகச் செய்யலாம். இதனால் முனிஸிபாலிட்டியின் வருமானம் அதிகப்படும்படியாகச் செய்யலாம். மின்சார இலாகா வேலையும் குறைகிறது. ஆகையால் இது விஷயத்தில் சர்க்கார் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* Sri A. R. SUBBIAH MUDALIAR : தலைவர் அவர்களே, சென்னை மாநில மின்சார போர்டின் 1959–60-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இன்று அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அதில் ரூரல் எலெக்ட்ரிபிகேஷனுக்காக நான்குகோடியே முப்பத்தெட்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்திருப்பது மிகவும் முன்னேற்றகரமான பாதைக்கு வழிவகுக்கிறது. 58–59-ல் $4\frac{1}{2}$ கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது. 59–60-க்கும் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரி வருங்காலத்திற்கு 800 கிராமங்களுக்கு மின்சார வசதி கொடுக்கப்போவதாகவும் தெரியவருகிறது. இதன் மூலமாகத்தான் ஒவ்வொரு கிராமமும் அபிவிருத்தி அடையவும், நாடு முன்னேற்றம் அடையவும் வசதி ஏற்படும். அத்துடன் கிராமப்பகுதிக்கு மின்சாரம் அதிகத் தேவைப்படுகிறது. அங்கெல்லாம் நல்ல முறையில் மின்சார விநியோகம் செய்யப்படும் என்ற நம்பிக்கை இருந்தாலும் இந்த அறிக்கையை வாசிக்கும்போது ஒரு பயம் உண்டாகிறது. குறிப்பாக அறிக்கையின் 10-வது பக்கத்தில் 17-வது பாராவில் "மின்சார விஸ்தரிப்புத் திட்டச் செலவுகளைப் பார்க்கும்போது, தற்போதைய விலைவாசிகள், தொழிலாளர் சம்பளம் முதலியன அதிகரிப்பால் விஸ்தரிப்புத் திட்டங்கள் மூலம் 18·2 சதவிகித வருமானமாவது கிடைத்தால்தான் கட்டுப்படியாகும்" என்று சொல்லப்படுகிறது. மேலும்,

22nd April 1959] [Sri A. R. Subbiah Mudaliar]

" இதை மனதில் கொண்டு பார்க்கும்போது இப்போது போர்டார் வலியுறுத்தும் 10 சதவிகித நிர்ணயம் மிகக் குறைவானதே என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர் " என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். " மின்சார போர்டுக்கு நஷ்டம் ஏற்படாமல் அதே சமயத்தில் விவசாயிகளுக்கு விசேஷ உத்தரவாத விஷயமாக நிவாரணம் தர முடியுமா என்பதே இப்போதைய முக்கிய கேள்வி " என்பதையும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். " இந்தப் பிரச்சனையை ஆராய்ந்து மூன்று மாதங்களுக்குள் சிபாரிசுகள் செய்ய உயர்தர அதிகாரிகள் கொண்ட கமிட்டி ஒன்றை அரசாங்கம் அமைத்துள்ளது. விவசாயிகளுக்குப் பெருமளவில் உதவக்கூடிய வகையில் இப் பிரச்னைகளுக்குப் பரிகாரம் காட்டி கூடிய சீக்கிரம் ஒரு புதிய ஏற்பாட்டை உருவாக்க கமிட்டியினர் வழி காண்பர் என்று நம்புகிறேன் " என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த அறிக்கையை பார்க்கும்போது விவசாயிகளுக்கு பரிகாரம் காணமுடியுமா என்ற கவலை ஏற்படுகிறது. அதிகாரிகளைக் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய அறிக்கையில் 10% என்று இருப்பது 18·2% என்பதாக மாற்றக்கூடிய நடவடிக்கையை எடுத்துக்கொள்வார்களோ என்கிற பயமும் ஏற்படுகிறது. ஏனென்றால் போர்டு வந்த பிற்பாடு லாபகரமான ஒரே குறிக்கோளுடன்தான் திட்டம் வகுக்கப்படுகிறது. லாபகரமாக இருக்கவேண்டும் என்பதை கொள்கை அளவில் ஒப்புக்கொண்டாலும் நாடு முன்னேற்றம் அடையும் வரையில் லாபத்தை கவனிக்கக்கூடாது. ஓரளவு லாப நஷ்டம் இல்லாமல் கொண்டு போனால் போதும் என்பதுதான் சரியான கொள்கை. இதை 18·2% என்று உயர்த்துவதானால் நிச்சயமாக முன்னேற்றம் தடைபடலாம். இதை ஜனங்களும் வரவேற்கமாட்டார்கள்.

The Hon. Sri V. RAMAIAH : 18·2% என்று உயர்த்தப்போவதாக எங்கே சொல்லப்பட்டிருக்கிறது ? 18·2% என்று இருந்தால்தான் கட்டுபடியாகும். ஆனால் இப்போது 10% என்றுதான் கொடுத்துக்கொண்டு வருகிறோம். இன்னும் ஏதாவது சலுகை அவர்களுக்குக் கொடுக்க முடியுமா என்பது பரிசீலனை செய்யப்படுவதாகத்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகையால் இதை 18·2% ஆக உயர்த்தப்போகிறோம் என்ற தப்பான எண்ணம் வேண்டாம் என்று சொல்ல விரும்புகிறேன்.

Sri A. R. SUBBIAH MUDALIAR : அப்படியானால் மிகுந்த சந்தோஷம். நான் வாசித்த இரண்டு பாராவையும், கடைசி பக்கத்தில் உள்ள பாராவையும் சேர்த்துப் பார்க்கும்போது கொஞ்சம் கட்டணத்தை உயர்த்தி விடுவார்களோ என்கிற பயம் ஏற்பட்டதைத்தான் நான் குறிப்பிட்டேன். ஆகையால், இதைத் தெளிவுபடுத்தியதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அட்வைசரி போர்டு பற்றிச் சொல்லும்போது ப்ளானிங் கமிட்டியில் இணைக்கப்படும் என்று அறிக்கையில் கண்டிருக்கிறது. ப்ளானிங் போர்டு 3 மாதத்திற்கு ஒருமுறைதான் கூட்டப்படும். எல்லா இலாகாக்களைப் பற்றியும் அங்கு கவனிக்கப்படும். மின்சார சம்பந்தமாய் அடிக்கடி ஏற்படும் குறைகளை நீக்குவதற்கு தனி அட்வைசரி போர்டு நியமித்தால்தான் நன்றாக இருக்கும். ஒவ்வொரு ஜில்லா அட்வைசரி போர்டு தனியாக எடுத்துக்கொண்டு பரிசீலித்தால் ஆங்காங்கு இருக்கக்கூடிய கஷ்டத்தைத் தெரிந்துகொள்ள முடியும். அல்லது ஒரு அஸிஸ்டெண்ட் எஞ்சினியர் பகுதிக்கு ஒரு அட்வைசரி போர்டு என்று வைத்துக்கொண்டால் அங்கிருக்கும் குறைகளைத் தெரிந்து நிவர்த்தி செய்ய வழி ஏற்படும். இதைக் கொண்டு போய் டிஸ்ட்ரிக்ட் ப்ளானிங் போர்டோடு இணைப்பதன் காரணமாக பலன் ஏற்படாது. தனி போர்டாக இருந்தால்தான் இருக்கக்கூடிய கஷ்டங்களை அறிந்து அதைப் போக்கமுடியும்.

[Sri A. R. Subbiah Mudaliar] [22nd April 1959

சில சமயங்களில் மின்சாரம் திடீரென்று தடைப்பட்டு விடுகிறது. சாதாரணமாக மழை அதிகமாகப் பெய்து விட்டால் மின்சாரம் தடைபட்டு விடுகிறது. கிராமத்தில் இருக்கும் சூபர்வைசர்கள் செக்ஷன் ஆபீசர்களுக்குத் தெரிவித்து மறுபடியும் மின்சாரத்தைக் கொண்டு வருவதற்குள் அரை நாளோ அல்லது 6 மணி நேரமோ ஆகிவிடுகிறது. இந்த தாமதத்தைப் போக்க ஒவ்வொரு செக்ஷன் ஆபீசர்களுக்கும் டெலிபோன் வசதி இருந்தால் நல்லது என்று கூற விரும்புகிறேன். அது இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும். ஸ்டேட் லெவலில் ஒரு போர்டு இருந்து கொண்டிருக்கிறது. வருஷந்தோறும் புதுப்பித்து கொண்டிருக்கிறார்கள். அது சரியல்ல. குறைந்தது 3 வருஷம் (State Advisory Board) ஆயுளாக நிர்ணயம் செய்யவேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் கொள்கையை நிறைவேற்ற முடியும். போர்டில் " நான்-அபிஷியல் மெம்பர்கள் " ரொம்பக் குறைவாக இருந்து கொண்டிருக்கிறார்கள். சமமாக " நான்-அபிஷியல்" மெம்பர்களுக்கு ஸ்தானம் கொடுத்தால் ஜனங்களுடைய கஷ்டத்தை நேரடியாகத் தெரிந்தவர்கள் அதை எடுத்துக் கூற முடியும். ஆதலால் ஜனப் பிரதிநிதிகள் பாதி போராவது இருந்தால் நல்லது.

" இரிகேஷன், எலக்ட்ரிசிடி " இரண்டும் வேறு வேறு இலாகாக்கள், பாபநாச நீர்தேக்கத்தில் செயல்படுகிறார்கள். எதாவது தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று மந்திரி கூறியிருந்தால்கூட மின்சார போர்டு அல்லது இலாகாவை கலந்துதான் முடிவு செய்யவேண்டியிருக்கிறது. ஆதாலால் P.W.D. மந்திரியின் தீர்மானத்தை உடனடியாக நிறைவேற்ற தடை ஏற்படுகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் அந்தக் கஷ்டத்தை அனுபவித்தோம். தண்ணீர் கஷ்டம் வரும்போது அணையில் தண்ணீர் திறந்துவிடவேண்டுமென்று சொல்லும்போது மின்சார இலாகாவின் தடை ஏற்படுகிறது. மந்திரியவர்கள் சொன்ன வாக்குறுதியைக்கூட நிறைவேற்ற முடியாதபடி ஒற்றுமைக் குறைவு இருக்கிறது.

THE HON. SRI P. KAKKAN : மந்திரிகளுக்குள் ஒற்றுமைக் குறைவு ஒன்றும் கிடையாது.

* SRI A. R. SUBBIAH MUDALIAR : மந்திரிகளுக்குள் ஒற்றுமைக் குறைவு என்று சொல்லவில்லை. இலாகாக்களுக்குள் ஒற்றுமைக் குறைவு என்று சொன்னேன். இதனால் எங்களுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. இப்படிபட்ட இடங்கள் தான் போர்டின் கீழ் இருக்கவேண்டும். இரண்டு இலாகா கூடாது. " மூன்றாவது திட்ட காலத்தில் மின்சார சப்ளை பற்றாக்குறை இருக்கலாம். அப்போது, மின்சாரத் தேவையானது, மின்சார உற்பத்திச் சக்தியை மீறியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது " என்று மந்திரியவர்கள் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். இந்த மாதிரிக் கஷ்டம் எதிர்ப்பார்க்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லா தவறாமல் தெர்மல் ஸ்டேஷன்களை அமைப்பதன் மூலமாக இந்தக் கஷ்டத்தைத் தவிர்க்கமுடியும். ஆகவே, ஜில்லா வாரியாகத் தெர்மல் ஸ்டேஷன்கள் ஏற்படுத்தினால் நலமாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன். இப்பொழுது குரூப் சிஸ்டத்தை மாற்றியமைத்து ஒரு நாளைக்கு 8 மணி நேரம் சப்ளை செய்வது என்று முடிவு செய்திருப்பதை வரவேற்கிறேன். ரொம்பக் கஷ்டப்பட்டு முடிவு செய்திருக்கிறார்கள். " கூடிய சீக்கிரத்தில் groups system–தை எடுக்க எக்ஸ்பரிமெண்டலாக ஒருபகுதி பார்க்கப் போகிறோம் " என்று அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். கனம் அங்கத்தினர் சுப்பையா அவர்கள் சொன்னமாதிரி பின்னடைந்த ஜில்லா எங்கள் ஜில்லா. தண்ணீர்த் திட்டம் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். கட்டுபாடு இல்லாமல் மின்சாரமாவது கொடுக்கவேண்டுமென்று மந்திரியவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதிகமான பம்ப்செட் உள்ள பகுதி, சங்கரன் கோயில், நாங்குநரி எரியா ஆகியவைகளில் மின்சாரம் அதிகமான அளவு

விஸ்தரிக்கப்படவில்லை. பம்ப் செட்டுகளைப்பற்றிச் சொல்லும்போது ஒரு வார்த்தை சொல்லப் பிரியப்படுகிறேன். கம்பெனி மூலம் சப்ளை செய்யும் போது அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. அதைச் சர்க்கார் ஏற்று நடத்தினால் அதனால் சர்க்காருக்கு லாபம் கிடைக்கும். ஜனங்களுக்கும் நன்மை ஏற்படும். குறைந்த விலைக்குக் கிடைக்க வழி ஏற்படும்.

மின்சார ஸ்தாபனங்கள் தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமாக இருப்பதன் காரணமாகப் பலவிதமான கஷ்டங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. பண வசதி இன்மையால் சர்க்காரே உடனடியாக அவைகளை எடுத்து நடத்த முடியவில்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைக் கவனிக்க இன்னொரு வழி இருக்கிறது. ஒவ்வொரு லைசன்ஸ்தாரரையும் கவனிக்க சர்க்கார் மேற்பார்வையில் ஒரு உத்தியோகஸ்தரை நியமனம் செய்யலாம். தனிப்பட்டவர்கள் நடத்தும் மின்சார கம்பெனிகளை சர்க்கார் எடுத்து விடுவார்களோ என்ற காரணத்தால் முன்னேற்றமே இல்லை. மானேஜ்மெண்ட்டை போர்டு அல்லது சர்க்காரே வைத்துக்கொண்டால் அந்த இடங்களில் விஸ்தரிக்கமுடியும். தெர்மல் ஸ்டேஷனோடு அடாமிக் எனர்ஜி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய வழி செய்தால் நலமாக இருக்கும்.

SRI M. JANGAL REDDIAR : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நாட்டுக்கு மின்சாரம் ரொம்ப முக்கியமானது. இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். லாப நஷ்டத்தைப்பற்றி அரசாங்கம் கவனிக்காமல் மின்சார விஷயத்தில் தாராளமாகச் செலவு செய்து எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். திண்டிவனம் தாலூகாவில் 120 கிராமங்களுக்கு சர்வே செய்ததில் 10 கிராமங்களுக்குத்தான் மின்சாரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். மீனம்பாக்கத்தில் உள்ள 7, 8 கிராமங்களில் மின்சார விஸ்தரிப்பு சம்பந்தமாக நாளது வரை எந்த வித விமோசனமும் ஏற்படவில்லை. அந்தக் கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சில இடங்களில் இரவில் மின்சாரம் சப்ளை செய்கிறார்கள். இரவில் சப்ளை செய்தால் உழவன் எவ்வாறு உழவு மாட்டை ஓட்டி நிலத்தைப் பண்படுத்த முடியும் ? பகலிலும் கொஞ்ச நேரம் மின்சாரம் சப்ளை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால்தான் விவசாயம் சரிவர நடைபெறும்.

அப்படிக் கொடுத்தால்தான் கிராமங்களில் விவசாயத்தை நல்லமுறையில் செய்யமுடியும். ஆகவே, விவசாயிகளுக்கு, பகல் நேரத்தில் தண்ணீர் இறைப்பதற்கு மின்சாரம் கொடுத்தால்தான் அவர்களுக்கு உபகாரமாயிருக்குமென்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்தபடியாக, விழுப்புரம் கம்பெனியில் இருக்கும்போது எந்த ரேட் இருந்ததோ அதே ரேட்தான் இன்றும், அந்தக் கம்பெனியை அரசாங்கம் எடுத்துக்கொண்டு வருடம் ஒன்றாகியும்கூட இன்றும் அதே ரேட்டில்தான் வசூல் செய்யப்படுகிறது. அந்த ரேட் அதிகப்படியானதாகும். ஆகவே, அதே ரேட்டில் இப்பொழுது வசூல் செய்வது என்பது நியாயமல்ல. மற்ற ஜில்லாக்களில் என்னவிதம் வசூல் செய்யப்படுகிறார்களோ அதே போல் அங்கும் வசூல் செய்யப்படவேண்டும். ஒரு மோட்டார் பம்ப் தயார் செய்தால் அதற்கு இரண்டு ஸ்டார்ட்டர்கள் இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஒரு ஸ்டார்ட்டர் ஷெட்டிலும் ஒரு ஸ்டார்ட்டர் ஸ்தம்பத்திலும் இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் இப்பொழுது இந்த ஸ்டார்ட்டர்கள் கிடைப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. அப்படிக் கிடைத்தாலும் அதிக விலை கொடுத்து அவைகளை விவசாயிகளால் வாங்க முடியவில்லை. செங்கல்பெட்டை எடுத்துக்கொண்டால் அங்கு ஒரு ஸ்டார்ட்டர் ஷெட்டில் இருந்தால் போதும். ஆனால் ஸவுத் ஆர்க்காட்டை எடுத்துக்

கொண்டால் இரண்டு இருக்கவேண்டியிருக்கிறது. ஒரு ஸ்டார்ட்டர் ஷெட்டிலும், மற்ருென்று ஸ்தம்பத்திலும் இருக்கவேண்டுமென்று அங்குள்ள என்ஜினியர் சொல்கிருர். ஆகவே அப்படியில்லாமல் ஒரு ஸ்டார்ட்டர் இருந்தாலே போதுமானது என்று ஒரு உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, ஒரு ஹார்ஸ் பவருக்கு மினிமம் சார்ஜ் 50 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சில கிராமங்களில், கிணறுகளில் இறைப்புக்காக ஒரு நாளில் இரண்டல்லது மூன்று மணி நேரம்தான் ஜலம் கிடைக்கிறது. அப்படியிருக்கும்போது, அங்கு வருடமொன்றுக்கு மினிமம் சார்ஜ் 50 ரூபாய் என்று சொல்லும்போது, அதைக்கட்ட முடியாமல் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிருர்கள். ஆகவே, ஹார்ஸ் பவர் ஒன்றுக்கு 25 ரூபாய் என்று அந்தக் கட்டணத்தைக் குறைக்கவேண்டுமாறு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படியானல் ஏழை விவசாய மக்களுக்கு கஷ்டமிராது. அப்படியிருந்தால் கூடுதல் பம்ப் செட்களை பக்கத்திலுள்ள கிணறுகளுக்கு போட்டுக்கொள்ள உதவிகரமாயிருக்கும். சில கிராமங்களில் ஹார்ஸ் பவர் ஒன்றுக்கு மினிமம் சார்ஜ் 65 ரூபாய் என்றிருக்கிறது. சில யிடங்களில் ஹார்ஸ் பவர் ஒன்றுக்கு 50 என்றிருக்கிறது. சிலயிடங்களில் 15 ரூபாய் என்றும் இருக்கிறது. இதற்கு பத்து வருஷத்திற்கு அக்ரிமெண்ட் கொடுத்திருக்கிருர்கள. எலெக்டிரிக் மோட்டார்கள் இப்பொழுது சரிவர கிடைப்பதில்லை. ஆகவே, அவைகளை அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக மின்சாரத்தைப்பற்றி நாம் ஒரு புதுச் சட்டம் கொண்டுவருவதாயிருந்தாலும் அல்லது அதை விஸ்தரிக்க வேண்டுமென்ருலும் அனுபவம் பெற்ற விவசாயிகளையும், பெரிய மில் ஓனர்களையும், மின்சார அதிகாரிகளையும் கலந்து ஒரு கமிட்டி போட்டு யார் யாருக்கு என்னென்ன சௌகரியங்கள் இருக்கின்றன, யார் யாருக்கு என்னென்ன கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் ஆலோசித்து திட்டம் வகுக்கவேண்டும். ஆனல் இப்பொழுது அப்படிச் செய்வதாகத் தெரியவில்லை. ஒரு கிராமத்தில் எலெக்டரிக் சர்வீஸ் கொடுக்கப்பட்டிருந்தும் அதன் பக்கத்திலுள்ள கிணறுகளில் பம்ப் செட்கள் வைப்பதற்கு மின்சாரம் கிடைப்பதற்கு வருடக் கணக்காகிறது. ஆகவே பக்கத்திலுள்ள விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதற்கு அரசாங்கம் அந்த இலாகா அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். செஞ்சியை எடுத்துக்கொண்டால் அங்குள்ள கிணறுகளில் இறைப்பிற்கு நாள் ஒன்றுக்கு இரண்டல்லது மூன்று மணி நேரம்தான் ஜலம் கிடைக்கிறது. அங்கு நல்ல விளை பூமிகள் இருந்தும்கூட ஜலம் இல்லாமல் மக்கள் கஷடப்படுகிருர்கள். ஆகவே, செஞ்சி தாலூகாவில் உடனடியாக மின்சாரத்தை தீவிரமாக விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

*SRI K. B. S. MANI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த மாகாண மின்சார நிதிநிலை அறிக்கையையொட்டி நான் இரண்டொரு வார்த்தைகள் பேச விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய அங்கத்தினர்கள் எல்லோரும் இந்த அறிக்கையை வரவேற்று பேசியபோதிலும் பல குறைகள் இதில் இருக்கின்றன என்று எடுத்துக் கூறினர்க்ள். இருப்பினும், அவர்கள் பேசுகிற குறைகள் அவர்கள் எடுத்துச் சொல்கிற நிலைமைகள் எந்தளவிற்கு அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பதுதான் விசித்திரமாகயிருக்கிறது. மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள், மக்களிடம் நேரடியாக தொடர்புள்ள நாங்கள் மக்களின் குறைபாடுகளைப்பற்றி இங்கு எடுத்துக் கூறுவதற்குள்ள உரிமை அல்லது வசதி இந்த சபையில் இருந்த போதிலும் அவைகள் எந்தளவிற்கு நிவர்த்திக்கப்படுகிறது என்பதை நினைக்கும்போது நாங்கள் அந்தக் குறைகளைக் கூறுவது எந்த முறையில்

பரிசீலிக்கப்படுகிறது என்பது எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. பொதுவாக, பேசிய அங்கத்தினர்கள் எல்லோரும் குறைகள் இருப்பதாகவே கூறினார்கள். ஆனால் அகிலயிந்திய ரீதியில் நமது மின்சார இலாகாவை பரிசீலிக்கும்போது இந்தியாவிலேயே மூன்றாவது தரமாக அதிலும் தனித் தனியாக கிராமங்களாகப் பிரித்துப் பார்க்கும்போது முதன்முறையாக நமது மாகாணம் மேலோங்கியிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது நாம் மகிழ்ச்சியுற வேண்டியிருக்கிறது. ஆனால் கிராமங்களிலுள்ள மக்களின் சிறு சிறு கஷ்டங்களை நிவர்த்திக்காத காரணத்தினால் குறைபாடுகள் கூற வேண்டிய நிலையில் இருக்கின்றோம். அந்தச் சிறிய குறைபாடுகளை நீக்கினால் ஒழிய அரசாங்கத்தில் குறைபாடுகள் இருப்பதாக மற்றவர்கள் கூறுவதற்கு இடம் இருக்கும். பெரிய திட்டங்களை நாம் செய்துவிட்டால் மட்டும் போதாது. அப்படிச் செய்வதனால் மட்டும் நமது குறைகள் நீங்கி விட்டதாகாது. குறிப்பாக எலெக்ரிஸிட்டியைப் பொறுத்த வரையில் மனிதனின் உழைப்பைவிட துரிதமாக மற்ற நாடுகளுக்கு ஈடாக வர வேண்டுமென்றால் நமக்கு தேவைப்பட்ட மின்சாரத்தை அதிகப்படுத்துவது தான் முதல் தரமாயிருக்கமுடியும். அப்படி முதல் தரமாக கொண்டு வருவதற்கு, கடந்த இரண்டு நாட்களாக இந்த வட்டாரத்தில் இருக்கிற நீர்நிலைத் தேக்கங்களில் இடங்களைச் சுற்றிப் பார்க்கும்போது, அவைகளை வெகு மும்முரமாக கொண்டு வரவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத் திற்கு இருக்கிறது என்பது தெரிய வருகிறது. இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இதில் சம்பந்தப்பட்டிருக்கிற சிறிய ஊழியர்களின் நிலைமையை வயரிங் கண்ட்ராக்டர்களிலிருந்து வயர்மென் வரையில் உள்ளவர்களின் நிலைமையைப்பற்றி அரசாங்கம் சற்று சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்பெல்லாம் இந்த வயர்மென் தங்கள் தொழிலை வைத்துக்கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்த முடிந்தது. ஆனால் இப்பொழுதுள்ள அரசாங்க விதிமுறைகள் பிரகாரம் அவர்களுக்கு, அவர்கள் அந்தத் தொழிலைக் கற்றுக்கொண்டதினால் மட்டும் வாழ்க்கையை நடத்திவிட முடிவதில்லை, இத்தொழிலைக்கொண்டு. அதற்கான சாதனங்கள் வேண்டியிருக்கிறது. உதாரணமாக, ஒரு வயர்மென் ஒரு வீட்டுக்கு காண்ட்ராக்ட் எடுத்தால், 300 ரூபாய்க்கு காண்ட்ராக்ட் எடுப்பான். கிட்டத்தட்ட 210 ரூபாய் சாமான்களுக்குப் போகும். அப்பொழுது 90 ரூபாய்தான் அதற்குள்ள லேபராக கிடைக்கிறது, தனக்கும் தனது ஸபார்டினேட்டுக்கும் சேர்த்து. அந்த வேலையை முடித்துத் தருவதற்கு அவனுக்கு கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ வாரமாகும். ஆக, அப்படி 90 ரூபாய் ஊதியம் பெறுவதற்கு தனது உயிரையே பணயம் வைத்து வேலை செய்யவேண்டி யிருக்கிறது. இன்று அரசாங்க விதிகள் பிரகாரம், மேக்கர் அண்ட் டெஸ்டர் வாங்குவதற்கு அதிகமான விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த "மேக்கர்கள்" நமது ராஜ்யத்தில் தயார் செய்யப்படுவதில்லை. வெளி நாடுகளில் இருந்துதான் இதை இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. அவைகள் மார்க்கட்டில் கிடைப்பதில்லை. இதை வாங்கி வைத்தால்தான் ஒரு வயர்மன்னுக்கு வேலை செய்யமுடிகிறது. அதுபற்றி அரசாங்கத்தி னிடம் பலதடவை சொல்லியுங்கூட இதுவரையில் இந்த அன்றாடத் தொழிலாளர்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. ஆகவே, மின்சாரத்தை மக்களுக்கு சுலபமான முறையிலும், எளிதான முறையில் கொடுக்கக் கூடிய இந்தத் தொழிலாளர்களுக்கு முதல் சலுகை காட்டப்படவேண்டும். அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து பெரிய திட்டம் அமைப்பது சுலபமாக இருக்கலாம். ஆனால் அத்திட்டங்கள் மூலம் உற்பத்தி யாகும் மின்சாரத்தை விநியோகம் செய்யும் தொழிலாளர்களின் நிலையை யும் கவனிக்கவேண்டும். ஹரிஜனங்கள், மற்றபடி மலை ஜாதி மக்கள் போன்றவர்கள் வசிக்கும் இடங்களுக்கு மின்சாரம் கொடுப்பதற்காக அரசாங்கம் நல்லமுறையில் உத்தரவிட்டும், அதற்கான சட்டங்கள் இயற்றப் பட்டும்கூட அந்தச் சட்டங்கள் எந்தளவு நிறைவேற்றப்படுகிறது என்பது வேடிக்கையாகக்கூட இருக்கிறது.

[Sri K. B. S. Mani] [22nd April 1959

செஞ்சியில் 120 கிராமங்களுக்கு சர்வே செய்யப்பட்டு 5 கிராமங்களுக்குத் தான் கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. சமுதாயத்தின் நன்மைக்காக இருக்கக்கூடிய அதிகாரிகள் இதில் சற்று கவனம் செலுத்தி, ஊக்கம் காட்டவேண்டும். கிராம மக்களுடைய வாழ்வு புனருத்தாரணம் செய்யப் பட்டால்தான், நாட்டு மக்களுடைய வாழ்வு புனருத்தாரணம் அடையும். அரசாங்கம் மட்டும் இம்மாதிரி நினைத்தால் போதாது. சட்டங்கள் மட்டும் இந்த நோக்கத்தோடு செய்யப்பட்டால் போதாது. அதிகாரிகளும் அந்த எண்ணத்தோடு நடந்தால்தான் இம்மாதிரியான குறைகள் இல்லாமல் இருக்கும். இம்மாதிரி குறைகள் இந்த மின்சார இலாகாவில் மட்டுமல்ல ஏனைய டிபார்ட்மெண்டுகளிலும் இருக்கின்றன என்பதை நான் அரசாங்கத் தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

3-30 p.m அதுபோலவே, ஆங்காங்கு மின்சார கவுன்சில்கள் அமைக்கவேண்டியது மிகவும் அவசியம். ஒவ்வொரு ஜில்லாவிலும் மின்சார சம்பந்தமாக ஒரு சபை இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் என்னைப்போலுள்ள அங்கத்தினர்கள் கூறுகின்ற சிறு குறைகளை தீர்மானங்களின் மூலம் எடுத்துச்சொல்லி, அதன் மூலம் இருக்கிற பெரிய குறைபாடுகளை அரசாங்கம் எளியதாகவே தீர்த்துவைக்க முடியும். அப்படி இல்லாது. ஏணத்திஞல், ஏதோ மாகாணத்திற்கு ஒரு சபை ஏற்படுத்தி, அதில் பெரிய காரியங்களை வி ாதித்து, பெரும் நோக்கோடு காரியங்கள் செய்யப்படுவதால், சிறிய சிறிய குறைபாடுகள் ஆங்காங்கு மலிந்து கிடக்கின்றன. ஆகவேதான் துரிதமாக வேலை செய்கின்ற மின்சார இலாகாவிற்கு, முற்போக்கில் வேலை செய்கின்ற இலாகாவிற்கு இன்னும் வேகத்தைக் கொடுக்கவேண்டுமென் ருல், அதை இன்னும் உச்ச நிலைமைக்குக் கொண்டுவரவேண்டுமென்ருல், இந்தியாவிலேயே இந்த இலாகா முதன்மையாக வேலை செய்யவேண்டு மென்ருல், கிராமங்கள் தோறும் மின்சாரத்தைப் பரப்புவதற்கு வழிவகைகள் சொல்லுவதற்கும், ஆங்காங்குள்ள குறைகளை எடுத்துக்கூறுவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். ஒவ்வொரு ஜில்லா தலைநகரத்திலும் ஒரு மின்சார போர்டு அமைப்பது மிக அவசியம் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு வசதியாக டாம்கள் கட்டும் இடங் களில் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டும், மின்சார இலாகாவும் சேர்ந்து வேலை செய்கின்றன. இரண்டு தினங்களாக நாங்கள் இம்மாதிரி டாம்களை பார்த்து வந்திருக்கிருேம். ஒவ்வொரு டாமிலும் கிட்டதட்ட 5,000, 6,000 கூலிகள் வேலை செய்கிருர்கள். அவர்களுடைய வாழ்க்கைத்தரத்திற்குப் போதுமான ஊதியம் அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. கல் உடைக்கின்ற தொழிலாளிகளுக்கு $2\frac{1}{2}$ ரூபாய் முதல் $4\frac{1}{2}$ ரூபாய் வரையில் கிடைக்கிறது. இவ்வளவு தூரம் அவர்களுக்கு ஊதியம் கிடைத்தும், இந்தத் திட்டங்கள் முடிந்த பிற்பாடு அவர்களுடைய வாழ்க்கை எந்த நிலையில் இருக்கும் என்பதைப் பற்றி கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் வேலைக்கு தேவைப்படும்பொழுது, அவர்களை கூலிகளாக, அடிமைகளாக மட்டும் பாவித்து வேலை வாங்கிஞல் போதாது. அவர்களுடைய பிற்கால வாழ்க்கைக்கு உதவிகரமாக இருக்கும் வகையில் நிரந்தரமாக வேலை செய்கின்ற ஊழியர்களைப்போல் அவர்கள் ஊதியத்தில் ஒரு பிடிப்பு ஏற்படுத்தி, அவர்கள் வேலையைவிட்டு போகும்பொழுது அவர்களுக்கு அதை திருப்பிக் கொடுப்பதாக ஒரு முறையை அரசாங்கம் ஏற்படுத்திஞல், மிகவும் நன்ருக இருக்கும். இந்தத் தொழிலாளிகளுடைய பிள்ளைகளுக்கு படிக்க வசதி செய்துகொடுத்து, ஆங்காங்கு சிறிய சிறிய எலிமெண்டரி பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தியிருப்பதுபற்றி அதிகாரிகளையும், சர்க்காரையும் பாராட்டவேண்டும். ஏதோ கூலிகளுடைய பிள்ளைகள்தானே, அவர்கள் படிக்கவேண்டியதில்லை என்று அலட்சியமாக இராமல், ஆங்காங்கு சிறிய பள்ளிகளை ஏற்படுத்தி, அந்தப் பிள்ளைகள் பள்ளிக்கு போய்வருவதற்கு

லாரி வசதி செய்துகொடுத்திருப்பதுபற்றி, சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களேயும், நிர்வாக அதிகாரிகளேயும் என்போன்ற ஊழியர்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிரும். அவர்களுக்கு எங்கள் நன்றியை செலுத்திக் கொள்ளுகிரும். ஆங்காங்கு கிராமங்களிலுள்ள காலனிகள் சம்பந்தப்பட்ட மட்டில், மைனர் பஞ்சாயத்து, மேஜர் பஞ்சாயத்து, முனிசிபாலிடிகளிலும்கூட, அவைகளே அலட்சியப்படுத்துகிருர்கள். காலனி தானே, பிற்பாடு பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லிவிடுகிருர்கள். அப்படியும் வற்புறுத்திக் கேட்டால், பணம் தீர்ந்துபோய்விட்டது, அடுத்த ஆண்டில் பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லுகிருர்கள். அடுத்த ஆண்டில், இந்த ஆண்டு கப்பி போட்ட ரோடுக்கு தார் போடுகிருர்கள், தார் போட்ட ரோடுக்கு சிமெண்டு போடுகிருர்கள். இப்படி மேலும், மேலும் பெரிய பெரிய திட்டங்களாக போட்டுக்கொண்டே போகிருர்கள். காலனிகளே கவனிப்பதில்லை. டவுன் ஓரத்திலிருக்கிற காலனிகளுக்கு முதல் இடம் கொடுத்து, மின்சார வசதி செய்துகொடுக்கவேண்டும். கிராம மக்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுத்து, அவர்கள் மக்களாக வாழ்ந்தால் தான், நகர்புறங்களிலுள்ள மக்கள் வாழ்க்கையில் முன்னேற முடியும்.

டிரான்ஸ்போர்ட்டை தேசியமயமாக்குவதினுல் ஏனைய தொழில்களேக் காட்டிலும் அதிகமாக வருமானம் வருகிறது. உண்மையிலேயே அரசாங்கத்திற்கு இன்னும் அதிகமாக வருமானம் வரவேண்டுமானுல் உடனடியாக நாட்டில் இருக்கிற தனிப்பட்டவர்கள் நடத்துகின்ற மின்சார தொழில் ஸ்தாபனங்களே தேசியமயமாக்கவேண்டும். இது மிகவும் முக்கியமான விஷயம். இந்தத் தொழிலை தேசீயமயமாகுவதினுல், மற்ற தொழில்களேப்போல் பெரிய நஷ்டமோ அல்லது பெரிய சிக்கலோ ஒன்றும் ஏற்பட்டு விடாது. வெகு சுலபமாக தனிப்பட்ட ஸ்தாபனங்களே தேசியமயமாக்கலாம். இயற்கை வசதியை நாம் உபயோகப்படுத்தி செய்யக்கூடிய தொழில் இது. தனிப்பட்டவர்கள் மின்சார ஸ்தாபனத்தை நடத்துகிறவர்கள், அதை ஒரு தனிப்பட்ட ஜாதிக்காக நடத்துகிற தொழிலாக கருதுகிருர்கள். (குறுக்கீடு) இதிலே ஜாதியை புகுத்துகிறீர்களே என்று ஒரு அங்கத்தினர் சொல்லுகிருர்கள். இதிலே ஒன்றும் ஜாதிப் பிரச்னே இல்லே. குறிப்பாக இந்த ஸ்தாபனத்தை நடத்துகிறவர் பிள்ளே என்று வைத்துக்கொண்டால், அவர் தன்னுடைய சமுதாயத்தை சேர்ந்தவர்களேயே அந்த ஸ்தாபனத்தில் பெரும் அங்கங்களே வசிக்கும்படிச் செய்கிருர்கள். அந்த சமுதாயத்தை சேர்ந்தவர்களே அந்த ஸ்தாபனத்தில் நிரந்தரமான ஊழியர்களாக இருக்கவேண்டுமென்று எண்ணுகிருர்கள். இம்மாதிரி பல ஸ்தாபனங்களில் நடந்துகொண்டு வருகிறது. இதற்கு உதாரணம் வேண்டுமானுல, ஸ்தாபனங்களேக் கூறமுடியும். சிறிய சிறிய கிராமங்களுக்கு முதல் இடம் கொடுத்து மின்சார வசதி செய்து கொடுக்கவெண்டும். கிராம மக்களுடைய முன்னேற்றம்தான் நாட்டினுடைய முன்னேற்றம் என்பதை மனதில் கொள்ளவேண்டும். இந்த மின்சார டிபார்ட்மெண்டில் வேலை செய்யக்கூடிய சிறிய தொழிலாளிகளுக்கு வேண்டிய வசதிகளே செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுகொண்டு, எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

SRI P. G. KARUTHIRUMAN: ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார். இந்தச் சபையில் அங்கத்தினர்கள் பேசும்பொழுது அவரவர்களுக்கு லாபகரமாக இருக்கக்கூடிய பாஷையிலே பேசுவதற்கு ஏதாவது தடை உண்டா ? அல்லது தமிழில்தான் பேசவேண்டும் என்று நிர்ப்பந்தம் இருக்கிறதா ?

MR. SPEAKER : இதை என் கனம் அங்கத்தினர் கேட்கிருர் ?

[22nd April 1959

SRI P. G. KARUTHIRUMAN : சற்று முன்பு தற்காலிக தலைவர் தலைமை வகிக்கும்பொழுது அங்கத்தினர் தமிழிலே பேசவேண்டுமென்று சொன்னார். ஒரு அங்கத்தினர் ஆங்கிலத்தில் பேசினார். ஆங்கிலத்தில் பேசுவதற்கு ஏதாவது தடை உண்டா ?

MR. SPEAKER : சபாநாயகர் ஸ்தானத்தில் உட்கார்ந்திருப்பவர் யார் தீர்ப்பு கொடுத்தாலும், அதற்கு அப்பீல் கிடையாது. ஆனால், சட்டப்படி அங்கத்தினர்கள் ஆங்கிலத்திலும் பேசலாம் தமிழிலும் பேசலாம் மற்ற பாஷையிலும் பேசலாம் சபாநாயகருடைய அனுமதி இருந்தால்.

SRI P. G. KARUTHIRUMAN : எந்தெந்த பாஷையில் பேசலாம் என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : அப்ளிகேஷன் போடுங்கள். என்னென்ன பாஷை என்று சொல்லுகிறேன்.

*SRI M. P. PERIASAMI : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மின்சார மந்திரி அவர்கள் கொண்டுவந்த மின்சார இலாகா மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல பிரியப்படுகிறேன். நமது இந்தியா விலேயே முதல் முதலாக சென்னை மாகாணத்தில்தான் மின்சாரம் அதிகமாக உதவுகிறது என்பதுபற்றி அறிக்கையிலே வெளியிடப்பட்டிருக் கிறது. வெள்ளையர் ஆட்சியில் எவ்வளவு மின்சாரம் உற்பத்தியாயிற்று, விவசாயத்திற்கும் மற்ற தொழில்களுக்கும் எவ்வளவு மின்சாரம் கொடுக்கப் பட்டது, வெள்ளையர் வெளியேறிய பிறகு நமது காங்கிரஸ் அரசாங்கம் வந்த பிறகு எவ்வளவு அணைகளைக் கட்டி, அவைகளின் மூலமாக மின்சாரத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். இப்பொழுது விவசாயத்திற்கும், பல தொழில்களுக்கும் மின்சாரம் சப்ளை செய்யப் படுகிறது. அப்படியிருந்தும், மழை இல்லாத காரணத்தினால், மின்சாரம் உண்டாக்குவதற்கு வசதியாக உள்ள ஆற்றில் தண்ணீர் குறைந்து போவதால் மின்சாரம் கொடுப்பதில் சிறிது வெட்டு ஏற்படுகிறது.

இவ்விதம் வெட்டு ஏற்படுகின்ற காரணத்தால் பம்பு செட் வைத்து தண்ணீர் இறைக்கின்ற விவசாயிகளுக்கு பல தொந்தரவுகள் ஏற்படு கின்றன. இப்போது குந்தா போன்ற பல திட்டங்களைப் போட்டு மின்சாரத்தை அதிகப்படுத்துவதற்கு நமது அரசாங்கம் வேலை செய்து வருகிறது. இதன் மூலம் மின்சார வெட்டு இல்லாமல் தாராளமாக கொடுக்கமுடியும் என்று தெரியவருகிறது. மேலும் நமது நாட்டில் அநேகமாக விவசாயிகள் மின்சாரத்தை உபயோகித்து கிணற்றிலிருந்து தண்ணீரை இறைக்கின்றார்கள். இவ்விதம் இறைப்பது பகல் காலத்தில் தான் அதிகமாகவும் இரவுகாலத்திலும் நடைபெற்றுவருகிறது. இரவு நேரங்களில் கரண்ட் கொடுத்தால் அவர்கள் தண்ணீர் இறைப்பதற்கும் அதிலிருந்து நிலத்தை உழுவதற்கும் வசதியில்லாமல் போய்விடுகிறது. ஆகவே, கூடுமான வரையில் விவசாயிகளுக்கு பகல் நேரத்திலேயே மின்சாரம் கொடுப்பதற்கு வசதி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வேறு எந்த தொழிலுக்கு மின்சார சப்ளை இரவு கொடுத்தாலும் விவசாயத்தைப் பொறுத்த அளவில் இரவு காலத்தில் மின்சார சப்ளை கொடுக்காமல் பகல் நேரத்திலேயே கொடுப்பதற்கு வசதி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அரிஜனங்களுக்கு மின்சாரம் கொடுப்பதில் நமது மந்திரிகள் அனைவரும் குறிப்பாக மின்சார அமைச்சர் அவர்களும் பல முயற்சிகள் எடுத்துவருகிறார்கள். அதாவது மேஜர் பஞ்சாயத்துகள் லைட் போடவேண்டுமென்று கேட்டால், அருகிலுள்ள அரிஜன சேரிகளுக்கு பஞ்சாயத்திலிருந்தே லைட் போட்டு கொடுத்தால்தான் பஞ்சாயத்துக்கு மின்சார சப்ளை தரமுடியும் என்று ஆர்டர் மூலமாக சொல்லி வருகிறார்கள். இதன் காரணமாக பல அரிஜன சேரிகளில் மின்சார

22nd April 1959] [Sri M. P. Periasami]

லேட்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்காக அரிஜனங்கள் சார்பில் இந்த அரசாங்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் சில கிராமங்களில் மைனர் பஞ்சாயத்துக்கள் அரிஜன சேரிகளுக்கு லேட் வசதி செய்துகொடுக்காமல் இருந்து வருகிறது. அந்த கிராமங்களில் எல்லாம் அரிஜன சேரிகளுக்கு லேட் வசதி செய்து கொடுக்க ஒத்தாசை புரியவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், நாங்கள் கழிந்த இரண்டு நாட்களாக நமது அரசாங்கத்தால் போடப்பட்டு நிறைவேறப்பட்டுவரும் குந்தா மின்சார திட்டங்களை போய் பார்த்து வருகிறோம். இதைப் பார்த்தால் வடநாடு வாழ்கிறது, தென்னாடு தேய்கிறது என்று சொல்வது எல்லாம் தவறானது என்பது நன்கு புலப்படுகிறது. வடநாட்டில்தான் திட்டங்கள் எல்லாம் பெரிய அளவில் நடந்துகொண்டிருக்கிறது, தென்னாட்டில் ஒன்றுமேயில்லை என்றெல்லாம் திராவிட முன்னேற்ற கழகக்காரர்கள் பொதுஜனங்களிடம் கூறிவருகிறார்கள். கிராமங்களில் இருக்கின்ற மக்கள் அதை உண்மைதான் என்று நம்பிவிடுகிறார்கள். அதற்குத் தகுந்தாற்போல் ஆந்திரா போன்ற உர தொழிற்சாலைகளில் நடைபெறும் வேலைகளைப்பற்றி சினிமாப் படம் பிடித்து காட்டுகிறார்கள். அதைப் பார்க்கின்ற மக்கள் வடக்கு வாழ்கின்றது, தெற்கு தேய்கின்றது என்று சொல்வதை அப்படியே நம்பிவிடுகிறார்கள். அதே சமயத்தில் நமது அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்களை போட்டு வேலை செய்கிற இந்த திட்டங்களைப்பற்றி மக்கள் அறிந்துகொள்வதற்கு ஒருவிதமான வழியும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே இம்மாதிரி திட்ட வேலைகளை எல்லாம் சினிமாப் படம் பிடித்து மக்களுக்கு காண்பிக்கவேண்டும். இப்போது குந்தா, பெரியாறு, மேட்டூர் போன்ற திட்டங்களின் மூலமாக அதிகமான அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு நமது அரசாங்கம் வேலை செய்துகொண்டிருக்கிறது. குந்தா திட்டத்தில் நடக்கின்ற வேலைகளை எல்லாம் மக்கள் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். இத்திட்டத்தின் மூலமாக ஆயிரக்கணக்கான பேர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அங்கே பல பேர்கள் மண் சுமந்துகொண்டிருக்கிறார்கள், பலர் கல் உடைத்துக்கொண்டிருக்கிறார்கள். நான்கு பேர்கள் சேர்ந்துகொண்டு கல்லை தூக்கிக்கொண்டு போகிறார்கள். இவைகளை எல்லாம் அதிகாரிகள் மேற்பார்வை செய்துகொண்டிருக்கிறார்கள். இவ்விதம் லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து ஆயிரக்கணக்கான மக்கள் வேலை செய்து கொண்டிருக்கின்ற இந்தத் திட்டத்தைப்பற்றி மக்கள் அறிந்துகொள்வதற்காக நமது அரசாங்கம் எவ்வளவு செலவு செய்தாலும் சினிமா படம் பிடித்து மக்களுக்கு காண்பிக்கவேண்டும். இப்போது எந்த இடத்தில் பார்த்தாலும் சாதாரணமான பொதுக்கூட்டங்கள் நடந்தால் சினிமா படம் பிடிக்கிறார்கள். மாலை போடுவதை சினிமா படம் பிடிக்கிறார்கள். இப்படியிருக்கின்ற இந்த காலத்தில் அநேக லட்சம் ரூபாய்களை செலவு செய்து வேலைகளை நடத்திக்கொண்டிருக்கின்ற நமது அரசாங்கம் இம்மாதிரி திட்டங்களைப் பற்றி சினிமாப்படம் பிடித்து சினிமா கொட்டகையில் ஆரம்பத்தில் மக்களுக்கு காட்டுவதில் சிறிது கவனம் செலுத்தவேண்டும் அவ்விதம் நமது திட்டங்களைப்பற்றி மக்கள் அறிந்து கொண்டால் திராவிட முன்னேற்ற கழகம் போன்ற எதிர்கட்சிகள் சொல்லிவருகின்ற பொய் பித்தலாட்டங்களை (அவ்விதம் சொல்வது தவறு) பிரச்சாரங்களை மக்கள் நம்பமாட்டார்கள். அரசாங்கத்தின் திட்டங்களை மக்கள் நன்கு அறிந்து கொண்டால்தான் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். இல்லையானால் மற்ற கட்சிகள் இல்லாததையும், பொல்லாததையும் சொன்னால் மக்கள் நம்பிவிடுகிறார்கள். ஆகவே நமது அரசாங்கத்தின் மூலமாக செய்யப்படும் திட்டவேலைகளை எல்லாம்;

எவ்வளவு பணம் செலவு செய்தாவது சினிமா படம் பிடித்து மக்களுக்கு காண்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதற்காக வரி போட்டாலும் பரவாயில்லை. இந்த திட்டவேலைகளைப்பற்றி எல்லாம் குறிப்பாக குந்தா திட்டத்தில் நடைபெறும் வேலைகளையும், அங்கே கட்டப்பட்டுவரும் அணைக்கட்டைப்பற்றியும், தேக்கப்படும் தண்ணீரைக் கொண்டுசெல்வதற்காக மூன்று மைல் தூரத்திற்கு போடப்படும் டன்னல் வேலைகளைப்பற்றியும், பவர் ஸ்டேஷன் வேலைகளைப்பற்றியும் சினிமாப்படம் மூலமாக மக்களுக்கு காண்பிக்கவேண்டும். இதில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி வேண்டிய நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, சேலம் ஜில்லாவில் நாமக்கல்லில் கொல்லிமலை இருக்கின்றது. இப்போது அந்த மலையில் நல்ல ரோடு போட்டாய் விட்டது. அந்த மலையில் ரோடு போடுவதற்கு முன்பே சுமார் 15 நாட்கள் தங்கியிருந்து நான் அந்த மலையைப்போய் பார்த்திருக்கிறேன். பின்னால் இப்போது அதிகாரிகள் எல்லாம் போவதற்காகவும், இன்சினியர்கள் எல்லாம் போவதற்காகவும் நல்ல ரோடு போடப் பட்டிருக்கிறது. அந்த மலையில் ஐயாறு என்ற நீரோடை மலையி லிருந்து செங்குத்தாக விழுந்துகொண்டிருக்கிறது. இந்த ஆறு செங் குத்தாக 200 அல்லது :00 அடிக்கு செங்குத்தாக விழுந்து கொண் டிருக்கிறது. இதிலிருந்து மின்சாரம் எடுக்கமுடியுமா என்பதைப்பற்றி கொஞ்ச காலத்திற்கு முன்னால் சில அதிகாரிகள் போய் பார்வை யிட்டுவிட்டு வந்ததாக தெரிகிறது. அதன் பின்னால் அங்கு எந்த வேலைகளும் நடைபெற்றிருப்பதாக தெரியவில்லை. இந்த நீரோடையில் பல ஊற்றுகள் வந்து சேருகின்றன. இதிலிருந்து மின்சாரம் எடுப் பதற்காக ஒரு திட்டத்தை அங்கு போடலாம். ஆகவே இந்த திட் டத்தை அமைச்சர் அவர்கள் நேரில் வந்து பார்வையிட்டு அங்கு ஒரு மின்சாரத் திட்டத்தை ஏற்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு இதில் பேசுவதற்கு சந்தர்ப்பம் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

Sri D. S. AUTHIMOOLAM : தலைவர் அவர்களே, இந்த மின்சார இலாகா தனியாக ஒரு போர்டு நிர்வாகத்தின்கீழ் வந்து நல்ல முறையில் வேலை செய்கிறது. போர்டு நிர்வாகத்தின்கீழ் வந்த நிமித் தம், சட்டசபை மெம்பர்கள், மற்றும் பொதுஜனப் பிரதிநிதிகளுக்கு இருந்த சில வாய்ப்புகள் குறைந்து வருகின்றன என்று நான் நினைக்கிறேன். அதற்கு முக்கியமான காரணம் சொல்ல விரும்புகிறேன். டிஸ்ட்ரிக்ட் லெவலிலே ஒரு அட்வைசரி பாடி ஏற்படுவதை இந்த போர்டார் விரும்பவில்லை, சர்க்கார் விரும்பவில்லை என்று தெரிகிறது. அதற்கு ஒரு காரணம், டிஸ்ட்ரிக் கவுன்சில் ஏற்படப்போகிறது, அதிலே இந்தப் பிரச்சனையை நீங்கள் விவாதித்துக்கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது. டிஸ்ட்ரிக்ட் கவுன்சில் என்பது ஒரு பெரிய ஜில்லா பூராவும் உள்ள பல விஷயங்களைப்பற்றி நாம் பேசக்கூடிய சபை. அதில் முக்கியமான விஷயங்களைக்கூட பேசுவதற்கு நேரம் போதாத நிலைமையில் ஜில்லா பூராவிலிருந்தும் அங்கத்தினர்கள் வந்து விவாதிப்பதினால் சரியானபடி ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி பேசமுடியாமல் ஏனோ தானோ என்று போய்விடுவது உண்மை. இப்பொழுது திட்டக் கமிட்டிகள் எல்லாம் அந்த அளவுக்குத்தான் வேலை செய்கின்றன. இனியும் அந்த அளவுக்குத்தான் டிஸ்ட்ரிக்ட் கவுன்சிலும் வேலை செய்யும். ஆகையால் இதற்சென்று டிஸ்ட்ரிக்ட் லெவலிலே ஒரு அட்வைஸரி பாடி தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

22nd April 1959] [Sri D. S. Authimoolam]

நாகரீகமடைந்துவரும் உலகத்தில் மனிதனுக்கு மின்சாரம் மிகவும் முக்கியமான தேவையாகிவிட்டது. அதுவும் முக்கியமாக விவசாயத்திற்கு மின்சாரம் மிகவும் முக்கியமாக தேவைப்படுகிறது. நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரத்தையும் பொருளாதாரத்தையும், உயர்த்தவேண்டுமானல், அது மின்சாரம் சரிவரக் கிடைத்து உபயோகப்படுத்துவதைப் பொறுத்திருக்கிறது. அதோடு தொழில் துறைகளிலும் நம் நாடு பின்தங்கியிருக்கிறது. மின்சாரம் நமக்கு எராளமாகக் கிடைத்தால்தான் இந்த நாட்டின் பொருளாதாரம் உயர்வதற்கும், தொழில்கள் பெருகுவதற்கும் வாய்ப்பு ஏற்படும். ஆகவே, மின்சாரத்தை நல்ல விதமாக ஜனங்கள் பிரயோஜனப்படுத்திக்கொள்வதற்கு. பல கிராமங்களுக்கு இணைப்பு தேடிக் கொள்வதற்கு மின்சாரத்திற்கு என்று தனியான ஒரு ஆலோசனைக் குழு எற்படுத்தவேண்டும். ஆகவே, இதை ஜில்லா சவுன்சில் விஷயங்களில் ஒரு விஷயமாக வைத்து, இதனுடைய முக்கியத்துவத்தைக் குறித்து இபபடி நியமித்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு மின்சாரம் சப்ளை செய்வதில் பல சட்ட திட்டங்கள் புகுத்தப்படுகின்றன. முக்கியமாக ஸ்பெஷல் காரண்டி 35 ரூபாய் என்று இதற்குமுன் இருந்தது. அது இப்பொழுது 50 ரூபாயாக உயர்ந்துவிட்டது. சென்னை மாகாணம் இந்தியாவிலே மற்ற ராஜ்யங்களைவிட மின்சார விநியோகத்தில் முக்கியமாக கிராம மின்சார விநியோகத்திலும், விவசாயத்திற்கு பம்ப் செட் வைத்துக்கொள்ள மின்சார விநியோகம் செய்வதிலும் தலைநிமிர்ந்து நிற்கிறது என்று நமது மாநில அமைச்சர்களும் மற்றவர்களும் பெருமைப்படுவதில் நானும் சந்தோஷப்படுகிறேன். ஒரு ஆல்-ரௌண்டு இம்ப்ரூவமெண்ட் நமது சென்னை ராஜ்யத்திலே இப்பொழுது மின்சார இலாகாவிலே இருந்துகொண்டுதான் இருக்கிறது. அது ரொம்பவும் சந்தோஷப்படக்கூடிய காரியம். எவ்வளவு கூடுதலாக இங்கே கிடைக்கக்கூடிய சக்திகளையெல்லாம் திரட்டி மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமோ அவை நடந்துகொண்டிருக்கின்றன. அதற்குப் பெரிய உதாரணம் குந்தா பிராஜெக்ட். ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நல்ல முறையிலே நடக்கும் சென்னை அரசாங்கத்தின் மின்சார இலாகா, விவசாயிகள் விஷயத்தில் இந்த ஸ்பெஷல் காரண்டி என்று சொல்லக்கூடிய இவ்வளவு பெரிய தொகையைக் கேட்கலாமா என்பது ரொம்பவும் கவனிக்கக்கூடிய விஷயம். அதனால் விவசாயிகள் எதிர்பார்த்த இடங்களுக்கெல்லாம் கனெக்ஷன் கொடுக்க முடியவில்லை. கனெக்ஷன் வாங்கிய விவசாயிகளும் ரொம்பவும் எமன் வாயில் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு உதாரணம்கூட சொல்கிறேன். திரு நல்வேலி ஜில்லாவில் மேலக்கல்லூர் ஸப்-ஸ்டேஷன் சம்பந்தப்பட்ட துலுக்கப்பட்டி என்ற கிராமத்தைச் சுற்றியுள்ள முப்பது, நாற்பது விவசாயிகள் பம்ப்செட்டுகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். 15 தினங்களுக்கு முன் அவர்களுக்கு ஒரு நோட்டீஸ் வந்திருக்கிறது. ‘ஸ்பெஷல் காரண்டி ரேட்டைக் கொடுக்கவில்லை. ஆகவே, உங்களுக்கு இரண்டு வருஷங்களுசகு பாக்கி ரூ. 500, ரூ. 600 என்று ஒவ்வொருவருக்கும் வருகிறது. கட்டாவிட்டால் கனெக்ஷனை எடுத்து விடப் போகிறோம்’ என்று நோட்டீஸ் கொடுத்துவிட்டார்கள். ரூ. 500, ரூ. 600 வரையிலும் ஒவ்வொரு விவசாயிக்கும் ஸ்பெஷல் காரண்டி பாக்கித் தொகையை சிவில் கோர்ட் மூலம் வசூல் செய்வோம் என்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். முதலில் அவர்களிடம் ஒப்பந்தம் எழுதி வாங்கும் போது டாரிப் ரேட் ஆறு ரூபாய் வாங்கப்பட்டதாகத் தெரிகிறது. ஸ்பெஷல் காரண்டி 35 ரூபாய் வீதம் கொடுத்ததாக தெரிகிறது. டாரிப் ரேட் ஆறு ரூபாய் என்றவுடன் விவசாயிகளுக்கு ரொம்ப உற்சாகம் ஏற்பட்டு, கனெக்ஷன சீக்கிரமாக வரவேண்டும், விவசாயம் செய்யவேண்டும் என்பதற்காக கண்ணை மூடிக்கொண்டு பத்து ஹார்ஸ் பவர் என்று ஒப்பந்தத்தில் எழுதிக் கொடுத்துவிட்டார்கள். உண்மையாகவே அவர்கள் வைத்திருப்பது

மூன்று ஹார்ஸ் பவர், ஐந்து ஹார்ஸ் பவர் மோட்டார்கள்தான். பத்து ஹார்ஸ் பவர் கணக்குக்கு ஒவ்வொரு விவசாயியும் வருஷத்திற்கு ரூ. 350 கட்டவேண்டுமென்று வருகிறது. அவர்களுக்கு ஏற்கனவே கிணற்றில் ஜலவசதி இல்லை. வருஷத்தில் நான்கு மாசங்களுக்குமேல் நெற்பயிர், மற்ற பயிர்கள் இவைகளுக்குத் தண்ணீர் இறைக்கவேண்டிய அவசியம் இருக்காது. அதிகபட்சமாக நான்கு மாதங்களுக்குத்தான் தண்ணீர் இறைக்கவேண்டி ஏற்படுகிறது. ஒவ்வொருவரும் கட்டுப்பாடாக 'கன்ஸ்யூம்' செய்திருப்பது ரூ 70, ரூ. 80 அளவுக்குத்தான். அவர்களிடம் பத்து ஹார்ஸ் பவர் ரேட்டில் ரூ. 350 கணக்குப்பண்ணி. 'ரூ 250 பாக்கி வருகிறது. ஆகவே, இரண்டு வருஷத்திற்குக் கட்டவில்லை ; ஆக, ரூ. 500' என்று நோட்டீஸ் வந்திருக்கிறது. அவர்களிடம் பொருளாதாரம் இல்லாத நிலைமையில் கடைசியில் இப்பொழுது டிஸ்-கனெக்ட் செய்வேன் என்ற அளவுக்கு நம்முடைய மின்சார இலாகா நோட்டீஸ் கொடுத்திருக்கிறது இது ஒரு சோஷலிச பாணி சர்க்கார் என்பது உண்மையானல், விவசாயிகளுக்கு நீங்கள் ஸ்பெஷல் காரண்டி என்பதை வலியுறுத்தாமல் டாரிப் ரேட் ஆறு ரூபாய்க்கு பம்ப்செட் கொடுக்கவேண்டும். இப்பொழுது நான் சொன்னபடி, மேலக்கலூர் பக்கத்தில் துலுக்கப்பட்டி கிராமத்தை யொட்டியுள்ள மக்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருப்பதையும் சர்க்கார் வாபஸ் வாங்கி, ஆறு ரூபாய் டாரிப் ரேட்படிக்கே வசூல் செய்யவேண்டும். அவர்கள் அக்ரிமென்ட்படிக்கு பத்து ஹார்ஸ் பவர், மூன்று ஹார்ஸ் பவர் வைத்திருந்தாலும் பத்து ஹார்ஸ் பவருக்கு நீங்கள் வசூல் செய்துகொள்ள வேண்டும் என்பதில் ஆட்சேபணை இல்லை அந்த விதத்தில் விவசாயிகளுக்கு உதவி செய்யவேண்டும். இதுமாதிரி ராஜ்யம் பூராவும் விவசாயிகளுக்கு பம்ப்செட் விஷயத்தில் சர்க்கார் தனி கண்ணோட்டத்துடன் இருந்து காரியங்களைச் செய்யவேண்டும். அப்படியானல்தான், நம்முடைய நாட்டில் பெரும்பான்மையாக உள்ள மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு விவசாயத்தில் முன்னேறி விவசாயிகளுடைய பொருளாதாரம் செம்மைப்படும், உண்மையாக இந்தச் சர்க்கார் மின்சார இலாகாவில் முன்னேறிக்கொண்டு போவதாக அர்த்தம் ஏற்படும். ஆகவே, அதைக் கவனிக்கும்படியாக முக்கியமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதற்கெல்லாம் பத்து பர்செண்டு ரிட்டர்ன் கிடைத்துவிட வேண்டும் என்ற கணக்கு போடுவதிலேதான் ஒரு பெரிய கஷ்டம் இருக்கிறது. ராஜ்ய சர்க்கார் 5½ சத விகிதம் வட்டியை மின்சார போர்டிடமிருந்து எதிர்பார்ப்பதால்தான் இந்தக் கஷ்டங்களெல்லாம் ஏற்படுகிறது. ஆகவே, ராஜ்ய சர்க்கார் இதில் கவனம் செலுத்தி வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டும். இந்த இலாகாவை ஒரு வியாபாரக் கண்ணோட்டத்தோடு பார்க்காத நிலைமையில், கிராமவாசிகளுக்கும் விவசாயிகளுக்கும் தொழில் முறைகளுக்கும் நல்ல பிரயோசனப்படக்கூடிய அளவுக்கு இந்த இலாகாவை நிர்வகிக்கவேண்டுமேயொழிய இதை ஒரு பிஸினஸ் ப்ராபொசீஷன் என்ற கண்ணோட்டத்தோடு நிர்வகிக்கக்கூடாது. ஆகவே, வட்டி விகிதத்தைக் குறைக்கவேண்டும். குறைத்தால்தான் விவசாயிகள் ஸ்பெஷல் காரண்டி மற்ற காரியங்களைச் செய்துகொடுப்பது எல்லாம் நாம் சலுகை செய்ய முடியும். அதை முக்கியமாகக் கவனிக்கவேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயம், சர்ச்சார்ஜ் விஷயம். அதுபற்றி ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. சர்ச்சார்ஜ் ஏற்கனவே கூடுதலாக இருந்தது. அதைவிட இப்பொழுது கூடுதலான ரேட் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். சர்ச்சார்ஜ் விஷயத்தையும் ரத்து செய்துவிடவேண்டும். அதை ரத்து செய்வதில், நிறைந்த அளவு ஜாஸ்தியாக உபயோகிக்கும் ஆள்களை வேண்டுமானலும் விட்டுவிடலாம். ஏழை எளிய மக்கள், கிராமவாசிகள், குறைந்தபட்சம் இவ்வளவு யூனிட்டுகள் உபயோகித்தால் அவர்களுக்குச் சர்ச்சார்ஜிலிருந்து விதிவிலக்கு என்று ஒரு ஏற்பாடு செய்தால், அதன்

மூலம் லட்சக்கணக்கான ஏழை மக்கள் மின்சார போர்டை வாழ்த்து வார்கள். அந்தச் சலுகை செய்யவேண்டுமென்று முக்கியமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஸ்பெஷல் காரண்டி என்பதையும் இந்த அன்ருடம் ரிட்டர்ன் பத்து வருஷம் என்று இருப்பதை இருபது வருஷம் என்று ஏன் வைக்கக் கூடாது என்பதையும் முக்கியமாக பரிசீலனை செய்யவேண்டும் என்று கனம் மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இது சம்பந்தமாக இரண்டு மூன்று கமிட்டிகளை நியமிக்கப்போவதாகத் தெரிய வருகிறது. அந்தக் கமிட்டிகள் மூலம் தகுந்த பலன் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டு என் பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம். 4 p,m,

* **SRI M. R. KANDASWAMY MUDALIAR :** கனம் சபைத் தலைவர் அவர்களே, இப்பொழுது சபையின்முன் வைக்கப்பட்டிருக்கும் மின்சார இலாகாவின் நிதி நிலை அறிக்கையை வரவேற்று சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாகாணத்திலுள்ள எல்லா இலாகா களிலும் குறிப்பாக மின்சார இலாகா மிகவும் பாராட்டத்தக்க முறையில் வேலை செய்துகொண்டு வந்திருக்கிறது என்பதை இங்கு பேசிய அங்கத் தினர்கள் எல்லோரும், குறிப்பாக எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய அங்கத் தினர்களும் எதற்கும் எதிர்ப்பைக்காட்டும் அங்கத்தினர்கள்கூட இந்த இலாகாவைப் பாராட்டி பேசியிருக்கிறார்கள் என்றால் எந்த அளவில் இந்த மின்சார இலாகா வேலை செய்திருக்கிறது என்பது தெரியவரும். எந்த இலாகாவைப்பற்றி விவாதம் வரும்போதும் அதைப்பற்றி எதிர்த்து கார சாரமாக பேசும் அங்கத்தினர்கள்கூட இந்த இலாகாவைப்பற்றி பாராட்டி பேசியிருக்கிறார்கள். மின்சார இலாகா அந்த அளவில் வேலை செய்து இருக்கிறது என்பது தெரியவருகிறது. இந்த இலாகா சம்பந்தமாக மற்ற மாகாணத்தைக் காட்டிலும் இந்த மாகாணம் நல்ல முறையில் முன்னேற்ற மடைந்திருக்கிறது. வெள்ளையர் ஆட்சியில் கிராமங்களைக் கண்ணெடுத்தும் பாராத கிராமங்களுக்கு எல்லாம் இப்பொழுது மின்சாரம் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. பல கிராமங்களிலுள்ள வீடுகளுக்கும் இப்பொழுது மின்சாரம் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. பல கிராமங்களுக்கு இப்பொழுது மின்சார வசதி கிடைத்திருக்கிறது. அதனால் இந்த அரசாங்கத்திற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதுவரையிலும் இல்லாத அளவில் 1935-36ல் 30 கிராமங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற மின்சார அளவைப் பார்த்தால் இன்றைக்கு அதாவது 7,772 கிராமங் களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்தால் ஓரளவு மின்சார இலாகா விவசாயிகள் விஷயத்தில் கவனம் செலுத்தி வருகிறது என்பது தெரிய வருகிறது. கிராமங்கள் முன்னேற்றமடையச் செய்வதி லும், கனம் அமைச்சர் அவர்களும் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறார்கள்.

அது மாத்திரம் அல்ல, விவசாயிகள் விவசாயத்திற்கு என்று ஒரு ஜோடி மாடு வாங்கவேண்டுமென்றால் 750 ரூபாய் முதல் கொண்டு ஆயிரம் ரூபாய் வரையில் செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. இப்படி மாடுகள் வாங்கி சேலம் ராசிபுரம் முதலிய இடங்களில் பயிர் செய்து வருகிறார்கள். சேலம் ஜில்லாவில் சமீபத்தில் மின்சார அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்தபோது பல கிராமங்களையும் கிணறு களையும் பார்வையிட்டார். கிணறுகளில் 120 முதற்கொண்டு 130 அடி வரையில் கீழே தண்ணீர் இருப்பதை அவர் கண்டார், இவ்வளவு ஆழமாக தண்ணீர் இருப்பதால் அதை இரைத்து விவசாயம் செய்வது என்பது முடியாமல் இருந்தது. ஆயிரம் அல்லது ஆயிரத்தி ஐந்நூறு ரூபாய் வரையில் செலவு செய்து மாடு வாங்கி தண்ணீர் இறைக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் விவசாயிகள் எவ்வளவோ கஷ்டம் நஷ்ட மடைய வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது மின்சாரம் கிடைத்து வருவதால்

[Sri M. R. Kandaswamy Mudaliyar] [22nd April 1959

அவர்களுக்கு பல கஷ்டங்கள் நீங்கி விவசாயம் செய்ய ஆதரவாக இருக்கிறது. இந்த அளவுக்கு மின்சார இலாகா விவசாயிகளுக்கு விவசாய விஷயத்தில் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. மின்சாரம் கிடைக்காமல் இருந்த காலத்தில் விவசாயிகள் எவ்வளவோ கோடிக்கணக் கான ரூபாயை இழக்க வேண்டியதாக இருந்தது. இன்னும் சில இடங் களில் அந்த வசதி இல்லாமல் இருப்பதால் தொழில அபிவிருத்தி அடைந்திருந்தும் விவசாயிகள் கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டமடைய வேண்டியதாக இருக்கிறது. விவசாயிகள் செலவு செய்யக்கூடிய அளவில் அவர்களுக்கு வருமானம் கிடைப்பதாக இல்லை. இவர்களுடைய வாழ்க் கைத்தரம் உயர்வதற்கும் வசதி இல்லை. அவர்களுக்கு பொருளாதார வசதி கிடைக்கவில்லை. கனம் அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது இப்படிப்பட்ட குறைகளையெல்லாம் அவரிடத்தில் சொல்லிக்கொண்டார்கள். இதைப்பற்றியே எல்லா அங்கத் தினர்களும் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார்கள். விவசாயிகள் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண் டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக எங்கள் ஜில்லாவில் இரண்டு மூன்று வருஷமாகவே பருவ மழை தவறிவிட்டது. அதன் காரணமாக கிணறுகளில் ஜலம் குறைந்து விட்டது. பயிர் செய்வதற்கு வசதி இல்லை. புஞ்சை பயிர் செய்வதற்குக்கூட தண்ணீர் கிடைக்க வில்லை. ஒரு ஆர்ஸ் பவருக்கு 50 ரூபாய் அளவில் ஐந்து ஆர்ஸ் பவருக்கு 250 ரூபாயில் 100 ரூபாய் கூட கொடுக்க முடியவில்லை. தண்ணீர் இல்லாத காரணத்தால்தான் அவர்களால் கொடுக்க முடிய வில்லையே யொழிய நிலம் இல்லை என்ற காரணத்தால் அல்ல. நீர் இருந்தால் அதை இறைத்து பயிர் செய்து பணத்தைக்கொடுக்க முன் வருவார்கள். சில இடங்களில் புஞ்சை பயிர் செய்வதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. தண்ணீர் இல்லாத காரணத்தால் பயிர்கள் எல்லாம் காய்ந்து போய் விடுகிறது தங்களிடம் இருக்கக்கூடிய பணத்தை செலவு செய்து மீண்டும் அந்தப் பணத்தைப் பெற முடியவில்லை அதனால் அடுத்த வருடம் அவர்களால் ஜீவனம் செய்ய முடியுமோ என்ற பயம் கூட எற்பட்டு விடுகிறது சாகுபடி செய்யக்கூடிய அளவுக்காவது அவர்களுககு வருமானம் வரவேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆர்ஸ் பவர் 50 ரூபாய் அளவில் ஐந்து ஆர்ஸ் பவருக்கு 250 ரூபாய் அளவில் கட்ட வேண்டியதாக இருக்கிறது. அதற்கு 100 ரூபாய்கூட பவர் உபயோகிப்பது இல்லை. அதனால் அவர்கள் பல கஷ்ட நஷ்டங்களை அடைகிறார்கள். அதனால் விவசாயத்தில் அவர்கள் நஷ்ட மடைகிறார்கள். ஆகவே 50 ரூபாய் ஒரு ஆர்ஸ் பவருக்கு என்று வசூல் செய்வதை விட்டு விட்டு முப்பது ரூபாய் என்ற அளவில் வசூலிக்கும் படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே இந்த துறையில் லாபம் வருகிறதா என்பதை மட்டும் பார்க்காமல் விவசாயிகளுக்கு வசதி கிடைக்கிறதா என்ற அடிப்படையில் அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க அரசாங்கம் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன். அப்பொழுதுதான் விவசாயத் தொழிலில் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும். விவசாயத் தொழில் திறம்பட நடக்கவேண்டும் என்று சொன்னால் விவசாயிகளுக்கு சலுகை காட்டி அவர்களிடமிருந்து வசூலிக்கக்கூடிய மினிமம் சார்ஜ் தொகையை 30 ரூபாயாகவோ அல்லது 25 ரூபாயாகவோ குறைக்கவேண்டும். இதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் மிகவும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சேலம் ஜில்லாவில் மூன்று வருஷ காலமாக பருவ மழை தவறியதன் காரணமாக விவசாயிகள் ரொம்பவும் கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறார் கள். ஆகவே இந்த வருஷததிலேயே சேலம் தாலுகாவில் வீரபாண்டி பிர்க்கா, ராசிபுரம் தாலுகா வெண்ணந்தூர் பிர்காவுக்கு உடனடியாக இந்த ஆண்டிலேயே உடனடியாக அவர்களுக்கு மினிமம் சார்ஜை

எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். இதைப் பற்றி கவனிப்பதற்கு இப்பொழுது கமிட்டி போட்டு ஆலோசிக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. கனம் அமைச்சர் அவர்கள் எங்கள் ஜில்லாவில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது இதைப்பற்றி அவரிடம் சொல்லப்பட்டது. அதற்கு அவர் இதைப்பற்றி கவனிப்பதாகச் சொன்னார். ஆனால் சமீபத்தில் மின்சார இலாகா தொழிலாளர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுத்ததன் காரணமாக விவசாயிகளுக்கு இந்தச் சலுகையை கொடுக்க ஒருக்கால் அந்தக் கமிட்டி மறுத்தாலும் மறுக்கலாம். அந்த பணத்தை சரிகட்டுவதற்கு என்று விவசாயி களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகையைக் கொடுக்க மறுக்கலாம். ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் தாம் ஏற்கனவே சுற்றுப் பிரயாணத்தின்போது சொன்னதை மனதில் வைத்துக்கொண்டு கமிட்டி மாறுபட்ட முறையில் தீர்மானம் செய்தாலும் அதை ஏற்றுக்கொள்ளாமல் விவசாயிகளுக்கு சலுகை அளிக்கக்கூடிய முறையில் உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே விவசாயிகளுக்கு தொல்லைகள் ஏற்படாத வகையில் அவர்களிடமிருந்து மினிமம் சார்ஜை வசூலிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதோடு இந்த மின்சாரத் துறையில் வேலை செய்யக்கூடிய அதிகாரி கள் மிகவும் நல்ல முறையில் உயர்ந்த முறையில் வேலை செய்து வரு கிறார்கள். இன்றைக்கு குந்தா திட்டத்தைப் போய் பார்க்கக் கூடிய நேரத்தில்—இந்திய தேசத்திலேயே இருக்கக்கூடிய என்ஜினியர்களைவிட மிகவும் திறமையாக—இங்குள்ளவர்கள் வேலை செய்து கொண்டு இருப் பதை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. அவர்கள் செய்து வருகிற அரும்பணிக்காக நாம் அவர்களைப் பாராட்டுகிறோம். அதோடு கிராமங் களில் சிற்சில இடங்களில் குறைபாடுகள் இருக்கலாம். அவைகளையும் நமது அமைச்சர் அவர்கள் நிவர்த்திக்க முன் வந்தால்தான் இன்னும் துரிதமாக இந்த இலாகா பணி காரியங்களைச் செய்ய முடியும். குறிப்பாக கீழே இருக்கக்கூடிய சிப்பந்திகள் சரியாக வேலை செய்வதில்லை. டிபார்ட் மென்டில் எடுத்துச் செய்யக்கூடிய காரியங்களில் அதிக தாமதம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். அந்தக் குறைபாட்டையும் நீக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு ஜமீன் நிலம், இனும் நிலம் என்று இருக்கின்றன. அவை சர்வே செய்யப்பட்டு இன்னும் பட்டா செய்யப்படாததன் காரண மாக அங்குள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக ஜமீன் நிலத்தில் ஒரு விவசாயி மாடு வைத்துத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருப்பான். பக்கத்தில் இன்னொருவன் மோட்டார் வைத்து தண்ணீர் இறைத்தால் இந்தக் கிணற்றின் தண்ணீர் இறங்கிவிடுகிறது. இவனும் மின்சாரம்வேண்டும், பம்பு ஸெட்டு வேண்டும் என்று கேட்டால் மின்சார இலாகாவினர் கொடுக்க மறுக்கிறார்கள். காரணம் "உனக்கு இன்னும் நிலமே சொந்தமில்லை. எப்படி எதை நம்பிக் கடன் கொடுப்பது?" என்று மறுத்துவிடுகிறார்கள். எப்படியும் அந்த நிலங் களை அந்த விவசாயிகளுக்கேதான் கொடுக்கப்போகிறோம். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற சட்டத்தையும் கொண்டுவந்து இருக்கிறோம். அந்த நிலங்கள் சர்வே செய்யப்படாமல், அவர்களுக்குப் பட்டா செய்யப்படாமல் இருந்தாலும்கூட—இம்மாதிரியான இடங்களில் அவர் களுக்கு அவசியம் மின்சார வசதி செய்து கொடுக்கப்படவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்போதுதான் பக்கத்தில் மின்சார சப்ளை உடைய கிணறுகள் இருக்கும்போது இவர்களாலும் கொஞ்சமாவது நீர் இறைத்து விவசாயம் செய்ய வசதி ஏற்படும். ஜமீன், இனும் நிலங்கள் சர்வே செய்யப்படவில்லை என்கிற ஒரு காரணத்தை தடையாகக் காட்டாமல் அந்த நிலங்களில் சாகுபடி

[Sri M. R. Kandaswamy Mudaliyar] [22nd April 1959

செய்யக்கூடியவர்களுக்கும், மின்சார இலாகாவினர் வசதி செய்து கொடுககவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொணடு முடித்துக்கொள்கிறேன்.

'SRI V. SANKARAN: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சென்னை மாநில மின்சார போர்டின் 1959-60-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இதிலே ஆன்யுவல் பினான்ஷியல் ஸ்டேட்மெண்டில் பாராம் 2-ல்.

Under section 61 of the Electricity (Supply) Act 1948, the Annual Financial Statement Budget Estimates of the estimated capital and Revenue Receipts and Expenditure for the year 1959–60 of the Madras State Electricity Board should be prepared in the prescribed form and submitted to the State Government for being placed on the table of the Houses of the State Legislature. Under Section 16 (6) of the said Act the Annual Financial Statement should also be placed before the State Electricity Consultative Council. The same procedure has to be adopted in respect of Supplementary Financial Statement pending approval of the model farms by the Government the Budget of the Board for 1959–60 has been framed following the farm adopted for the Annual Financial Statement for 1958–59.

என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இது சாதாரணமாக அரசாங்க பட்ஜட் முறையை அனுசரித்து கடந்த மூன்று ஆண்டு காலமாக பட்ஜட் தயாரிக்கப்பட்டு வருகிறது. சாதாரணமாக செக்ஷன் 61-ஐ எடுத்துக் கொண்டு பார்த்தால் பிரைவேட் கார்ப்பரேஷன் ஆக்டின்படி—அக்கவுண்டு கொடுக்கபபடாமல்—கடந்த மூன்று ஆண்டு காலமாக அந்த பாரம் சர்க்கார் அதை அங்கீகாரம் செய்யாததன் காரணமாக—அரசாங்க பட்ஜட் முறையை தயாரிப்பது போலவே இதைத் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். சாதாரணமாக அரசாங்க பட்ஜட் என்றால் (Capital expenditure revenue expenses) ரிவைஸ்டு எஸ்டிமேட், பட்ஜெட் எஸ்டிமேட் கண்டிஜெண்ட் பண்ட் ரிசர்வ் பண்ட் என்பதாக சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியாதபடி இருக்கும். ரெவின்யூ எக்ஸ்பெண்டிசர், காபிடல் எக்ஸ்பெண்டிசர் என்பதெல்லாம் சுலபத்தில் தெரிந்துக்கொள்ள முடியாது. பிரைவேட் கார்ப்பரேஷன் என்றால் கரெக்டான அஸெட், லையபிலிடி எளிதாக சுலபமாகத் தெரிந்துக் கொள்ளக்கூடிய முறையில் கணக்கு அமைக்கப்படுகிறது. ஆனால் அந்த மாடல் பாரம்ஸ் அங்கீகாரம் செய்யப்படுவது பெண்டிங்காக இருப்பதனால் இந்த மாதிரியாகத் தயாரிக்கும் படியாக நிலைமை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சீக்கிரத்தில் அதை அங்கீகாரம் செய்து—பிரைவேட்—கார்ப்பரேஷன் கணக்கைப் போலவே சுலபத்தில் அஸெட், லையபிலிடி என்ன செலவு என்ன வருமானம் என்ன என்பதைத் தெரிந்துக் கொள்ளக்கூடிய அளவில் இந்த அறிக்கை தயாரிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒவ்வொரு வருடமும் பார்த்தால் 11 கோடி செலவு என்று வருகிறது. அதே முறையில் 11 கோடி வருமானம் என்பதாகவும் சொல்லப்படுகிறது. 57–58-ல் 11 கோடி செலவு என்று சொல்லப்பட்டது. ஆனால் அக்சுவலாக 14 கோடிக்கு மேல் செலவு ஏற்பட்டது. அப்படியே 58–59-ல் என்றால் 11 கோடி எதிர்பார்க்கப்படுகிறது என்று சொல்லப்பட்டது. ஆனால் 14 கோடிக்கு மேலே செலவழிந்தது. 59–60-லும் என்றாலும் 14 கோடிக்குமேல் செலவாகும். இது நமக்கு சாதாரணமாகத் தெரிய வருகிறது. ஆனால் பிளானிங் கமிஷனுடைய சீலிங் 1? கோடி என்று

22nd April 1959] [Sri V. Sankaran]

இருப்பதனுல் இவர்களும் 11 கோடிக்கு கணக்குக் காட்டி இதைத் தயாரித்திருப்பதாகத் தெரிகிறது. இதைத் தயாரிப்பதற்கு அநேக இலாக்காக் களில் இருந்து பல மாதங்களாக மிகவும் சிரமப்பட்டு புள்ளி விவரங்களைத் தயாரிக்கப்படுகிறது இல்லூசாயாக. இம்மாஜினரியாக 11 கோடி என்று இங்கே விவாதம் செய்து பின்னர் அது அதிகப்படியாக செலவாகி இருப்பதாகச் சொல்லுவதில் அர்த்தமில்லை. என இவ்வாறு பல மாதங்கள் சிரமப்பட்டு இது போன்று imaginary figures தயார் செய்து, அதை விவாதித்து காலத்தை விரயம் செய்யவேண்டும். அதிகம் செலவாகும என்றுல் அதற்கு ஏற்ப ப்ளானிங் கமிஷன் அங்கீகாரத்தைப் பெற்றுவது 11 கோடியை விடக் கூடுதலாக இருந்தாலும் அதைக் குறிப்பிட்டு அதறகு அங்கீகாரம் பெறுவது சரியானது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் இதைத்தயாரிக்க எல்லாப் புள்ளி விவரங்களையும் சேகரித்து விடுகிறேும். அபபடிச் சேகரிததுவிட்டு இல்யூசிவாக–இம்மாஜினரியாக எதற்காக 11 கோடி என்று கொடுக்கவேண்டும். அதிகமாக ப்ளானிங் கமிஷன் லிமிட்டைத் தாண்டிப்போனுலும்கூட அதற்த அங்கீகாரத்தை அவர்களிடம் கேட்டு வாங்கிக்கொண்டு ஆக்சுவல் எக்ஸ்பெண்டிசரைக் குறிப்பிடுவது நன்ருக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆன்யுவல் பினுன்ஷியல் ஸ்டேட்மெண்டு 4–வது பாராவில் செலவு கணக்கில் 4 கோடியே 10 லட்சம் ரூபாய் 58–59-ல் சர்க்கார் கடனுக்கு வட்டியாக என்று போடப்பட்டிருக்கிறது. 59–60–ல் 4 கோடி 60 லட்சம என்று இருக்கிறது. அதற்கு லோன் 5¼% என்று காட்டப்பட்டிருக்கிறது. இந்த வட்டி விகிதம்—இதில் சர்க்காரே ஒரு மேஜர் அங்கம் வகிக்கும்போது அதிகப்பமயாக இருககிறது எனறு சொல்ல விரும்புகிறேன சாதாரண மாக பாங்கு வட்டியாக இருந்தாலும். சர்க்கார் வடடியாக இருந்தாலும் எனக்குக் தெரிந்து 4 அலலது 4½%க்கு மேல் கிடையாது. அப்படி இருக்க இங்கே 5¼% என்று அதிகமாகக் காட்டவேண்டியதில்லை. இநத வட்டி விகிதத்தைக் குறைவாகப் போட்டு இதில் கொஞ்சம பணம் கிடைத்தால் இதைக் கொணடு மின்சார தொழிலாளர்களுக்கும் வசதியும் சம்பள உயர்வும் அனுகூலம் செய்யலாம். கன்ஸுமர்சஸ்களுக்கு அனுகூலம் செய்யலாம். குறிபபாக குந்தா ப்ராஜெக்டை எடுத்துக்கொண்டால் வொர்க்கிங் ஸ்டாப்புக்கு ஸ்பெஷல் பே கொடுப்பது போல க்ளரிகல் ஸ்டாப்புக்குக் கொடுப்பது இல்லை என்கிற குறைபாடு இருக்கிறது. ஏற்கனவே Working staff க்காக Special Pay மூலம் Clerical staff க்கு மேற்கொண்டு 7.00 க்கு ஆகும். அதையும் உடனடியாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மின்சார போர்டின் முக்கிய நோக்கமே தொழிலாளர்க்கு அனுகூலம் செய்வது ஆகும். கன்ஸுமர்களுக்கு அனுகூலம் செய்வதாக வும் இருப்பதுதான். ஆகவே வட்டியைக் குறைத்தால் தொழிலாளர் களுக்கு அனுகூலம் செய்யலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக டாரிப் விகிதத்தைக்கூட மாற்றி அமைக்கப்போவதாக— சர்சார்ஜை எடுத்துவிடப்போவதாகச் சொல்லப்படுகிறது. விவசாயிகளுக்கு அனுகூலம் செய்யவேண்டும். இப்போது Domestic Consumption யூனிட் 3½ அணு என்று இருப்பதை—ஆங்கிலேயர்கள் காலத்திலிருந்திருக்க லாம்—இப்போது கவனித்துத் திருத்தி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது இருக்கும் நிலைமையில் ஏறளவு 5 நயா பைசாவிலிருந்து 7 நயாபைசாவாக அதிகரித்தால் இண்டிஸ்டிரியல் கனசம்ஷன் 33 பர்சண்ட், டொமஸ்டிக் கன்சம்ஷன் 17 பர்சண்ட் என்று அக்ரிகல்சரல் கன்சம்ஷன் 11 பர்சண்ட் ஓரளவு இண்டிஸ்ட்ரிக்குச் சற்று கட்டியாவது அக்ரிகல்சர் டாரிப் ரேட்டையும், டொமஸ்டிக் ரேட்டையும் கூடுமானவரை குறைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கன்ஸ்யூமர் இண்டஸ்ட்ரிக்கு ஒரு 2 நயாபைசா கூடுதலாகப் போட்டாகிலும் பரவாயில்லை. முக்கியமாக

டொமஸ்டிக் கன்ஸம்ப்ஷன் சம்பந்தமாகவும், அக்ரிகல்சர் கன்சஸ்ம்ஷன் சம்பந்தமாகவும் ஒரளவு சார்ஜ் விகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பரம்பிக்குளம் நீர்த்தேக்கத்தில் இருந்து ஒரு லட்ச கிலோவாட் மின்சக்தி உற்பத்தி செய்யப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. சமீபத்தில் கேரள அமைச்சர் கூறியதைப் பத்திரிகையில் பார்த்தேன். The bulk of the consumption will go to Kerala and Madras will get only a very little என்று அவர் கூறியிருக்கிறர். சர்க்கார் கூறுவது சரியா அல்லது கேரள அமைச்சர் கூறுவது சரியா என்பதை விளக்க வேண்டுகிறேன். "சென்னைக்கு ஒரு சிறிய அளவு தண்ணீர்தான் கிடைக்கும்" என்று கேரள அமைச்சர் சொல்லி இருக்கிறர். அதே முறையில் நமக்கு மின்சக்தியும் குறைந்து விடுமா என்பதை சர்க்கார் பரிசீலிக்க வேண்டும்.

போர்டு அமைத்திருப்பதில் அதிகமான "அபிஷியல்"கள் இருக்கிறர்கள். "டெக்னிகல் மென்" அதிகமாக இருந்தால் நல்லது. சீப் என்ஜினீயர் தலைவராக இருந்தால் அதிகமான அளவுக்கு "இம்ப்ரூவ் மேணட்" செய்ய வேண்டுமென்றும், தனிப்பட்ட முறையில் நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்று, அவருக்கு ஒரு ஆர்வம் ஏற்படும். அந்த முறையில் சீப் எஞ்சினீயரைத் தலைவராகப் போட்டு அதிகமான "டெக்னிகல் மென்களை" அந்தப் போர்டில் இடம்பெறச் செய்யவேண்டும். இதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பம்ப் செட்டுகள் பல ஆயிரக்கணக்கான ப்ளாக்குகளுக்கு இன்னும் தேவையான அளவு தரப்படாமல் இருக்கிறது. பம்ப் செட்டுகள் ஆயிரக் கணக்கில் அதிகத் தேவை இருந்து கொண்டிருக்கிறது. நமது ராஜ்யத்திலேயே எலக்ரிக்கல் மிஷினரி செய்யப்படும் என்று சீப் எஞ்சினீயர் ஒரு அறிக்கையில் கூறியிருக்கிறர். நமது ராஜ்ய அரசாங்கமே சீக்கிரத்தில் பம்ப் செட்கள், எலக்ட்ரிகல் கூட்ஸ் ஆகியவைகளைச் உற்பத்தி செய்து சப்ளை செய்யும் பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும். அதிகமான அளவுக்கு இவைகளை உற்பத்தி செய்து சப்ளை செய்யவேண்டும். விவசாயிகள் குறிப்பிட்ட அளவு நிலம் வைத்து இருக்கவேண்டும். குறிப்பிட்ட எண்ணிக்கை கிணறுகளுக்கு சேர்த்துத்தான் கரண்ட் கொடுக்கப்படும் என்ற விதிகளை பெருமளவு தளர்த்த வேண்டும். நான் இந்த பட்ஜெட்டை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI A. R. MARIMUTHU : கனம் சபாநாயகர் அவர்களே, மின்சாரத் துறையிலே நமது சர்க்கார் போட்ட திட்டத்தைவிட வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறர்கள் என்பதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த முறையில் இன்னும் வேகமாக முன்னேறவேண்டுமென்று ஆசையைக் கனம் மின்சார இலாகா அமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பது கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த வருஷத்தில் நாம் 3½ லட்சம் கிலோவாட் மின்சக்தியை உற்பத்தி செய்திருக்கிறோம். இன்னும் சில ஆண்டு காலத்தில் இது பல மடங்குகளாக விஸ்தரிக்க வேண்டுமென்ற கொள்கையோடு மின்சார இலாகா இயங்கி வருவதை நான் பாராட்டுகிறேன். இந்தமாதிரி மின்சாரத் துறை விஸ்தரிக்கப்படுவதன் மூலமாக நாடு தொழில் துறையில் நிச்சயமாக அபிவிருத்தி அடையும் என்ற எண்ணத்தில் மேலும் மேலும் இதில் அதிகக் கவனம் செலுத்தவேண்டுமென்று கனம் மின்சார இலாகா அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது 75 சதவிகிதம் மின்சாரத்தை தொழில் துறையிலும், விவசாயத்துறையிலும் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். இதே நிலையில் உற்பத்தி செய்யப்போகும் மின்சாரத்திலும் 75 சதவிகிதத்தை தொழில் துறையிலும், விவசாயத்துறையிலும் பயன்படுத்தும் முயற்சியை அரசாங்கம்.

22nd April 1959] [Sri A. R. Marimuthu]

மேற்கொள்ளவேண்டும். அப்படி அரசாங்கம் மேற்கொள்ளுமானுல் வரக்கூடிய மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் கிட்டத்தட்ட 8,9 லட்சம் கிலோவாட் சக்தியை உற்பத்தி செய்யும் நிலைமையில் இருப்போம் அது மட்டுமல்ல. அனுசக்தியிலிருந்து மின் சக்தியை உற்பத்தி செய்வதைப் பற்றி எடுத்துக்கொண்டுள்ள முயற்சியை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிருர்கள். சென்ற வருஷ உரையின்போதுகூட அமைச்சர் அவர்கள் இதைப்பற்றிச் சொன்னுர்கள். இந்த வருஷமும் அதைத்தான் கூறியிருககிருர்கள். அதில் எந்த அள்வுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறவில்லை. அடுத்த ஆண்டிலாவது "நாம் அதில் முன்னேற்றம் கண்டிருக்கிறேம். மத்திய அரசாங்கத்தின் அனுமதிபெற்று திட்டத்தை மேற்கொண்டிருக்கிறேம்" என்று அவர்கள் கூறுவார்களேயானுல் அது நம் எல்லோராலும் வரவேற்கத்தக்கதாக இருக்கும். அதிகப்படியாக மின்சாரத்தை உற்பத்தி செய்து 75 சத விகிதத்தை தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் உபயோகப்படுத்த வேண்டும். இன்றைக்கு இருக்கும் தொழில்துறை 3 மடங்குகளாகப் பெருகவேண்டும். அதற்குச் சர்க்காருடைய தொழில் கொள்கையில் மாற்றம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்கு மின்சார கட்டணத்தைக் குறைக்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். கடந்த இரண்டாண்டு காலமாக அதைப்பற்றி எடுத்துச்சொல்லியும் இப்பொழுதுதான் அதைப்பற்றி ஆலோசனை செய்கிறது. விவசாயிகள் குறைந்த வருமானம் உள்ளவர்கள். அவர்களுக்கு குறைந்த கட்டணச் சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தஞ்சை ஜில்லா நீர்ப்பாசன வசதியுள்ள ஜில்லா என்று கூறப்படுகிறது. ஒரத்தநாடு, அறந்தாங்கியில் பெரும்பகுதி நீர்ப்பாசன வசதியில்லாதிருக்கிறது. இந்த இடங்களில் எல்லாம் மின்சாரத்தை விஸ்தரிக்கும் பொறுப்பு தனிப்பட்ட கம்பெனியார்களிடம விடப்பட்டிருக்கிறது. அரசாங்கத்திடம் அந்தப் பொறுப்பு இல்லை. அங்கே ன் "டிரான்ஸ்மிஷலைன்" கிடையாது. கம்பெனியாரிடம் கேட்டால் ஹைடென்ஷன் லைன் கிடையாது என்கிருர்கள். கிராமங்களில்மி ன்சார விஸ்தரிப்புச்செய்ய முடிவதில்லை. ராஜாமடம், பேராவூரணி, ஒரத்தநாடு ஆகிய பகுதிகளில் "டிரான்ஸ்மிஷன் லைன்" ஏற்படுத்தி மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரசாங்கம் இந்தக் கம்பெனிகளின் விநியோகப் பொறுப்பை எடுத்துக் கொள்ளப் போகிருர்கள் என்ற நிலைமையில் கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு கொடுப்பதற்கு கம்பனிகள் தயங்குகிருர்கள். அவர்கள் அதில் அதிகம் அக்கரை செலுத்துவது இல்லை. ஆகவே, இப்பொழுதுள்ள நிலையிலேயே வைத்துக் கொண்டிருந்தால் போதும். இதறகு மேல் இதில் முதலீடு செய்ய வேண்டியதில்லை. அதாவது விநியோகப் பொறுப்பில் என்றும் அதற்குப் பதிலாக வேறு தொழிற்சாலைகளைத் தொடங்கலாமே என்றுதான் கமபனிக் காரர்கள் கருதுகிருர்கள். ஆகவே, இந்த சந்தர்ப்பத்தில் நான் தெவிரிததுக் கொள்ளுகிறேன், கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் விநியோகப் பொறுப்பை அரசாங்கமே நிச்சயமாக, கண்டிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக் கொள்ளவில்லை என்ருல் அநேக இடங்களுக் மின்சார விஸ்தரிப்பு கிடைப்பது தடைபடும். அதனுல் பல கிராமங் ளுக்கு மின்சர வசதி கிடைக்காமல் போய்விடக் கூடும். குறிப்பாக தஞ்சை ஜில்லாவிலும் திருச்சி ஜில்லாவிலும் மின்சார விநியோகப் பொறுப்பு சேஷசாயி பிரதர்ஸ் பொறுப்பில் இருக்கிறது. அவர்கள் அதிகப்படியான இடங்களுக்கு மின்சாரம் விஸ்தரிப்பது கம்மியாக இருக்கிறது. அவர்களிடம் நான் பேசியபோது அவர்கள் சொல்கிருர்கள். எங்களிடம் பணம் கிடையாது, சர்க்கார் கடன் கொடுத்தால் ஒழிய நாங்கள் ஒன்றும் செய்யப் போவதில்லை. இந்தப் பொறுப்பை அரசாங்கம் எடுத்துக் கொண்டால் நாங்கள்சந்தோஷப்படுவோம். 4-30 p.m.

[22nd April 1959 [Sri A. R. Marimuthu]

நாங்கள் நெய்வேலியில் ஒரு தொழிற்சாலை ஆரம்பித்திருக்கிறோம். அதற்குப் பணம் எங்களுக்குத் தேவையாய் இருக்கிறது என்று சொல்கிறார்கள்; அரசாங்கம் சொல்கிறது, நாங்கள் அவர்களுக்கு கடன் உதவி அளிக்க சென்ட்ரல் கவர்ன்மெண்டை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம், அவர்கள் கொடுத்தால் நாங்கள் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அரசாங்கம் கண்டிப்பாக கம்பனிகளிடம் இருந்து விநியோகப் பொறுப்பை தாங்களே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபற்றி ஆலோசிக்க வேண்டும். அப்படி ஆலோசிக்கும்போது கம்பனிகள் 88 லட்சம் ரூபாய் கடன் கேட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அந்த ரூபாயை சர்க்கார் கொடுக்க வேண்டும், இடைக்காலத்தில் மின்சார போர்டிற்கு மாகாண சர்க்கார் பத்து லட்சம் ரூபாய் கடன் கொடுக்கப் போவதாக அறிகிறோம். சர்க்கார் கம்பனிகளை எடுத்துக் கொள்ளும்போது நஷ்டஈடு தொகையிலிருந்து அந்தக் கடன் தொகையை குறைத்துக் கொள்ளலாம். அதுமட்டுமல்ல. கம்பனிகள் 15 சதவிகிதம் காரண்டீ கேட்கிறார்கள். ஆனால் அரசாங்கம் 10 சதவிகிதம்தான் கேட்கிறார்கள். சர்க்கார் என்றால் மக்கள் தேவையை முன்னிட்டு குறைத்துக் கொடுக்கலாம். ஆனால் கம்பெனிகள் லாபத்திற்காகத்தான் இருக்கிறார்கள். ஆகவேதான் அவர்கள் 15 சதவிகிதம் கேட்கிறார்கள். அதோடு அரசாங்கத்திலிருந்து கிடைக்கும் கடன் தொகையைப் பொறுத்தும்தான் விஸ்தரிக்க முடியும் என்றும் கம்பனிகள் சொல்கிறார்கள். ஆகவே, நான் சொல்வது கம்பனிகளை சர்க்காரே எடுத்துக் கொள்ளுங்கள். இடைக்காலத்தில் கம்பனிகள் கேட்டிருக்கும் கடன் தொகைகளையும் கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டு நான் குறிப்பிட்ட எச். டி. லைன் ஒரத்தநாடு, மன்னார்குடி கந்தர்வ கோட்டை வழியும், ராஜாமடம், பேராவூரணி வழி அரந்தாங்கி வரையிலும் மின்சாரம் அவசியம் போட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

SRI T. VELUCHAMI.—கனம் சபாநாயகர் அவர்களே, இன்று முற்பகலில் நமது ராஜ்யத்திலுள்ள புதிய மின்சார அபிவிருத்தி திட்டமான குந்தா மின்சாரத் திட்டத்தைப் போய்ப் பார்த்து விட்டு அதைத் தொடர்ந்து உடனே மின்சார போர்ட் மானியத்தின் மீது பேசும்போது ஒரு தனி பொருத்தத்தோடு பேச முடிகிறது. இந்த நல்ல காரியத்திற்காக அமைச்சர் அவர்களையும் நான் பாராட்டுகிறேன். இருந்தபோதிலும் நமது நாட்டின் முக்கியமான அபிவிருத்தி அம்சமான இந்த மின்சாரத்தை வேறு பல வகைகளிலும் அபிவிருத்தி செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்று ரூலிங்பார்டி மெம்பர்கள் யோசனை கூறினார்கள். ஹைட்ரோ எலெக்ட்ரிக் ஸ்கீமிற்கு என்ன செலவாகுமோ அதே செலவில் தர்மல் ஸ்டேஷன் நிறுவி அதன் மூலம் ஜில்லா தோறும் ஆங்காங்கே மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமென்று கூறினார்கள். அதைப் பரிசீலனை செய்து அதன் மூலம் மின்சார உற்பத்தியை உயர்த்துவதற்குள்ள வாய்ப்பை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தினால் அவர்களை அடுத்த ஆண்டில் அதற்காக அதிகமாகப் பாராட்ட முடியும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக பல்வேறு இலாகா மான்யத்தின் மீது பேசும்போது எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் அதிலுள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்வது வழக்கம். மின்சாரத்தை விவசாய அபிவிருத்திக்காக உபயோகப்படுத்துவது அவசியம். ஆனால் விவசாய அபிவிருத்திக்காக மின்சாரம் வினியோகம் செய்யப்படும் முறை விவசாயிகளுக்கு உற்சாகமூட்டுவதாக யில்லை என்பதை நான் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நமது நாட்டிலுள்ள விவசாயிகள் சாதாரணமாக எளிய நிலைமையில் இருப்பவர்கள்தான். என் ஜில்லாவில் பலர் பம்ப் செட் கனக்ஷன்கள் வாங்கியிருக்கிறார்கள். ஐந்தாறு வருடங்கள் வரையில் அவர்கள் பம்ப் செட் மாட்டக்கூடிய பொருளாதார நிலைமைக்கு வளரவில்லை. இந்த நிலைமையிலிருந்தே நம் நாட்டு விவசாயிகள் பொருளாதாரத் துறையில் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள் என்பது தெளிவாக விளங்கும். புதிதாக பம்ப் செட்கள் மாட்டவேண்டுமென்று சொன்னால் ஒரு ஹார்ஸ் பவருக்கு

22nd April 1959] [Sri T. Veluchami]

50 ரூபாய் கொடுப்பதாக காரண்டி கொடுத்தால்தான் கொடுக்க முடியும் என்ற நிலையில் நமது பாலிஸி இருக்கிறது அப்படி 50 ரூபாய் கொடுக்கக் கூடிய நிலையில் நமது விவசாயிகள் இருக்கிறார்களா என்று பார்ப்போமே யானால், சாதாரணமாக ஒரு விவசாயி அவனது கிணற்றில் பம்ப் செட் எதற் காக வைக்க வேண்டுமென்று விரும்புகிறான் என்றால், முதலில் குளத்து நீரை வைத்து பயிர் செய்து விட்டு கடைசியில் மழையில்லாத காரணத்தினால் பயிர்கள் விளைவாகாமல் வாடி வதங்கி கருகிப் போகும் நிலைமைக்கு வந் தால் அந்தப் பயிரைப் பாதுகாப்பதற்காக கொஞ்ச நாட்கள் பம்ப் செட்டை வைத்து உபயோகப்படுத்துகிறான். அதற்கு அடுத்தாற்போல் எதிர்பாராத முறையில் அடுத்த ஆப் சீஸனில் தண்ணீர் வந்து விட்டால் அந்த சமயத்தில் மின்சாரம தேவை என்ற நிலைமை இருக்காது. இந்த நிலைமையில் பம்ப் செட் ஓட்டினாலும் ஓட்டாவிட்டாலும் ஒரு ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று விதி இருந்தால் அது விவசாயிகளை பயம் காட் டக்கூடிய நிலையாகத்தானே இருக்க முடியம். அப்படிச் செய்யும்போது விவசாயிகள் என்ன கருதுகிறார்கள் என்று நினைத்தால் சாமான்களை வைத்துக்கொண்டு விலை கேட்டால் கிராக்கி செய்யும் பிளாக் மார்க்கெட் வியாபாரியைப் போலத்தான் மக்கள் நம்மைக் கருதுகிறார்கள் என்பதை நான் அமைச்சர் அவர்களுக்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இநத மினிமம் காரண்டி விஷயத்தில் அமைச்சர் அவர்கள் நன்கு ஆலோசித்து, பரிசீலனை செய்து ஒரு ஹார்ஸ் பவருக்கு 10 ரூபாய் வரை குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மினிமம் காரண்டியைக் குறைத்தால் எலக்டிரிசிடி போர்டில் இன்வஸ்ட் செய்யும் பணத்திற்கு வட்டி அதனால் கட்டாது என்று சொல்லலாம்: நஷ்டம் ஏற்படும் என்றும் நினைக்கலாம். நஷ்ட மேற்படத்தான் செய்யும். இந்த நஷ்டத்தை வேறு முறையில் ஈடு கட்டவேண்டும். அப்படிச் செய்தால்தான் நாம் உணவு உற்பத்தியைப் பெருக்கும் விஷயத்தில் விவசாயிகளை நாம் 'என்கரேஜ்' செய் தவர்களாவோம். அப்படிச் செய்வதினால் நமது உற்பத்தியும் அதிகமாக ஏதுவாகும். ஆகவே, இந்த மினிமம் காரண்டியை பத்து ரூபாயாகக் குறைக்கவேண்டுமென்று நான் மீண்டும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தாற்போல். புதிதாகப் போடக்கூடிய "நியூ கன்ஸ்ட்ரக் ஷன் ஸகீம்ஸ்" மிகுந்த சுணக்கம் ஏற்படுகிறது. எனது பிராந்தியத்தில் நெல்லை ஜில்லாவில் தென்காசி தாலூகாவில் உள்ள வீரகேரளம்புத்தூர் எல்லையில் வீராணத்திற்கு ஒரு ஸ்கீம் இருக்கிறது. அது சம்பந்தமாக பல கேள்விகள் போட்டும் அமைச்சர் அவர்கள் "சீக்கிரமாகச் செய்கிறோம்" எனறு பதிலளித்துள்ளார். அவருக்கு ஞாபகம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் எனக்கு ஒன்றிரண்டு விஷயங்கள்தான் இருப்பதால் அது என் ஞாபகத்தில் இருக்கிறது, அது ஐந்து வருடங்களாக பெண்டிங்கில் இருக்கிறது. இது இன் னும் நடைபெறவில்லை. ஊத்துமலை ஸ்கீம் இருக்கிறது அதாவது உக்கிரன் கோட்டை—ஊத்துமலை ஸ்கீம் இருக்கிறது. சங்கரன்கோவில் தாலூகாவில் வெள்ளாங்குளம் ஸ்கீம் இருக்கிறது. இந்த மூன்று ஸ்கீம்களை விரைவில் நிறைவேற்றித் தருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டு மென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் கன்ஸ்ட்ரக்ஷன் விஷயத்தில் காலதாமதம் ஏற்படுவதைக் குறைப்பதற்கு வேண்டிய வழிவகைகள் காண வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு குறைபாடு என்னவென்றால், தொழில்களுக்கு மின்சார சப்ளை செய்யும் விஷயத்தில் தொழிற்சாலைகளுக்கு ஒரு பெரிய இஞ்சல் நிலவி வருகிறது. அதாவது இஷ்டப்பட்ட நேரத்திலெல்லாம் முன் அறிவிப்பு இல் லாமல் கரண்டை நிறுத்தி விடுகிறார்கள். எக்ரிமெண்டில் முன் அறிவிப்பு செய்துவிட்டுத்தான் கரெண்டை நிறுத்த வேண்டுமென்று விதி இருக்கிறது. அப்படி இருந்தும், எங்களுடைய "ஆப்-நாளா" கிய புதன் கிழமை தவிர மற்ற தினங்களிலும்கூட அடிக்கடி திடீரென்று கரெண்டை நிறுத்திவிடு கிறார்கள். இது தென்காசி பகுதியில் சர்வ சாதாரணமாக நடந்து வருகிறது.

சட்டப்படி முன்னால் வந்து அறிவித்திருக்க வேண்டும் கையெழுத்து வாங்க வேண்டுமென்று இருந்தும் கூட திடீரென்று கரெண்டை நிறுத்திவிடுகிறார்கள். இதனால் விவசாயிகளுக்கும் தொழிற்சாலை அதிபாகளுக்கும் மிகுந்த இடையூறும் நஷ்டமும் ஏற்படுகிறது. பம்பு செட்டு வைத்திருப்பவர்கள், மில் தொழிற்சாலை முதலியன வைத்திருப்பவர்கள் இவர்களுக்கு முன் அறிவிப்பு கொடுத்துவிட்டுத்தான் கரெண்டை நிறுத்த வேண்டும் என்று விதியில் கண்டிப்பு செய்ய வேண்டும். கன்ஸ்யூமரை காணவில்லை என்று சாக்கு போக்கு சொல்லி சிப்பந்திகள் தப்பித்துக் கொள்ளாமலிருக்க கன்ஸ்யூமர் இல்லாவிட்டால் அவர் கட்டிடத்தில் ஷி நோட்டீஸ்ஸை யாவது ஒட்டிவிட்டுப் போவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கரெண்டு நிறுத்துவதற்கு முன்னால் இம்மாதிரி நோட்டீஸ் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால் அது விவசாயிகளுக்கும் தொழிற்சாலைக்காரர்களுக்கும் பொதுமக்களுக்கும் மிகவும் சௌகரியமாக இருக்கும்.

மற்றொரு விஷயம் மின்சார சம்பந்தமான விஷயத்தில் எங்கள் பகுதி மிகவும் பின் தங்கிய பகுதி. அந்தப் பகுதியின் அபிவிருத்தி, பம்மையார் திட்டத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. பம்மையார் திட்டம் நிறைவருவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆனாலும், அதற்கு முன்பாக எங்களுக்கு அரை வயிறு நிறையக்கூடிய நிலைமையில் பல சலுகைகள் கொடுக்க வேண்டும். இப்போதுகூட இந்த பிரதேசததை பஞ்சப் பிரதேசம் என்று பிரகடனம் செய்திருககிறார்கள். இம்மாதிரியான கஷ்டப்பட்ட பிராந்தியமாக இருக்கிறபடியால் மற்ற இடங்களில் அந்த மினிமம் காரண்டியை குறைக்க முடியா விட்டாலும், எங்கள் பகுதியிலாவது கண்டிப்பாக குறைக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன. மின்சாரத்தை மேலும் மேலும் அபிவிருத்தி செய்வதற்கு மின்சார அமைச்சர் அவர்களுக்கு ஊக்கத்தையும், ஆக்கத்தையும், நல்ல திறமையையும் அளிக்கவேண்டுமென்று ஆண்டவனை பிரார்த்தித்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI:—கனம் சபாநாயகர் அவர்களே, சென்னை மாநில மின்சார போர்டின் 1959-60–ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பற்றி இங்கு ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். மேல் நாடுகளோடு நம் நாட்டை ஒப்பிட்டுப்பார்ப்போமானால் நாம் மிகவும் பின் தங்கியிருக்கிறோம் என்று தான் சொல்லவேண்டியிருக்கிறது. மேல் நாடுகளில் ஒரு தனி நபர் 2,000 யூனிட் முதல் 4,000 யூனிட் வரையில் உபயோகப்படுத்துகிறார் என்றால் இங்கு தனி நபருக்கு 36 யூனிட் தான் கிடைக்கிறது. அது கூட கிடைக்காத பல கோடி மக்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். நாம் முன்னேறுவதற்கு இன்னும் எத்தனையோ கட்டங்கள் கடக்கவேண்டியிருக்கிறது. இருந்தாலும் கூட, உள்ளதைக்கொண்டு நல்லது செய்துவருகின்ற ஒரு துறை இருக்கிறது என்றால், அது மின்சாரத் துறை தான் நம் மாகாணத்தைப் பொறுத்த மட்டில் என்று சொன்னால் அது மிகையாகாது. இருப்பதை வைத்துக்கொண்டு மின்சார துறையில் மக்களுக்கு எவ்வளவு நன்மை செய்ய முடியுமோ அவ்வளவு நன்மை செய்து கொடுப்பதற்கு மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டுமென்று அந்த அளவுக்கு ஆர்வமும், ஊக்கமும், திறமையும் கொண்டுள்ள மின்சார இலாகாவின் அதிகாரிகளை நாம் போற்ற வேண்டும். போற்றினால் தான் அவர்களுக்கு ஆர்வம் இருக்குமே ஒழிய, போற்றாவிட்டால், நல்ல வேலை செய்கிறவர்களுக்கு மேலும் ஆர்வம் இருக்காது. அவ்வளவு ஊக்கம் அவர்களுக்கு இருப்பதினால்தான் இருப்பதை வைத்துக்கொண்டு நல்ல முறையில் அது மக்களுக்கு பயன்படும்படி ஏற்பாடு செய்கிறார்கள். புள்ளி விவரங்களைப் பார்த்தால் இன்னும் கொஞ்சம் நாளில் உணவுப் பிரச்சனை போன்று, மின்சாரமும் பெரிய பற்றாக்குறை பிரச்னையாகப் போய்விடுமோ என்று அஞ்சவேண்டியிருககிறது. இன்றைக்கு பார்த்தால் சென்னை மாகாணத்தில் 10 லட்சம் கிலோவாட் உற்பத்தி செய்யலாம். 1970-71ல்

22nd April 1959] [Srimathi T. N. Anandanayaki]

நமக்கு 12 லட்சம் கிலோவாட் மின்சாரம் தேவைப்படும் என்று சொல்லப் படுகிறது. ஆகையால் இன்னும் சில ஆண்டுகளில் மின்சாரத்திற்கு பற்ருக் குறை வந்துவிடுமோ என்று பார்க்கும்பொழுது, மின்சாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு இன்னும் புது வழிகளை கண்டு பிடிக்கவேண்டும். தமிழகத்தில் தண்ணீர் நிறைந்த ஆறுகள மிகக் குறைவு. அந்த எந்த அளவுககு மின்சார உற்பத்தி செய்வதற்கு பயன்படுதத முடியுமோ அந்த அளவுக்கு பயன் படுத்திக்கொணடிருககிறோம். அது போதாது அதேபோன்று தெர்மல் ஸ்டேஷன் ஏற்படுத்தலாம் என்று சொன்னால் நிலக்கரியை பீகாரிலிருந்தும். ஹைதராபாத்திலிருந்தும் கொண்டுவரக்கூடிய சங்கடம் இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்பொழுது ஒரே ஒரு ஆசைதான் தட்டுகிறது. அணு சக்தியின் மூலம் 5 லட்சம் கிலோவாட் உற்பத்தி செய் யலாம் என்று கருதப்படுகிறது. அந்த அணு சக்தி நிலையத்தையாவது தமிழகத்தில் இன்னும் இரண்டு ஆண்டிறகுள் ஏற்படுத்தி சமாளிக்க முடியுமா எனபதை மின்சார அமைச்சர் தீவிரமாக ஆலோசித்து, அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிட்டால் இப் பொழுது மின்சார இலாகாவிற்கு இருக்கிற போற்றல் எல்லாம் தூற்றலாக மாறிவிடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அணு சக்தி நிலையத்தை தமிழகத்தில் ஆரம்பிக்கவேண்டுமென்று மத்திய சர்க் காரிடம் வற்புறுத்தவேணடும். தமிழர்கள் தான் அறிவிலும, ஆற்றலி லும் உயர்ந்தவர்கள் என்று உலகமே ஒத்துக்கொண்டிருககிறது. தமிழ கத்தில் அந்த நிலையத்தை ஏற்படுத்தினல், தமிழர்கள் தங்கள் ஆற்றலினு லும் திறமையினுலும் அதை வெற்றிகரமாக நடத்திககாட்ட முடியும். குந் தாவின் நிலைமையை பார்க்கும்பொழுது அந்நிய நாட்டு என்ஜினியர்களைவிட தமிழகத்தின் என்ஜினியர்கள் மிகச் சிறந்தவர்களாக இருக்கின்றர்களஎன்ப தாகத் தெரிகிறது. எந்த மகாணத்திலும் தமிழகத்திலுள்ள என்ஜினயர் கள் தான் அதிகமாகத தேவைப்படுகிறர்கள். மற்ற மாகாணங்கள் தமிழ கத்திலுள்ள என்ஜினியர்களைத்தான கேட்கிறர்கள், தமிழகத்தில்தான் திறமையான என்ஜினியர்கள் உற்பத்தி செய்யப்படுகிறர்கள். தமிழ் நாட்டி லுள்ள என்ஜினியபகள வெளியே போக விரும்பினல, அவர்கள் போவ தறகு தடங்கல் செய்கிறர்கள் அதிகாரிகள். மின்சார இலாகாவில்மட்டுமல்ல, ஏனைய இலாக்காக்களை எடுத்துக்கொண்டாலும் சரி, கல்வி இலாகாவாக இருந்தாலும் சரி, எந்த இலாகாவாக இருந்தாலும் சரி, தமிழகத் திலுள்ளவர்சள் பம்பாய், மேற்கு வங்காளம், டெல்லி ஆகிய மகாணங்களுக்கு நல்ல சம்பளத்தில் போக விரும்பினல், அவர்களை மேல் அதிகாரிகள் அனுப்புவது கிடையாது. டாக்டர்கள் உள்பட இப்படித்தான். மேல் நாடுகளுக்கும் அனுப்புவதை தடை செய்கிறர்கள். அதற்கு பாரின் எக்ஸ்சேஞ்ச், அது இது என்று சொல்லுகிறர்கள். அந்நிய நாட்டு ஸ்காலர்ஷிப் கிடைத்காலும் அனுப்புவது கிடையாது. ஒருவர் இறந்து விட்டால். அவா இடததில் வேறு ஒருவர் வேலை பார்ப்பது இல்லையா? ஒருவர் மேல் படிப்பு படித்து நல்ல அறிவு பெறவேண்டுமென்ருல், தமிழ் மகாணத் திலிருந்து வேறு மகாணங்களுக்கு போக வேண்டுமென்ருல், நல்ல சம்பளம் பெற்று நல்ல நிலையில் இருக்கவேண்டுமென்று சொன்னுல் அவரை அனுப் புவது கிடையாது. தமிழகத்து என்ஜினியர்களால், வெளி மகாணத்திற்கு நல்ல நன்மை ஏற்படுவதாக இருந்தாலும், அவகளை அனுப்புவது கிடை யாது. வெளி நாடுகளுக்கு அனுப்புவதில் சங்கடம் இருந்தாலும், உள் நாட் டிலேயே வெளி மகாணங்களுக்குக் கூட அனுப்புவது கிடையாது. அணு சக்தி நிலையம் அடுத்த ஆண்டிலேயே தழகத்தில் ஏற்படுவதற்கு ஆற்ற லோடு, அறிவோடும் கனம் அமைச்சர் அவர்கள் வேலை செய்யவேண்டும். கடிதப் போக்குவரத்தில் ஒன்றும் சீக்கிரம் நடக்காது. அதிக காலதாமதம் ஆகும். மின்சார அமைச்சர் அவர்கள் நேரிடைய க டெல்லிக்குச் சென்று அல்லது ஒரு தூது கோஷ்டி சென்று, டெல்லியிலேயே அமர்ந்து, அணு சக்தி நிலைத்யதை தமிழகத்திற்கு வாங்கிவரவேண்டும். அது வரையில் மின்சார இலாக்காவை வேறு அமைச்சர் வேண்டுமானுலும் கவனித்துக்

[Srimathi T. N. Anandanayaki] [22nd April 1959

கொள்ளலாம். அந்த அளவுக்கு தீவிரமாக ஏற்பாடு செய்வேண்டும். அப்பொழுதுதான் 1960-61-க்கு மேல் தாண்டுகின்ற கட்டங்களைதான் முடியும். நம்முடைய என்ஜினியர்கள் அதை வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள்.

மக்களுக்கு லைட் போட்டுக் கொடுத்திருக்கிறோம். சென்னை நகரத்திலும் சரி. மற்ற இடங்களிலும் சரி நடைமுறையில் உள்ள கஷ்டததை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தெருக்களுக்கு மின்சார விளக்குகள் போட்டிருக்கிறோம், ஆனால் வெளிச்சம் போதவில்லை. சென்னை நகரத்தில் வீதி விளக்குகள் மெழுகுவத்தி வெளிச்சம் போல் தான இருக்கிறது. மண்ணெண்ணெ ஊற்றி, திரி போட்டு, லைட்டை துடைத்து ஏற்றவேண்டிய கஷ்டம் பெண்களுக்கு இல்லாமல், ஸ்விட்சைப் போட்டவுடன் விளக்கு எறியக் கூடிய அளவுக்கு வீடுகளுக்கு மின்சார வசதி செய்துகொடுததிருந்தாலும், இன்னும் பிரகாசமான விளக்குகள் போட்டுக்கொடுக்கவேண்டும், அதறகு வேண்டிய அளவு மின்சாரம் நகர்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். நகர்ப்புற மக்கள் வீடுகளுக்கு போடுகின்ற விளக்குகளுக்கு தேவையான மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு 3½ அணா கொடுக்கவேண்டியிருக்கிறது.

இதை சற்றுக் குறைத்துவிட்டால் நலமாக இருக்கும். ஏனென்றால் சாதாரணமாக நடுத்தரமான ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு 60, 65 யூனிட் ஆகிவிடுகிறது. இதன் மூலம் 18 ரூபாய், 20 ரூபாய் கட்டணம் செலுத்தவேண்டியிருக்கிறது. ஆகவே இதைக் குறைப்பதற்கு ஏதாவது வழி செய்யமுடியுமா என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்த கட்டணத்தை செலுத்துவதற்காக க்யூ-வில் போய் பல மணி நேரம் காதது நிற்கவேண்டியிருக்கிறது. இவ்விதம் நின்றாலும்கூட சில சமயங்களில் பணம் வாங்குகின்ற ஆபீஸர் வெளியே போய்விட்டால் பணம் அடைக்க முடியாத நிலை எற்பட்டு விடுகிறது. சிலவேலைகளில் குறிப்பிட்ட தேதிக்குள் பணம் செலுத்த வேண்டும், இல்லாவிட்டால் கனக்ஷனை வடுத்துவிடுவோம் என்று சிவப்பு நோட்டீஸ் கொடுத்திருப்பார்கள். அதன்படி பணம் செலுத்தலாம் என்றால் க்யூ-வில் அதிக நேரம் நிற்கவேண்டியிருக்கிறது. இதனால் சென்னையிலுள்ள மக்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்படுகிறது. சென்னையில் அன்றாடம் வாழ்க்கை நடத்துபவர்களுக்கு சென்னை நகரத்தில் நேரம் கிடைப்பதே பெரிய காரியம். சென்னையிலிருக்கிறவர்கள் அதிகம் பேர்களும் தங்கள் வாழ்க்கையை மெஷின் மாதிரி ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையில் இருக்கின்றவர்களுக்கு இந்த பில் அடைபபதறகாக ஒரு நாள் பூராவும் க்யூ-வில் போய் நிற்பது என்றால் அது மிகவும் கஷ்டமான காரியம். ஆகவே இதற்கு ஒரு வழி செயயலாம் என்று தோன்றுகிறது. அதாவது வீடுகளில் மீட்டர் கணக்கு எடுப்பதற்கு மீட்டர் ரீடர் வருகிறார். அவரே இந்த பில்-கட்டணத்தையும் வசூலிப்பதற்கு ஏதாவது வழி செய்து கொடுக்க முடியுமா என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மீட்டர் எடுக்க வருபவர்களுக்கு ஒவ்வொரு பகுதியையும் பிரித்துக் கொடுத்து அந்தந்த பகுதியில் இருக்கும் வீடுகளிலுள்ள பில் கட்டணத்தை வசூலிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்துவிட்டால் க்யூவில் நின்று பணம் கட்டவேண்டிய தொல்லை இருக்காது. சென்னை கார்ப்பரேஷனில் இவ்விதம் பல பில் கலெக்டர்களை நியமித்து பணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. அதே முறையில் இதிலும பணம் வசூல் செய்ய முடியுமா என்பதைப்பற்றி ஆலேசித்துப் பார்க்க வேண்டும். இதற்கு என்று தனியாக ஆட்களை நியமிக்க வேண்டிய அவசியமில்லை. இப்போது மீட்டர் கணக்கு பார்ப்பவர்களையே பில் கலெக்டர்-கம்-மீட்டர் ரீடர் என்று நியமித்து

22nd April 1959] [Srimathi T. N. Anandanayaki]

அவர்களைக்கொண்டே இந்த பணத்தை வசூலிப்பதற்கு ஏற்பாடு செய்தால் மிகவும் நலமாக இருக்கும். இவ்விதம் வசூல் செய்வதாக இருந்தால் பணமும் சீக்கிரமாகக் கிடைக்கும். பணம் இருக்கிற சமயத்தில் கேட்டால் உடனே கொடுத்துவிடுவார்கள். பின்னால் பணம் சீக்கிரமாக அடைக்க வேண்டும் என்று நோட்டீஸ் அனுப்பக்கூடிய நிலைமையும் ஏற்படாது. ஆகவே இதற்கு ஏதாவது ஒரு புது முறையைக் கொண்டுவர முடியுமா என்பதைப்பற்றி அமைசசர் அவர்கள் ஆலோசித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது தவிர, நமது ராஜ்யத்தில் இன்னும் எட்டு ஏஜென்ஸிகள் இருப்பதாகத் தெரிகிறது இன்னும் சில இடங்களில் முனிஸிபாலிட்டியின் கீழ் இருந்துவருவதாகவும் தெரிகிறது. இவைகளை எல்லாம் அரசாங்கம் ஏற்றெடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இவ்விதம் தனிப்பட்டவர்களின் கையில் இருப்பதால் ஜனங்களுக்கு பல தொல்லைகள் ஏற்படுகின்றன. அதாவது, ஒரே கிராமத்தில் இரண்டு மைல் தூரத்திற்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கும். இரண்டு மைலுக்கு அப்பால் இருக்கும் இடத்திற்கு மின்சாரம் விஸ்தரித்துக் கொடுத்திருக்க மாட்டார்கள். ஜனங்கள் இதைப்பார்த்துவிட்டு அரசாங்கம் பாரபட்சமாக நடந்து கொள்கிறது என்றுதான் எண்ணிக்கொள்வார்கள். இதிலிருக்கின்ற கஷ்டங்களை அவர்கள் உணர்ந்துகொள்ள முடியாது. ஆகவே, இந்த ஏஜென்ஸிகளை எல்லாம் அரசாங்கம் எடுத்துவிட வேண்டும். இதற்கு 88 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்று செல்லப்பட்டது. இந்தப் பணத்திற்கு வேறு விழியில்லாவிட்டால் ஒரு கோடியோ அல்லது இரண்டு கோடியோ பப்ளிக் லோன் எழுப்பினால் சீக்கிரமாக இந்தப் பணம் கிடைத்துவிடும். இது தவிர, இந்த ஏஜென்ஸி ஏரியாவில்கூட அரசாங்கத் திட்டத்தின்கீழ் மின்சாரத்தை விஸ்தரிப்பதற்கு இடம் இருக்கிறது என்று போன தடவை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது இப்போது எந்த கதியில் இருக்கிறது என்பதையும் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இவ்விதம் தனிப்பட்ட முறையில் இருக்கின்ற ஏஜெண்ஸிகளை எல்லாம் எடுத்து மின்சாரத்தை விஸ்தரித்தால்தான் நமது ராஜ்யத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் 'மின்சார' வசதி கிடைக்கும். நமது ராஜ்யத்தில் 20 ஆயிரம் கிராமங்கள் இருக்கின்றன. இதில் இப்போது 7,730 கிராமங்களுக்கு மின்சார வசதி செய்துகொடுத்திருப்பதாக தெரிகிறது. இதன்படி பார்த்தாலும் இதுவரையிலும் பாதி கிராமங்களுக்குக்கூட மின்சார வசதி செய்துகொடுக்கவில்லை. இந்த நிலைமையில் போய்க் கொண்டிருந்தால் எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றால் இன்னும் அதிக நாளாகும் என்றே தோன்றுகிறது. ஆகவே இதை துரிதப்படுத்த வேண்டிய முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். மின்சார விஸ்தரிப்பைப் பொறுத்தமட்டில் அதிலும் ரூரல் எலக்ட்ரிபிக்கேஷனைப் பொறுத்த அளவில் நாம் முதல்படியில் இருக்கிறோம். எத்தனையோ தடைகள் இருந்தபோதிலும் நாம் மின்சாரத்தை விஸ்தரித்துக் கொடுப்பதற்காக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது. அதோடு தொழில்கள் வளர்வதற்கும் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால் அதிகமான அளவில் இரும்பும் (ஸ்டீல்), மின்சாரமும் தேவை. நாம் இரும்பும் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம், மின்சாரத்தையும் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறோம். இவ்விதம் மின்சாரத்தை அதிகமாக பயன்படுத்தி தொழிலைப் பெருக்க வேண்டும். இவ்விதம் தொழில்கள் அதிகமாகப் பெருக்கினால் நம்முடைய நாட்டின் பொருளாதாரம் மேம்பாடு அடையும், பொருளாதாரம் மேம்பாடு அடைந்தால் அந்த நாட்டிலுள்ள மக்கள் கஷ்டமின்றி வாழ முடியும். ஆகவே கனம் ராமசாமி அவர்கள் சொன்னது மாதிரி தொழிலுக்கு அதிகமாக மின்சாரத்தை கொடுத்தால் அதன் மூலம்

[Srimathi T. N. Anandanayaki] [22nd April 1959

தொழில்கள் பெருகி, நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்கமுடியும். இதற்கு மறைமுகமாக உதவுவதாக இருக்கும். ஆகவே இதில் அமைச்சர் இன்னும் அதிக அக்கறை காட்டி, கிராமப்புறங்களில் தொழில்களுக்கும் அதிகமான அளவில் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும. இப்போதுள்ள கட்டணத்தில் கொடுக்க முடியாது என்றிருந் தாலும்கூட, முதலாவது கொடுத்துவிட்டு பின்னால் வேண்டுமானால் கட்டணத்தை கட்டிக்கொள்ளலாம் என்பதையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளுடைய கஷ்டத்தைப்பற்றி பலர் இங்கு எடுத்துச் சொன்னார்கள். அதில் குறிப்பாக ஸ்பெஷல் கியாரண்டி முறையை ரத்து செய்துவிட்டதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றியும் தெரிவித்துக்கொள்கிறோம். இப்போது இருக்கின்ற நிலைமையில் இன்னும் கூடுதல் அக்கரை செலுத்தி நாட்டிலுள்ள எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்துகொடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

4-55 p.m MR. SPEAKER : இந்த சபையை நாளை பகல் 1 மணி வரை ஒத்தி வைத்திருக்கிறேன்.

The House then adjourned.